குயில்களும் இளவேனில்களும்

முருகு சுந்தரம்

கவிஞர் முருகுசுந்தரம்

குயில்களும் இளவேனில்களும்

மீனா புத்தக நிலையம்
20-B/2, மூன்றாவது தெரு
அபிராமபுரம் ☉ சென்னை - 600 018

குயில்களும்
இளவேனில்களும்

▷ ஆசிரியர் : முருகுசுந்தரம்

▷ முதற் பதிப்பு '89

▷ உரிமை — ஆசிரியருக்கு

▷ தயாரிப்பு : எஸ். ஆர். கே. மூர்த்தி

▷ வெளியீடு — மீனா புத்தக நிலையம்

▷ அச்சிட்டோர் — செந்தமிழ் அச்சகம்
பங்கஜா ஆலைப்பாதை, கோவை-45

பக்கம்	உள்ளே

9	குயில் காட்டும் கவிஞர்
31	சுரதா
87	சார்ல் போதலேர்
101	ஃபிரான்சுவா வில்லன்
112	விலாடிமிர் மாயகோவ்ஸ்கி
122	பாப்லோ நெருடா
131	லார்கா

பதிப்புரை

கவிஞர் முருகு சுந்தரம்
நாடறிந்த கவிஞர்.
அவர் ஏறாத கவியரங்க மேடையோ
அவர் கலந்து கொண்டு
சிறப்பிக்காத இலக்கிய விழாக்களோ
இல்லை என்று சொல்லலாம்.

மலருள் —
புதைந்திருக்கும் மணத்தைப் பற்றி
வண்டுக்குத்தான் தெரியும்.
ஒரு கவிஞனுடைய
உள்ளத்தின் ஆழத்தை
மற்றொரு கவிஞனால்தான்
உணரமுடியும்.

உலகப் புகழ்பெற்ற
கவிஞர் சிலரின்
படைப்புக்களில் படிந்து
தம்மை மறந்த கணங்கள்
கவிஞர் முருகுவால்
இந்நூலில்
பதிவு செய்யப்பட்டுள்ளன.
அவருக்கே உரித்தான
உயிரோட்டமுள்ள கவிதைநடை
சதங்கை கட்டி
இந்நூலில் சஞ்சரிக்கிறது.

கவிஞரின் படைப்பான
இந்நூலை வெளியிடுவதில்
நாங்கள் —
மிக்க மகிழ்ச்சியடைகிறோம்;
பெருமைப் படுகிறோம்.

பெயருக் கேற்ப —
செந்தமிழ் அச்சகத்தார்
செம்மையான தமிழில்
இந்நூலை —
அச்சிட்டு வழங்கியுள்ளனர்.
அவர்கள் அன்புக்கும்
ஒத்துழைப்புக்கும்
மிக்க நன்றி.

சென்னை-18
1—2—89

மீனா புத்தக நிலையம்

சிலசொல் கேளீர்

இது அணிந்துரை அன்று;
வாயில்!
இதில் முறையாக நீங்கள்
நுழைந்து சென்றால்தான்
இந்நூலை —
நான் எழுதியதன் நோக்கம்
உங்களுக்கு விளங்கும்.

'குயிலும் இளவேனிலும்' — என்ற
தலைப்பைப் படித்ததும்,
இந்நூல் ஏதோ உயிரியல் (Biology)
சம்பந்தப்பட்டது என்று எண்ண வேண்டாம்.

குயில் கூவ,
இளவேனில் தொடங்கும் என்பது
இலக்கிய வழக்கு.
குயில் கூவுவதைக் கேட்டு
இளவேனில் தொடங்குகிறதோ,
இளவேனில் தொடங்கியதைப் பார்த்துக்
குயில் கூவுகிறதோ...
எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்!

குயிலும் வானம்பாடியும் தொன்றுதொட்டுக் கவிஞர்களுக்குக் குறியீடுகளாக இலக்கியவாதிகளால் எடுத்தாளப் படுகின்றன. குயில்கள் தேனினுமினிய தமது தீங்குரலால்,

கவிஞர் முருகுசுந்தரம், எம். ஏ.

இளவேனில் பருவத்தில் மலர்ச்சியைத் தோற்றுவிப்பது போலச் சில கவிக்குயில்களும் தாம் வாழுங் காலத்தில் தமது ஆற்றல்மிக்க படைப்புகளால் சமுதாயத்தில் புதிய இளவேனில்களைத் தோற்றுவித்து, மறுமலர்ச்சியுண் டாக்கக் காண்கிறோம். எனவே, இந்நூலுக்குக் 'குயில்களும் இளவேனில்களும்' என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.

'அன்னம்' திங்களிதழில் 'சில நேரங்களில் சில கவிஞர்கள்' என்ற கட்டுரைத் தொடரை எழுதத் தொடங்கினேன். நோபல் பரிசு பெற்ற சிலிநாட்டுப் பெருங்கவிஞன் பாப்லோ நெருடாவைப் பற்றிய கட்டுரை முதன்முதலில் அன்னத்தில் வெளியாகியது. அதைப் படித்த கவிஞர் மீரா ''கவிஞரின் வாழ்க்கை நிகழ்ச்சியோடு, அவர்கள் கவிதைகளைப் பற்றியும் சுருக்கமாக எழுதுங்கள்'' என்று கடிதம் எழுதினார்.

பிறகு ஃப்ரான்சுவா வில்லன், போதலேர், மாயகோவ்ஸ்கி, லார்கா ஆகிய கவிஞர்களைப்பற்றிச் சற்று விரிவாக எழுதினேன். அன்னம் நின்றது; என் கட்டுரைத் தொடரும் நின்றது. அன்னத்தில் வெளியான அக் கட்டுரைகள் யாவும் இந்நூலில் இடம் பெறுகின்றன.

பாவேந்தரின் திருமகன் மன்னர் மன்னன் எழுதியுள்ள 'கருப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்ற நூலை மையமாக வைத்து, புதுவைப் பல்கலைக் கழகத்தில் ஓர்

ஆய்வரங்கம் நடத்தப்பட்டது. கவிஞனுக்கே உரிய பண்புகள் பாவேந்தரிடம் எவ்வாறு படிந்திருந்தன என்பதைக் கட்டுரையாக்கி, அந்த ஆய்வரங்கில் நான் படித்தேன். அக்கட்டுரையும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

கவிஞர் சுரதா, வாழும் கவிஞர்களிடையே சற்று மாறு பட்டவர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்க் கவிதையுலகின் மீது ஏற்பட்ட தாக்கங்கள் அவரையோ, அவரது படைப்புக்களையோ எந்தவிதத் திலும் பாதிக்கவில்லை. அவர் அவராகவே இருக்கிறார்.

அறிஞர் அண்ணா, ஔவை நடராசன் போன்ற தரமான விசிறிகள், சுரதாவுக்குள்ளனர். சுரதாவின் ஆற்றலைப் பற்றியும் அவர் படைப்புக்களின் தரத்தைப் பற்றியும் பலரும் பலவிதமாக-உயர்த்தியும் தாழ்த்தியும் விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றனர். யார் எப்படிப் பேசி னாலும், கவிஞர் சுரதாவுக்குத் தமது படைப்புக்களின் மீது அதிக மதிப்பும் மரியாதையும் உண்டு. நான் இந்தச் சர்ச்சைகளில் ஈடுபடாமல், சுரதாவை மேலைநாட்டுக் கவிஞர்களோடு ஒப்பிட்டுப் புதிய கோணத்தில் ஆய்வு செய்திருக்கிறேன். ○

சேலம்-16
1—2—'89

முருகு

*குயில் காட்டும் கவிஞர்

''கவிஞன் தன் இன்ப துன்பங்களைத் தனிமையில் இருந்து தாகந் தீரப் பாடித் தீர்க்கும் தனிக்குயில்; அவன் அகிலத்தின் அங்கீகாரம் பெறாத ஆட்சிமன்ற உறுப்பினன்'' என்று ஆங்கிலப் புரட்சிக் குயில் ஷெல்லி குறிப்பிட்டான்.

''கவிஞன் ஒரு கருத்தின் முதல்வன்; எந்தக் கருத்தையும் ஈடேற்றிச் செல்ல முன்னின்று நடத்தும் தானைத் தலைவன்'' என்று அமெரிக்கக் கவிஞன் வால்ட்விட்மன் குறிப்பிடுகிறான்.

''பயித்தியக்காரனும், காதலனும் கவிஞனும் ஒரே மாதிரியான கற்பனை வசப்பட்டவர்கள்; பயித்தியக்காரன், நரகத்தில் இருப்பதைவிட அதிகமான பிசாசுகளைக் கற்பனையில் காண்கிறான்; காதலன், எகிப்து நாட்டு நீக்ரோப் பெண்ணின் கரிய புருவத்தில், கிரேக்கப் பேரழகி ஹெலனின் அழகைக் காண்கிறான். கவிஞனோ, தன் சுழலும் விழிகளால் விண்ணையும் மண்ணையும் அளக்கிறான்; கண்டறியாதனவற்றைக் கற்பனையில் காண்கிறான்; இல்லாதவற்றுக்கும் வாழ்வு கொடுக்கிறான்.......... ...'' என்று நாடக மேதை ஷேக்ஸ்பியர் குறிப்பிடுகிறான்.

---

*புதுவைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் எடுக்கப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் 97-ஆம் பிறந்த நாள் விழாக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. நாள் : 29-4-1987.

‘ சாமியாடியும் கவிஞனும் ஒப்பர். சாமியாடிக்கு ஆவேசம் வரும்போது, அவன் வாயில் அருள் வாக்குப் பிறப்பது போல், கவிஞனுக்குக் கவிதை ஆவேசம் வரும்போது அவன் வாயில் அற்புதங்கள் பிறக்கின்றன ’ என்று கிரேக்கத் தத்துவமேதை சாக்ரட்டீஸ் குறிப்பிடுகிறான்.

மேலே குறிப்பிட்ட அறிஞர்களின் கூற்றிலிருந்து ஒரு செய்தி தெளிவாகப் புலனாகிறது, கவிஞன் மற்ற மாந்தரினின்றும் மாறுபட்டவன் என்று. அவன் சாதாரண மனிதர்களின் அளவுகோலுக்கு எட்டாதவன்; அவன் பேச்சையும் செயலையும் வழக்கமான துலாக்கோலில் எடைபோட முடியாது. கவிஞனின் பயித்தியக்காரத்தனம், சில நேரங் களில் மேதைகளுக்கும் கலங்கரை விளக்கம் ஆவதுண்டு.

கவிஞர்களைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்க லாம். கவிதைக்காகவே கவிதை எழுதும் கவிஞர்கள்; சமுதாயத்துக்காகக் கவிதை எழுதும் கவிஞர்கள். முதல் வகைக் கவிஞர்களின் கவிதைப் பயன், படைப்பின்பம் மட்டுமே; இரண்டாவது வகைக் கவிஞர்களின் கவிதைப் பயன் புரட்சி; இவர்கள் புரட்சிக் கவிஞர்கள். கலை, இலக்கியம், சமுதாயம், அரசியல் ஆகிய எத்துறையிலும் இவர்கள் காலத்துக்கேற்ற மாறுதலையும் மறுமலர்ச்சியை யும் விரும்பி உழைப்பர். இவர்கள் புரட்சி இயக்கங்களின் விடிவெள்ளியாக, சில சமயங்களில் ஈட்டிமுனையாகச் செயல்படுவர். அந்த முயற்சியில் தமது இன்னுயிரையும் வழங்குவர்.

தன்மானத்தை விட்டுக்கொடுக்காத சீனக்கவிஞர் பாய் ஜூயி (Bai Juyi) புதுக்கிணறு என்ற கவிதை எழுதியதற் காக ஏழாம் நூற்றாண்டிலேயே நாடுகடத்தப்பட்டார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த லார்காவும், சிலி நாட்டைச் சேர்ந்த பாப்லா நெருடாவும் அரசியற்காரணங்களுக்காக

எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள். பாப்லா நெருடா நோபெல் பரிசு பெற்ற புரட்சிக் கவிஞர். தமது கவிதையைப் பாடிக்கொண்டே தூக்கு மேடையை முத்த மிட்ட தென்னாப்பிரிக்கக் கருப்புக் குயிலைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். இவர்கள் எதிரிகளால் வளைக்க முடியாத கற்றூண்கள்; முறிந்து தம் மூச்சை முடித்துக்கொண்டார் கள். பாவேந்தர் பாரதிதாசனும் சிறப்பக் கவிதைத் தூண் தான்; ஆனால் இவர் முறியவில்லை. தமிழ்க்கோவிலின் ராஜகோபுரத்தைத் தாங்கிய வண்ணம் ஊன்றி நிற்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் தனிப்பட்ட மனிதர் அல்லர்; அவர் ஓர் இயக்கம். அவர் ஒரு தனிப்பட்ட கவிஞர் அல்லர்; அவரைக் கவிஞரின் அணி வகுப்பு என்றோ, கவிஞரின் ஊர்வலம் என்றோ குறிப்பிடவேண்டும். அவர் ஒரு பஜனை பாடும் தீவிர ஆத்திகராக, கடமையுணர்ச்சி மிக்க ஆசிரியராக, தீவிர தேசிய வாதியாக, கொள்கைப் பிடிப்புமிக்க அரசியல் வாதியாக, சலிப்பில்லாத சமுதாய சீர்திருத்த வாதியாக, நாடக ஆசிரியராக, திரைப்பட எழுத்தாளராக, தொழிற்சங்க வாதியாக, எல்லா வற்றுக்கும்மேல் உலகளாவிய ஒரு புரட்சிக் கவிஞராகத் தமது வாழ்க்கையில் விளங்கியிருக்கிறார். இத்தனை துறைகளிலும் தமது முத்திரை பதித்த வேறு ஒரு கவிஞரைத் தமிழக வரலாற்றில் காணமுடியாது. வெண்மையான தூய ஒளிக்கற்றை ஒரு முப்பட்டைக் கண்ணாடியில் நுழைந்ததும் பலவித வண்ண வேறுபாடுகளுடன் ஒலிச் சிதறல் ஏற்படுவதைக் காண்கிறோம். ''கருப்புக்குயிலின் நெருப்புகுரல்'' என்ற இந்நூலில் பாவேந்தரின் பல்வேறு பட்ட ஒலிச்சிதறல்களையும், பரிமாணங்களையும் துல்லிய மாகக் காணமுடிகிறது.

பெரியம்மாவின் அன்பில் வேறுபாடுகண்ட பதின்மூன்று வயதுச் சுப்புரத்தினம்

பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத்தேடும் பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்கவேண்டும்
கெடுநினைப்போ அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச்சீப்பில்
ஒன்றுவிழுக்காடு தந்தாள்
விழுங்கிடவே அண்ணாவுக்கு
மீத்துக்கொடுக்க மறைப்பதென்ன ?

என்று கவிதை பாடித் தந்தையிடம் நீட்டினார். பிஞ்சுப் பருவத்தில் சுப்புரத்தினம் கவிஞராக அரும்புவதை இங்குக் காண்கிறோம்.

'சுப்புரத்தினம் கவிதை எழுதக்கூடியவன்' என்று பாரதி திருவாய் மலர்ந்தருளியதும், 'எங்கெங்குக் காணினும் சக்தியடா!' என்ற பாடலைப் பாரதி பாணியில் பதினாறு வரிப்பாட்டாக எழுதிக் காட்டினார் சுப்புரத்தினம். இங்கே பதினெட்டு வயதுக் கட்டிளங்காளை, கவிதைத் துறையில் பேரரும்பாகத் திரட்சியடைவதைக் காண்கிறோம்.

கதர்த் துணியைத் தோளில் சுமந்த வண்ணம் தேசியப் பாடல்கள் பாடியபோதும், வீரசைவராக வெந்த வெண்ணீறணிந்து சுப்பிரமணியர் துதியமுதை வண்ணப் பாடல்களாக ஒத்தறுத்துத் தாளமிட்டுப் பாடியபோதும் சுப்புரத்தினம் கவிஞராகக் கட்டவிழ்வதைக் காணுகின்றோம்.

பாரதி பாட்டின் நுட்பம் அறிந்து, புரட்சிக் கவியும், சஞ்சீவி பர்வதத்தின் சாரலும், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டும் எழுதியபோது, சுப்புரத்தினம் தமிழகம் எங்கும் கவிதை மணம் பரப்பும் புரட்சிக்கவிஞராக மலர்ச்சியடைவதைக் காண்கிறோம். விரைந்த அவர் கவிதைப் பயணம், அவர் மூச்சு நிற்கும் வரை தொடர்ந்தது.

பாரதி, பாரதிதாசன் தொடர்பு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனை ; பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய வரலாற்று நிகழ்ச்சி. புதுவையில் நீண்ட நாட்களாகத் தமிழ்ச்சங்கம் இயங்கிக் கொண்டு இருந்தது. பெரும்புலவர்களும், ஆசுகவிகளும் புதுவையில் நிறைந்திருந்தனர். இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையின் போக்கையே மாற்றி, அதற்குப் பெரிய மறு மலர்ச்சியைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்த பாரதி யை யாரலும் இனங்கண்டு கொள்ளமுடியவில்லை. பாரதி யை இலக்கணம் தெரியாதவன் என்று இகழ்ந்து பேசி, அவர்மீது சேற்றை அள்ளி வீசினர். பாம்பின் கால் பாம்பறியும் என்பதுபோல, பாரதியின் ஆற்றலைப் பாரதிதாசனால் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது.

உள்ளங்கலந்த இரண்டு கவிஞர்களின் கூட்டுறவு, கனிந்த காதலர்களின் கூட்டுறவைவிட இனிமையானது. கனவு களில் வாழும் அக்கவிதைக் காதலர்களால், இலையுதிர் காலத்தையும் இளவேனிலாக மாற்றிக்கொள்ள முடியும். பேச்சுத் தென்றலால் தடவி உள்ளத்தில் புல்லரிப்புகளைத் தோற்றுவித்துக் கொள்ள முடியும். ஈனமான இவ்வுலகத் துன்பங்களைத் தாண்டிக்குதித்து, ஞானரதத்தில் பறக்க முடியும். பாரதியும் பாரதிதாசனும் இதைத்தான் செய்தார்கள்.

மனிதர் வீடு பிடிக்காததால், பாரதியும் பாரதிதாசனும் இயற்கை வீட்டில் உலாவ வாழைக்குளம், தாண்டி அடர்ந்த தென்னந்தோப்பும், நீர் ஊற்றும் சூழ்ந்த இடத்தைத் தேடிச் சென்று கொண்டிருக்கின்றனர். நண்பர் பினாகபாணி குழந்தையின் சாவு எதிரில் வந்தது. ஏமாற்றத்தோடு கவிஞர் இருவரும் சாவு ஊர்வலத்தில் கலந்து கொள் கின்றனர்.

இடுகாட்டில் எல்லாரும் வழக்கமாகப் பேசும் பேச்சு என்னவென்று நமக்குத்தெரியும். இரண்டு கவிஞர்கள் சேர்ந்தால் இடுகாடும் சொர்க்கம் ஆகிவிடுகிறது. பாரதி தாசன் படுக்க இடம் தேடுகிறார்.

''சிதைந்த மல்லிகைச் செடி; அதில் ஒரே ஒரு மிலாரில் தான் உயிர் இருந்தது. அந்த உயிருள்ள மிலாரும் தரையைத் தழுவியிருந்தது. இலைகள் ஒளிப்பச்சை; இடைக்கிடையே நேற்றுமலர்ந்த பூக்கள்; மலர வேண்டிய காய் அரும்புகள்; மல்லிகைச் செடியின் அண்டையில், மேல்துண்டை விரித்துப்போட்டுப் படுத்துக்கொண்டேன். காலை எட்டரை மணி; இளவெயிலின் மெல்லிய தங்கக் கதிர்கள் சிறுகாற்றில் ஆடும் பச்சிலைமேல் மின்னிக் கொண்டிருந்தன. சிற்றரும்பும் பூவும் சிரித்துக் கொண்டிருந்தன. இடுகாட்டில் - பாவேந்தர் இப்படிக் கூறுகிறார்.

சிறிது நேரத்தில் யாரோ ஒருவன், அருகில் இருந்த மல்லிகைச் செடியின் பூக்களையும் அரும்புகளையும் பாப்பம்மாள் கோவில் சாமிக்குப் போடப் பறித்துப் போகிறான். அதைப்பார்த்த பாரதியின் உள்ளம் துணுக் குறுகிறது. பாரதியார் பாரதிதாசனிடம் கூறுகிறார்.

''உன் மல்லிகைச் செடியில் இருந்து பூக்களையும் அரும்பு களையும், பறித்துக்கொண்டு போய்விட்டான், அதோ அந்தக்கல்லின்மீது போட. நீ மல்லிகையின் மணத்தையும், அழகையும் சுவைத்திருந்தாய்; நான் பார்த்தேன். அப்போது என் நெஞ்சு பெற்ற இன்பத்தின் அளவை நீ கணக்கெடுக்கவில்லை; எடை தெரியவில்லை உனக்கு; ரசத்திலே தேர்ச்சிகொள்'' என்றார் பாரதி. பாரதியின் புதிய ஆத்திச்சூடி தொடர்கிறது. இடுகாட்டைக் கற்பனை மழையால் நனைத்துக்கொண்டிருக்கும் இவர்கள்

யார்? கவிதைக் காதலர்கள். மல்லிகைச் செடியின் ஓரத்தில் நடக்கும் இந்த இலக்கியத் தேனிலவைப்போல், எத்தனையோ காட்சிகளை இந்நூலில் கண்டு சுவைக்கலாம்.

ஃபிர்தௌஸி பாரசீக நாட்டுக் கம்பன். அவன் பாரசீக மன்னர் வரலாற்றை ஷாநாமா என்ற பெயரில் பெருங் காப்பியமாக எழுதி முடித்தான். அந்த நாட்டு மன்னன் கஜினி முகம்மது போர்க்களத்தில் இருந்தான். எதிரியோடு கடும்போர் நடந்து கொண்டிருந்தது. கஜினியின் படை பின்வாங்கிக் கொண்டிருந்த நேரம். இவன் படை வீரர் சிலர் ஒரு வீரப்பாடலை உணர்ச்சி பொங்கப் பாடிக் கொண்டு வந்து முன்னேறித் தாக்கினர். கஜினிக்கு வெற்றி; கஜினி முகம்மது ‘இப்பாடல் யார் பாடியது?’ என்று கேட்டான். ‘இது ஃபிர்தௌஸி எழுதிய ஷாநாமா வரிகள்’ என்று கூறினார்கள், அந்த வீரர்கள். தலைநகர் திரும்பியதும் ஷாநாமாவின் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பொற்காசு வீதம் ஒரு தட்டில் கொட்டி நிரப்பி, ஃபிர்தௌஸியின் வீட்டிற்கு அனுப்பினான் கஜினிமுகம்மது. அத்தட்டு ஃபிர்தௌஸியின் வீட்டை நெருங்கியபோது, வறுமையில் வாடிச்செத்த ஃபிர்தௌஸியின் பிணம் எதிரே வந்தது. இது பாரசீகக் கம்பனின் சோக வரலாறு.

ஃபிர்தௌஸியின் வீர நடைப்பாட்டுக்கு இருந்த அதே ஆற்றல் பாவேந்தரின் இந்தி எதிர்ப்புப் பாட்டுக்கும் உண்டு. அந்த எழுச்சிப் பாட்டு 1938-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரின் சங்கநாதமாக விளங்கியது. தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அப்பாடல் எதிரொலித்தது. அந்தப் பாடலைப் பாடிய வண்ணம் தமிழ்த் தொண்டர்படை சிறைச்சாலையை நோக்கி அணிவகுத்துச் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி!

எப்பக்கம் வந்து புகுந்துவிடும் — இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அற்பமென்போம் அந்த இந்திதனை — அதன்
ஆதிக்கந் தன்னைப் புதைத்திடுவோம்
எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம் — எங்கள்
இன்பத் தமிழ்மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும்சுகமும் — எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
ஏங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே — உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும்வரை!

இந்தப் பாடல் வரி ஒவ்வொன்றும் ஒரு வெடிகுண்டு. சொற்கள் கவிதையில் வந்து உட்காரும்போது, சாட்டை வீச்சுக்களாக விழுகின்றன. உவமைகள் பலாச் சுளை களாகத் தித்திக்கின்றன. ஒப்பற்ற இந்தக் கவிதை மின்னலைப் பிடித்து, வரலாற்றுச் சட்டத்தில் அடைத்து இந்நூலில் பதிவு செய்திருக்கிறார், மன்னர் மன்னன். ஒரு கவிஞன், ஒரு புரட்சி இயக்கத்தின் ஈட்டிமுனையாக எவ்வாறு விளங்குகிறான் என்பதை இவ்வரலாறு தெளிவு படுத்துகிறது.

1961 - ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 - ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சென்னை இராஜாஜி ஹாலில் அனைத் திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத் துவக்க விழா நடைபெற்றது. பெருந்தலைவர் காமராஜர், டாக்டர் சுப்பராயன், மீ. ப. சோமு ஆகியோர் அவ்விழாவில் கலந்து கொண்டனர். பாவேந்தரும் விழாவில் கலந்து கொண்டார். பாவேந்தரை விழாக் குழுவினர் பேச அழைத்தபோது எழுந்து இரண்டு நிமிடம் மட்டும் பேசி விட்டு உட்கார்ந்து கொண்டார். பேச்சு மிகச் சுருக்கமாக இருந்தாலும், கேட்பவர் உள்ளத்தைத் தைக்கும்படி அமைந்திருந்தது.

'' தமிழ் எழுத்தாளன் முதலில் தமிழை ஒழுங்காகக் கற்க வேண்டும்; இன்றையத் தமிழ் எழுத்தாளர் பலருக்குத் தமிழே தெரியாது. எழுத்தாளன் என்பவன் எப்போதும் எவருக்கும் அஞ்சாமல் தன் உள்ளத்தில் தோன்றும் கருத்தை வெளியிடும் துணிச்சல் பெற்றவனாக இருக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார். சிலர் மேடையில் பேசுவர்; ஆனால் செயலில் காட்டமாட்டார்கள். பாவேந்தருக்குச் சொல்வேறு செயல்வேறு என்பதில்லை. அவர் பேனா எதற்காகவும் எப்போதும் அஞ்சியதில்லை; நடுங்கியதில்லை; கொஞ்சங்கூட வளைந்து கொடுத்த தில்லை.

தமிழர்களின் எழுதுகோல் எப்படியிருக்கவேண்டும் என்ப தற்கு அவரே கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிறார்; அவ்விளக்கம் கவிஞராகிய இவருக்கும் பொருந்துமன்றோ?

கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்
கண்டதைத் மேற்கொண்டெழுதிக் கட்டுரையாக்குங்கால்
தெருத்தூற்றும்; ஊர்தூற்றும்; தம்முளமே தம்மேற்
சிரிப்பள்ளித் தூற்றும்; நலம் செந்தமிழ்க்கும் என்னாம்?

✠ ✠ ✠

பொதுமக்கள் நலம்நாடிப் புதுக்கருத்தைச் சொல்க;
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும்
அதற்கொப்ப வேண்டாமே! அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை?
ஏற்றசெயல் செய்வதற்கும் ஏன் அஞ்ச வேண்டும்?

பாவேந்தர் இவ்வாறு எழுதியதோடு நிற்கவில்லை. தாம் வலியுறுத்திய இந்த எழுத்துக் கற்பைத் தம் வாழ்நாளின் இறுதிவரை ஒழுங்காகக் கடைப்பிடித்தார். இக்கொள் கையில் இருந்து தவறவேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்ட

போது, பாவேந்தர் எப்படி நடந்துகொண்டார் என்பதை மன்னர் மன்னன் இந்நூலில் பதிவு செய்திருக்கிறார்.

மதுரையிலிருந்து திரு. சி. பா. ஆதித்தனார் 'தமிழன்' என்ற வார ஏட்டினை வெளியிட்டார். அவருக்குப் பாவேந்தர் மீது ஈடுபாடு அதிகம். 'தமிழன்' முதல் இதழ் பாவேந்தரின் உருவப்படத்தையும் கவிதைகளையும் தாங்கி வந்தது. 'தமிழ் இராஜ்யத்திற்கு உழைக்கும் வாரப் பத்திரிகை' என்ற குறிப்புடன் அந்த ஏடு வெளி வந்தது. 'தமிழர் பறைமுழக்கம்' போன்ற உயரிய பாடல்களைப் பாவேந்தர் அதில் எழுதி வந்தார்.

தொடக்க நாளில் 'தமிழன்' ஏட்டுத் தொடர்பு நல்ல முறையில்தான் இருந்தது. காலப்போக்கில் அந்த உறவில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. ஓரிதழின் முகப்பில் திரைப்பட நடிகையின் படம் வெளியிடப்பட்டது. அதே இதழில் பாவேந்தரின் கவிதையொன்று சில பிழைகளோடு வெளியிடப்பட்டது. பாவேந்தர் அந்த இதழைப் பார்த்து வெகுண்டார். 'தமிழன்' தரம் தாழ்ந்துவிட்டதற்காக வருந்தினார். "கண்டதை மேற்கொண்டு எழுதிக் கட்டுரையாக்குங்கால் தெருத்தூற்றும்; ஊர் தூற்றும்" என்ற கொள்கையுடையவர் அல்லரோ பாவேந்தர்? இதழின் போக்கைக் கண்டித்துக் கடிதம் ஒன்று எழுதினார்.

"தமிழன் அலுவலகத்தின் இலக்கிய ஆசிரியர் நாற்காலி இப்போது காலியாக இருக்கின்றதோ? தமிழன் முகப்புப் படத்தை நடுத்தெருவாக்கிவிட்டீர்களே!" என்று எழுதி விட்டார். தமிழன் அலுவலகம் முகம் சுளிக்கத் தொடங்கியது. தமிழன் இதழில் வெளியாக இருந்த பாவேந்தரின் புதிய படைப்பான 'தமிழச்சியின் கத்தி'

கையெழுத்துப்படி திருப்பி அனுப்பப்பட்டது. 'தமிழன்' உறவு அறுந்தது. அதற்காகப் பாவேந்தர் வருந்தவில்லை. 'கவிஞன்' என்ற தமது கௌரவம் காயப்படுத்தப்படும் போதெல்லாம், அவர் அஞ்சாமல் பிடரி சிலிர்த்து எழுந்திருக்கிறார். இதேபோல வேறொரு நிகழ்ச்சியையும் பாவேந்தர் வரலாற்றில் இருந்து சுட்டிக்காட்டுகிறார் மன்னர் மன்னன்.

'சக்தி' ஆசிரியர் திரு. வை. கோவிந்தன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவ்விதழுக்குப் பாவேந்தர் பாடல்கள் எழுதிக் கொண்டிருந்தார். இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த நேரம், ருசிய நாட்டின் மீது படையெடுத்திருந்த இட்லரின் போர் வெறியைக் கண்டித்து சக்தி இதழுக்குக் 'குடியானவன்' என்ற தலைப்பில் ஒரு பாடல் அனுப்பியிருந்தார். இந்திய மக்களின் விருப்பத்தை அறியாமல், இந்திய நாட்டை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியிருந்த ஆங்கிலப் பேரரசைக் காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் கண்டித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சூழ்நிலையில் போரை ஆதரித்து எழுதப்பட்ட 'குடியானவன்' என்ற பாட்டைக் காங்கிரஸ் கட்சி இதழான 'சக்தி' வெளியிடத் தயங்கியது. 'குடியானவன்' பாடலின் இறுதி வரிகள்,

> இதையவன் கண்ட தில்லை; ஆயினும்
> அக்குடி யானவன் எழுந்தான்
> நிற்க வில்லை; நிறைந்தான் போரினிலே:

என்று முடிகின்றன. கடைசி வரியிலிருக்கும் 'நிறைந்தான் போரினிலே' என்ற சொற்களை மாற்றிக் கொடுக்கும்படி சக்தி ஆசிரியர் திரு. வை. கோவிந்தன் கேட்டுக்கொண்டார். 'மாற்றம் செய்ய முடியாது' என்று சொல்லிக் கவிதையைத் திரும்பப் பெற்றுக் கொண்டார், அந்தக் கொள்கைக் குரிசில்.

எரிமலையைப் போல் எதிர்ப்புகள் குமுறி எழுந்தாலும், வெள்ளம்போல் பகைவர் கூட்டம் துள்ளி வந்தாலும், சிறிதும் நிலைகுலையாத நெஞ்சுரம் பெற்றவனாகக் கவிஞன் இருக்க வேண்டும். ஆங்கில நாட்டு இலக்கிய வரலாற்றில் இதற்கு உணர்ச்சிமயமான ஓர் எடுத்துக் காட்டு உண்டு. கி. பி. 16-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆட்சிபுரிந்த புகழ்பெற்ற மன்னனான எட்டாம் ஹென்றி மதத்துறையில் இருந்த போப்பின் மேலாதிக்கத்தை ஒழித்துக்கட்டி, எதிர்ப்பு மதத்தை (Protestant church) நிறுவினான். அவனுக்குப் பிறகு பட்டமேறிய அவன் மகள் முதலாம் எலிசபெத்தும், பிராட்டெஸ்டண்ட் மதத்தையே தழுவியிருந்தாள். ஆனாலும் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்தவனும், கத்தோலிக்கப் பிரபுவான அஞ்சு கோமகனை (Duke of Anjou) அவள் மணக்க இருப்பதாக ஒரு வதந்தி நாடெங்கும் பரவிற்று. பிராட்டெஸ்டண்ட் மதத்தைச் சேர்ந்தவர்களான இங்கிலாந்து மக்களுக்கு இந்தத் திருமண ஏற்பாடு பிடிக்கவில்லை.

ஜான் ஸ்டப்ஸ் (John Stubbs) என்ற அறிஞன் இந்தத் திருமண ஏற்பாட்டைக் கண்டித்து 'விழுங்கத் திறந் திருக்கும் கடல் வாயின் கண்டுபிடிப்பு (The Discoveries of a Gaping Gulf) என்ற பிரசுரம் ஒன்றை எழுதி வெளியிட் டான். பிரெஞ்சு நாட்டுக் கத்தோலிக்கக் கோமகன் ஒருவனை இங்கிலாந்தின் அரசி திருமணம் செய்து கொள் வதால் இங்கிலாந்து நாட்டில் பரவியிருக்கும் பிராட்டெஸ் டண்ட் மதத்துக்கு வரும் கேடு பற்றியும் அவமானம் பற்றியும் அக்கட்டுரையில் ஜான் ஸ்டப்ஸ் ஆணித்தரமாக அலசி ஆராய்ந்திருந்தான். இந்த பிரசுரம் இங்கிலாந்துப் பேரரசி எலிஸபெத்தின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத் தியது. அந்தப் பிரசுரத்தை எழுதிய ஜான் ஸ்டப்ஸின் வலது கையை வெட்டிவிடும்படி அரசி ஆணை பிறப்பித்தாள். அத்தண்டனை வெஸ்ட்மினிஸ்டர் சந்தை வெளியில்

நிறைவேற்றப்பட்டது. அதற்காக ஸ்டப்ஸ் சிறிதும் கலங்கவில்லை. தன் கொள்கையிலிருந்தும் பின் வாங்கவில்லை. அவன் வலது கை வெட்டப்பட்டதும், இடது கையால் தன் தலை மீதிருந்த தொப்பியை அசைத்த வண்ணம் 'அரசியை ஆண்டவன் காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லிவிட்டு மெதுவாக நடந்தான். இப்படைப்பாளியின் நெஞ்சுரமும் கொள்கைப் பிடிப்பும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

பாவேந்தர் பாரதிதாசனின் நெஞ்சுரமும் இப்படிப்பட்டது தான். தமக்கிருக்கும் இந்தத் துணிச்சலையும் போராட்டக் குணத்தையும் பல இடங்களில் அவரே வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இருளினை வறுமை நோயை
இடறுவேன்; என்றன் மீது
உருள்கின்ற பகைக்குன் றத்தை
ஒருவனே உதிர்ப்பேன் — என்றும்

◈ ◈ ◈

மாயும் உயிரென்றால்
மருளாத காளைநான் — என்றும்

தமது பாடல்களின் இடையில் குறிப்பிடுவது அவரைப் பற்றித்தான்.

உண்ண உணவும் உறங்க உறையுளும் மறுக்கப்பட்டு, குளத்துநீரை அருந்திவிட்டுக் கோயில் திண்ணையில் படுத்துறங்கிக் கூனிச்சம்பட்டுக் கிராமத்தில் வாழ்ந்தபோதும் திருபுவனைத் தேர்தலுக்குப் பின் புதுவை அரசாங்கம் பொய் வழக்குச் சுமத்தி இவரைச் சிறையில் தள்ளிய போதும், காழ்ப்புணர்ச்சியின் காரணமாகத் தமிழறிஞர்கள் இவரை அட்டைக்கிளாஸ் வாத்தியார் என்று அரங்கத்தில் பேசி அவமதித்த போதும், ஆணவம் பிடித்த கல்வித்துறை அதிகாரிகள் இவர் நிம்மதியைக் குலைக்க ஊருக்கு ஊர்

பந்தாடிய போதும், இவர் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத அரசியற் பகைவர்கள் புதுவைத் தெருவில் இவரைப் புரட்டி எடுத்த போதும், அந்தக் கொடுமைகளை முகஞ்சுழிக்காமல் ஏற்றுக் கொள்ளும் அஞ்சாமையும் நெஞ்சுரமும் பாவேந்தருக்கு நிறையவே இருந்தது.

கவிஞன் எவனுக்கும் கட்டுப்பட்டு வாழக்கூடாது என்பதிலும், காசுக்காகக் கவிஞன் விலை போகக் கூடாது என்பதிலும் பாவேந்தர் மிகவும் எச்சரிக்கையாக இருந்திருக்கிறார். பாவேந்தரின் இந்தப் பெருங்குணம் இந்நூலில் தக்க மேற்கோள்களுடன் நிறுவப்பட்டுள்ளது.

ஓர் இளைஞர் கவிதைகள் எழுதிய குறிப்பேடுகளுடன் பாவேந்தரைப் பார்க்க வருகிறார். அக்குறிப்பேடுகளை மேற்போக்காகப் பார்த்த பாவேந்தர் ''சரி நீ என்ன பண்றே?'' என்று கேட்கிறார்.

''கவிதையைத்தான் தொழிலா வெச்சிருக்கேன்'' என்று பதில் கூறுகிறார் இளைஞர். உடனே பாவேந்தருக்குக் கோபம் வந்துவிடுகிறது.

''நீ உருப்படமாட்டே!'' என்று கூறிக் குறிப்பேட்டை வீசி எறிகிறார்.

''எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு போயி வச்சிட்டு, ஒரு வெத்திலைப் பாக்குக் கடை வையி. தெனமும் அஞ்சு ரூவா சம்பாதிக்க ஆரம்பிச்ச பிறகு எழுதலாம்'' என்கிறார். இளைஞர் திடுக்கிட்டு நிற்கிறார்.

''ஏன் சொல்றேன் தெரியுமா? உன் வயித்துப் பசிக்கு ஏதாவது ஒரு வருவாயைத் தேடிக்கிட்டாத்தான், நீ துணிச்சலா எழுதலாம்; ஒருத்தனையும் எதிர்பார்க்க வேண்டியிருக்காது. இல்லேன்னா, அவனவன் சொல்றத

ஏத்துக்கிட்டு உன்னை அடமானம் வைக்க வேண்டிவரும்'' என்று விளக்கிவிட்டு, தாம் 38 ஆண்டுகள் அடக்குமுறை அரசின்கீழ் ஆசிரியப் பணிபுரிந்த விவரத்தைக் கூறுகிறார். கவிஞர் சொன்னபடி நேரே தம் சொந்தப் ஊருக்குப் போய்ச் சிறு வாணிகம் செய்யப் புகுந்த அந்த இளைஞர், எதிர்காலத்தில் பெருஞ்செல்வராய் - புரவலராய் மாறினார். கவிஞன் தன்னை யாரிடமும் காசுக்காக அடமானம் வைக்கக்கூடாது என்பதில் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார் என்பது புலப்படும்.

பாவேந்தரின் தகுதி அறியாத சிலர் இவர் மான உணர்வைக் காயப்படுத்தும் நிகழ்ச்சிகள் சில, இவருடைய வாழ்க்கையில் ஏற்பட்டதுண்டு. திராவிட இயக்க ஏடான குடியரசு இதழில் இவரது வளர்ச்சியை விரும்பாத குறும்புக்காரர் சிலரால், இவரைப்பற்றி உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியிடப்பட்டன. அதைக் கண்டு வெகுண்டெழுந்தார் பாவேந்தர். குடியரசு ஏடு பெரியாருக்குச் சொந்தமானது. பேரறிஞர் அண்ணா உட்பட பெரியாரை எதிர்த்து யாரும் கேள்வி கேட்க முடியாது. பெரியாரின் செல்வாக்கு அத்தகையது. ஆனால் பாவேந்தர் குடியரசு ஏட்டின் முறைகேட்டை விளக்கித் தந்தை பெரியாருக்குக் காரசாரமான கடிதம் ஒன்றை எழுதிப் பதிவு அஞ்சலில் அனுப்பினார். அதற்குப் பெரியார் பாவேந்தரைச் சமாதானப்படுத்தி, எட்டுப் பக்கங்கள் அடங்கிய கடிதம் ஒன்றைத் தம் கைப்பட எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் முதற்கொண்டு பல துறைகளிலும் உணர்ச்சி வசப்பட்டு நடந்துகொள்ளும் கவிஞர்களின் சில செயல்களுக்கு, நம்மால் விளக்கம் கூறமுடியாத சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. சிறந்த தத்துவ மேதைகளாக நடந்து

கொள்ளும் கவிஞர்கள், சில சமயங்களில் குழந்தைகளைப் போலவும் சில சமயங்களில் பயித்தியக்காரர்களைப் போலவும் நடந்து கொள்வதுண்டு.

ஷெல்லி இத்தாலியில் கடற்கரையோரமாக ஒரு வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தபோது ஒரு நிகழ்ச்சி. வீட்டின் கூடத்தில் ஷெல்லியின் மனைவியான மேரியும், சில இலக்கிய அன்பர்களும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர். அப்போது கடற்கரையோரத்தில் நீர்த் தொட்டியில் படுத்தவண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் ஷெல்லி. திடீரென்று அவன் உள்ளத்தில் கவிதை மின்னல் ஒன்று தோன்றியது. உடனே எழுந்தான். தான் நிர்வாணமாக இருந்ததை உணரவில்லை அவன். எல்லோரும் அமர்ந்திருக்கும் தன் வீட்டின் நடுக்கூடத்தில் அதே நிலையில் நுழைந்து விட்டான். அவன் கோலத்தைக் கண்டு அதிர்ச்சியுற்ற அவன் மனைவி மேரி, 'ஷெல்லி! இது என்ன பயித்தியக் காரத்தனம்?' என்று கூச்சலிட்டாள். அப்போதுதான் ஷெல்லி தன் நிலையுணர்ந்தான். இதுபோன்ற நிகழ்ச்சிகள், மெய்மறந்த நிலையில் கவிஞர்கள் வாழ்க்கையில் இடம்பெறுவது உண்டு. ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? அதற்கு விடை கிடையாது.

இதேபோல் விடைகாண முடியாத சில பண்புகள் பாவேந்தருக்கும் உண்டு. இக்கறுப்புக்குயிலின் விசித்திரப் பண்புகளையும் கூர்ந்து நோக்கி, மன்னர் மன்னன் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

குளிப்பது சில மணித்துளிகளில் முடிந்துவிடும். எத்தனை அண்டா வெந்நீராயிருந்தாலும் செம்பினால் மொண்டு மொண்டு துடையின்மீது ஊற்றிச் சுகம் காண்பார் - அது சிந்தனை நேரமாகிவிடும். மலங்கழிக்கப் போகுமிடத்தில்

விரலில் அமர்ந்திருக்கும் வெண்சுருட்டுச் சாம்பலால் ஏதேனும் சித்திரம் தீட்டப்பட்டிருக்கும். கவிஞர் அப்போது வந்து போயிருக்கிறார் என்று புரியும்'' என்று மன்னர் மன்னன் குறிப்பிடுகிறார். இதேபோல வேறொரு செய்தியை நான் எனது நூலான ''பாவேந்தர் நினைவுகளில்" பதிவு செய்திருக்கிறேன். சென்னை ராமன் தெரு வீட்டில் பாவேந்தர் இருந்தபோது, குற்றிய லுகரத்தைக் கவிதையில் எவ்வாறு கையாளுவது என்பதைப் பற்றி எனக்கு ஒரு தாளில் எழுதி விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது தாளில் மை சிந்திவிட்டது. உடனே தமது ஆள்காட்டி விரலால் அந்த மையை ஒரு மலராக மாற்றிவிட்டார். நான் ஒருமுறை விஸ்வபாரதி சென்றபோது, தாகூரின் கையெழுத்துப் படிகளைப் பார்க்கும் வாய்ப்பு எற்பட்டது. அவரும் பாவேந்தரைப் போலவே சிந்திய மையைத் தாளில் ஓவியமாக்கியிருந் ததைப் பார்த்தேன். இதுபோன்ற குழந்தைத்தனம் கவிஞர்களுக்குப் பொதுவானது.

இதேபோல் மற்றுமோர் நிகழ்ச்சியை அவருடைய ஆசிரியப் பணியிலிருந்து மன்னர் மன்னன் குறிப்பிட்டிருக்கிறார். ''முதற்பாடப் புத்தகம். தமிழாசிரியர், பயிற்சியைத் தொடங்கிடப் புத்தகத்தைப் பிரிக்கிறார் முதற்பக்கம்; இவர் நமது ராஜா. இவர் இங்கிலாந்து நாட்டின் சக்கர வர்த்தி. இவர் பெயர் ... என்ற பாடமும், இங்கிலாந்து நாட்டுப் பேரரசரின் படமும் பொறித்திருக்கிறார்கள்.

பாவேந்தருக்கு மீசை படபடக்கிறது. நரம்பு முறுக்கேறு கிறது. 'மடையனுங்க' என்று அரிமாக்குரல் எழுப்பு கிறார். எதிர் உள்ள சிறுவர்கள் அஞ்சி நடுங்குகிறார்கள். பாரதிதாசன் பாடநூலை மூடி வைத்துவிட்டுக் கரும் பலகையில் ஒரு நாயின் படத்தை எழுதிவிட்டுத் தன் இருக்கையில் அமர்கிறார்.

'' தலைமையாசிரியர் வருகிறார். கரும்பலகையில் நாயின் ஓவியம். பாரதிதாசன் கூறுகிறார். நம்ம ஊரெல்லாம் குடியரசு நாடுன்னு சொல்லுகிறோம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கையை உலகத்துக்கே வழங்கிய பிரெஞ்சுக் குடியரசில், நம்ம பிள்ளைங்க எடுத்த எடுப்பிலே படிக்கற பாடம் என்ன தெரியுமா? இவர் நமது ராஜா. இங்கிலாந்தின் சக்கரவர்த்தி. ரொம்ப நல்லா இருக்குங்க. இப்படிப்பட்ட பாடத்தைச் சின்னப் பசங்களுக்குக் கத்துக் குடுத்தா குடியரசு நாட்டிலேயும் சக்ரவர்த்தி இருப்பார்னு நெனைச்சிடுவாங்களே; நம்ம தேசம் இங்கிலாந்தென்று பாடம் பண்ணிடுவாங்களே! '' என்கிறார் தமிழாசிரியர் சுப்புரத்தினம்.

'' அதுசரி! நாயின் படத்தை எதுக்கு எழுதி வைக்கணும்? ஐயமும் வியப்பும் தலைமையாசிரியரைத் தள்ளாடச் செய்கின்றன. தலைமையாசிரியர் மட்டுமா? நாமும்தான் தள்ளாடுகிறோம். நாயின் படம் யாருக்குக் குறியீடு? புதுவை அரசாங்கத்துக்கா ? புதுவைக் கல்வித்துறைக்கா ? புரியவில்லை. இப்படிப் புரியாமல் சில சமயங்களில் நடந்து கொள்வதுதான் கவிஞர்களின் பண்பு

அழகில் பார்த்தவுடன் படியும் உணர்ச்சியும், கலையுள்ளமும் கவிஞர்களுக்கே உரிய இயல்பான பண்புகள். ஒரு சிறிய வேலையாக இருந்தாலும், அது கலையம்சத்தோடு, சிறப்பாக முற்றுப் பெற வேண்டும் என்பதில் பாவேந்தர் அதிக அக்கறை காட்டுவது வழக்கம். '' எதிர்பாராத முத்தம் '' - காப்பியம் அச்சானபோது, அதற்கு முகப்பு ஓவியம் யாரைப் போடச் சொல்வது என்ற கேள்வி எழுந்தது. சென்னை ஓவியக் கல்லூரியின் முதல்வராயிருந்த, புகழ்பெற்ற ஓவியர் ராய் சௌத்ரியிடம் அப்பணியை ஒப்படைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

பணியை ஒப்படைத்துவிட்டோம். அவர் எப்படியோ எழுதி முடிக்கட்டும் என்று பாவேந்தர் நினைக்கவில்லை. தாமே நேரில் சென்று ராய் சௌத்ரியைப் பார்த்து, காப்பியக் கதையையும், பாத்திரப் பண்புகளையும் விளக்கியிருக்கிறார். தமிழ்நாட்டு வணிகர் குடும்பத்தில் ஆடவரும் பெண்டிரும் ஆடை எவ்வாறு அணிவார்கள் என்பதை அவருக்கு அருகிலிருந்து விளக்கியதோடு, மாதிரிக்கு ஆடவர் அணியும் மேற்சட்டை ஒன்றை மன்னர் மன்னன் மூலம் ராய் சௌத்ரிக்குக் கொடுத்தனுப்பியிருக்கிறார்.

''கவிதையில் வெளிப்படுத்தும் கலைநுட்பம், நாட்டில் நிலவும் உண்மையான பழக்க வழக்கம், பண்பாடு இவற்றிற்கு ஏற்ப அமைய வேண்டும். படைக்கப்படும் காட்சி கற்பனைக் கண்ணுக்கு இயல்பாகத் தென்பட வேண்டும். அதில் பாரதிதாசன் பேராற்றல் வாய்ந்தவர்'' என்று ராய் சௌத்ரி பாராட்டியிருக்கிறார்.

''என்னுடைய கற்பனையில் உருவான பாத்திரப் படைப்புகளுக்கு, மரபு வழிவந்த பண்பாட்டின்படி ஓவியம் தீட்டிய ராய் சௌத்ரி ஓவியப் புலவர் மட்டுமல்லர்; அவரும் ஒரு காவியப் புலவரே!'' என்று பாவேந்தர் பாராட்டியுள்ளார். கலைத்தேனில் தோய்ந்த இரு வண்டுகள், மெய்மறந்த நிலையில் பாடும் பாராட்டுக் கீதங்கள் இவை.

கலையுணர்வில் தம்மை இழந்தவர்கள் பொருள் இழப்பைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. பாவேந்தர் வாழ்விலும் இத்தகைய இழப்புகள் அதிகம். தம் வாழ்வின் இறுதி நாட்களில், திரைப்படத் தயாரிப்பில் இறங்கிக் கடன்பட்டு நிம்மதியிழந்து உயிர்விட்டதற்குக் காரணம், கவிஞராகிய பாரதிதாசன் உள்ளத்தில் கொழுந்துவிட்டு அணையாமல் எரிந்து கொண்டிருந்த கலையுணர்வுதான்.

மீனாட்சி அச்சகத்தில் அச்சுக் கோப்பாளராகப் பணி புரிந்து கொண்டிருந்த இளைஞர் நடராசன் சிவந்த மேனி, நெடிய உருவம், அழகிய கண்கள், கரிய மூக்குடன் கூடிய ஆணழகன். அவனை எதிர்பாராமல் சந்தித்த பாவேந்தர், ''இவன் நாட்டியமாடினால் எப்படியிருக்கும்'' என்று கற்பனை செய்யத் தொடங்கிவிட்டார். கற்பனை செய்த தோடு நிற்கவில்லை. நாட்டியப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்தார். 'சேரதாண்டவம்' என்ற நாடகத்தை எழுதியதே இவனை உள்ளத்தில் நினைத்துத்தான்.

புதுவை இலக்கிய மன்ற நிதிக்காக நடராசன் - சகுந்தலா ஓரியண்டல் நாட்டிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது. செலவில் பாதித் தொகைகூட வசூல் ஆகவில்லை. நகையை விற்றுப் பாவேந்தர் கடனைத் தீர்த்தார். நடராசன் கவிஞருக்காக அழுதே விட்டார்.

''யார் அழுது என்ன பயன்? என் கழுத்துச் சங்கிலி போனது திரும்பிவிடுமா? என்று என் அன்னை மனங் கலங்கினார். பொன்னகை போனது அன்னைக்கு; புகழ் ஒளி சேர்ந்தது தந்தைக்கு'' என்று மன்னர் மன்னன் இந்நூலில் திருப்திப் பட்டுக்கொள்கிறார்.

கவிஞர்கள் கனவுகளினால் வாழ்பவர்கள்; ஒரு கவிஞன் கனவு காணவில்லையென்றால், அவன் உள்ளத்தளவில் இறந்துவிட்டான் என்பது பொருள். கவிஞன் காணும் கனவுகளே எதிர்காலத்தில் சமுதாயச் சட்டங்களாகவும் அரசியற் சட்டங்களாகவும் உருப்பெறுகின்றன.

இலண்டனில், வட்டமேஜை மாநாடு நடந்தபோது இசுலாமிய நண்பர்கள் கூட்டமொன்றில் கவிஞர் முகமது இக்பால், முதன்முதலாக ''பாகிஸ்தான்'' தனிநாடு கோரிக்கை பற்றிய கருத்தை வெளியிட்டாராம். இதை ஃபிரான்க் மொரேய்ஸ், ஜின்னாவிடம் கூறினாராம்.

இதைக் கேட்ட ஜின்னா ஒரு கேலிச் சிரிப்பை உதிர்த்து விட்டு, ''நண்பனே! இக்பால் அரசியல்வாதிஅல்ல என்பது உனக்குத் தெரியாதா? அவர் ஒரு கவிஞர். கவிஞர்கள் கனவு காண்பார்கள்'' என்று குறிப்பிட்டாராம். ஆனால் இக்பால் கண்ட கனவு ஜின்னாவின் காலத்திலேயே நனவாகி விட்டது.

''உலகத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பெரிய ஆபத்து அணுகுண்டு அன்று; வேகமாக வளர்ந்து வரும் மக்கட் பெருக்கம்தான்'' என்பதை ஆல்டஸ் ஹக்ஸ்லி போன்ற மேலைநாட்டு மேதைகள் உலக அரங்கில் முழக்கம் செய்தனர். இந்திய நாட்டு அரசியல்வாதிகள் யாரும் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி நினைக்காத நேரத்தில்

காதலுக்கோர் வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்; இதிலென்ன குற்றம்?

என்று முழக்கமிட்டவர் பாவேந்தர். இந்திய அரசாங்கத்தின் இருபது அம்சத்திட்டத்தில் அது முக்கியத் திட்டமாகிவிடவில்லையா? பாவேந்தர் கண்ட கனவுகள்தாம், தமிழக அரசின் தலைவிதியையே மாற்றி அமைத்துள்ளன. கடந்த கால் நூற்றாண்டுகளாகத் தமிழக அரசியலுக்கு ஊக்கச் சக்தியாக விளங்குவதும் பாவேந்தர் கனவுகளே. பாவேந்தருடைய பாட்டு வரிகளை மேற்கோள் காட்டிப் பேசாத அரசியல் மேடை, தமிழ்நாட்டில் இல்லை. அவர் தமிழரின் குருதியோட்டத்தில் கலந்துவிட்டார்.

நெப்போலியன் ஜெர்மனியைக் கைப்பற்றியதும் முதல் வேலையாக, கவிஞர் கெதெ இருக்குமிடத்தைத் தானே தேடிச் சென்று அவரிடம் பேசி மகிழ்ந்தான். பாவேந்தர் பாரதிதாசனைப் பெருந்தலைவர் காமராஜர் முதல் ஜீவானந்தம், ராமமூர்த்தி உட்பட பல கட்சித் தலைவர்களும் நேரில் வந்து கண்டு பேசி மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர்.

பேரறிஞர் அண்ணா பாவேந்தருக்கு எதிரில், நின்று கொண்டுதான் பேசுவார். 'அண்ணாத்துரை உட்கார்' என்று பாவேந்தர் வற்புறுத்தினாலும் உட்காரமாட்டார். பாவேந்தரின் ஆளுமை அத்தகையது.

பாவேந்தரைப் போன்ற ஒரு பெருங்கவிஞரைப் பெற்று உலகுக்குக் கொடுத்ததற்காகப் புதுச்சேரி புகழ்மிக்க வரலாற்றைப் பெறுகிறது; புதுச்சேரியின் மற்ற புகழெல்லாம் இதற்கு அடுத்தாற் போலத்தான்.

வள்ளுவர் கோட்டம் போலப் பாவேந்தர் கோட்டம் ஒன்றைப் புதுவையில் நிறுவ வேண்டும்; இது புதுவை அரசின் கடமை. பாவேந்தருக்குத் தனித்துறை (Chair) அமைத்து, அவர் நூல்களை ஆய்வு செய்து மொழி பெயர்த்து, உலக அரங்கில் பரப்புவது புதுவைப் பல்கலைக் கழகத்தின் கடமை. வளர்க பாவேந்தர் புகழ்.

சுரதா

சுரதாவின் பேச்சும் எழுத்தும் சுவை யானவை. ஏன்? சுரதாவே மிகச் சுவை யானவர். அவரோடு பேசிக்கொண்டிருப் பது காதலியோடு பேசிக் கொண்டிருப்பது போலிருக்கும்; நேரம் போவதே தெரியாது.

ஒரு நாள் மாலை, நானும் கவிஞர் அப்துல் ரகுமானும் சுரதாவை மெரீனாக் கடற் கரைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்து, அவரைப் பற்றியும், அவருடைய கவிதைக் கொள்கை பற்றியும், அவருடைய படைப்புகள் பற்றியும் இரண்டு மணிநேரம் ஓயாமல் கேள்விகள் கேட்டோம். அவரும் சலிப்பில்லாமல் பதில் கூறினார்.

சுரதாவைப் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்னால், அவரோடு நாங்கள் மேற் கொண்ட உரையாடலை வெளியிட்டால், படிப்பவர்கள் அவரைப் புரிந்துகொண்டு அவர் பற்றிய ஆய்வினைப் படிக்க வசதி யாக இருக்கும் என்ற எண்ணத்தோடு கேள்வி—பதில் வடிவிலே அதை இங்கு வெளியிட்டிருக்கிறேன்.

கேள்வி : நீங்கள் பிறந்த ஊர் எது?

பதில் : தஞ்சை மாவட்டத் திருநாகேசுரம்; ஞானியார் அடிகள் பிறந்த ஊர்.

கேள்வி : கவிதை விருப்பம் இளமையில் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

பதில் : ஒப்பாரி, வள்ளுவன் கூறும் ஜோதிடப் பாடல், குறி சொல்லும் குறத்திப் பாடல், ஏணி ஏற்றம் ஆகியவற்றைச் சிறுவயதில் விரும்பிக் கேட்கும் பழக்கம் உண்டு. பள்ளியில் படிக்கும்போதே பாட்டெழுதுவேன். நான் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடலை, எம் பள்ளி மாணவர்கள் பாடுவார்கள். அப்போது எனக்கு வயது பதினான்கு.

கேள்வி : நீங்கள் இளமையில் யாரிடமாவது பாடம் கேட்டதுண்டா?

பதில் : ஒரத்தநாடு பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது, நந்திக் கலம்பக உரையாசிரியர் அருணாசல தேசிகரிடம் கொஞ்சநாள் இலக்கண இலக்கியப் பாடம் கேட்டதுண்டு. பேராசிரியர் இலக்குவனாரும் அப்போது அப்பள்ளியில் மாணவராக இருந்தார்; பத்தாம் வகுப்பரை படித்தேன்.

கேள்வி : இளமையில் உங்களைக் கவர்ந்த கவிஞர்கள் யார் யார்?

பதில் : நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சுத்தானந்த பாரதியின் பாடல்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வரும். முதலில்

அவரைப் பின்பற்றி எழுதினேன். பழையனூரில் டீக்கடை வைத்திருந்த அழகப்பன் என்பவர் பாரதிதாசன் கவிதைகளை எனக்கு அறிமுகப் படுத்தினார். அவர் பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர் ஒருநாள் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியை எனக்கு அவர் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அன்றிலிருந்து என் உள்ளத்தில் இடம் பிடித்திருந்த சுத்தானந்த பாரதி 'அவுட்'.

கேள்வி : பாவேந்தர் தொடர்பு எப்போது ஏற்பட்டது?

பதில் : 1941 ஜனவரி 14-ஆம் நாள். அன்று தைப் பொங்கல்.

கேள்வி : பத்திரிகையில் நீங்கள் கவிஞராக அறிமுக மானது எப்போது?

பதில் : என்னை முதன்முதலில் கவிஞராக அறிமுகப் படுத்தியவர் கவிஞர் திருலோக சீதாராம். தாம் நடத்தி வந்த 'சிவாஜி' யில் என் கவிதைகளைத் தொடர்ந்து பத்து வாரம் வெளியிட்டு என்னை விளம்பரப்படுத்தினார். புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த 'தலைவன்' பத்திரிகையில் கொஞ்ச நாள் துணையாசிரியராகப் பணி யாற்றினேன்.

கேள்வி : பாவேந்தருக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி?

பதில் ; பாவேந்தரின் ஆற்றல் பரந்து பட்டது. அவருடைய தொடர்பு என்னைக் கவிஞனாக உயர்த்தியது. பாவேந்தரோடு நான்காண்டுகள்

நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பாவேந்தருடைய கவிதை நூல்களைப் படியெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த காரணத்தால், அவருடைய உத்திகளைப் புரிந்து கொண்டேன். எனது கவிதைத் துறைக்குப் பாவேந்தரே வழிகாட்டி. ஆனால் நான் அவரைப் பின்பற்றி எழுதவில்லை. ஒரு பெருங் கவிஞரைப் பின்பற்றி எழுதினால், நம்முடைய சொந்த வளர்ச்சி பத்தாண்டுகள் பின் தங்கி விடும்.

கேள்வி : யாரையும் பின்பற்றாமல் புதிய முறையில் எழுதவேண்டும் என்று நீங்கள் நினைக்கக் காரணம் என்ன?

பதில் : நான் ஒரு நாத்திகன். கவிதை ஒரு வரப் பிரசாதம் என்பதை நான் மறுக்கிறேன். கடுமையாக உழைத்துப் பழைய புலவர்களை வென்று காட்ட வேண்டும் என்ற ஆர்வம் என்னை இளமையில் உந்தித் தள்ளியது. எனக்கு இத்தகைய நம்பிக்கையும், மன உறுதியும் ஏற்பட்டதற்குக் காரணம் பெரியாரின் கொள்கையில் எனக்கிருந்த ஈடுபாடுதான்.

கேள்வி : கவிதை ஆற்றல் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில் : பிறவியிலேயே ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்பதெல்லாம் பித்தலாட்டம். ஒரு பொருளையோ, அல்லது நிகழ்ச்சியையோ பார்த்து உணர்ச்சிவசப்பட்டுப் பாடுதல் என்ற பழக்கமும் எனக்குக் கிடையாது. எந்தப் பொருளைப் பற்றியும் உட்கார்ந்து சிந்தித்துத் தான் எழுதுவேன். பிள்ளை பெறவேண்டும்

என்பதற்காகப் புணர்வதில்லை; அதுபோலக் கவிதை ஆவேசத்துக்காக எப்பொருளையும் பார்ப்பதில்லை.

கேள்வி : கற்பனை ஆற்றல் பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில் : கவிதைக்குக் கற்பனை தேவையில்லை. கண்ணாடி, எதிரில் உள்ள உருவத்தைத்தான் காட்டும்; வேறு உருவத்தைக் காட்டுவதில்லை. உலகத்தை அப்படியே காட்டுவதுதான் கவிதை. ஒன்றை ஒன்றோடு ஒப்பிட்டுச் சிந்திப்பதுதான் கவிதைக் கொள்கை. நான் பச்சையப்பன் கல்லூரியில் பேசும்போது இக்கருத்தை வெளி யிட்டேன். டாக்டர் மு. வ. இக்கருத்தைப் பாராட்டினார்.

கேள்வி : உங்கள் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணம் என்ன?

பதில் : நுட்பமான சிந்தனை; ஒதுங்கிய சிந்தனை. ஒரு கவிஞன் சிறந்த சிந்தனையாளனாக இருக்க வேண்டும். நான் கவிதையில் எந்தக் கருத்தைச் சொன்னாலும், எனக்கு முன் வாழ்ந்த கவிஞர் கள் சொன்ன முறையிலிருந்து மாறிப் புதுமை யாகச் சொல்ல வேண்டும் என்று நினைப்பேன். சற்று ஒதுங்கிச் சிந்திப்பேன். வெள்ளை முயலை பார்த்தவுடன் 'தும்பைப் பூப் போன்ற வெள்ளை முயல்' என்றும், 'பஞ்சுடல் பசுங் கண் பாய்முயல்' என்றும் பொதுவாகப் பிற கவிஞர்கள் குறிப்பிடுவர். ஆனால் நான் ஒதுங்கிச் சிந்தித்துச் 'சலவை முயல்' என்று வேறுவிதமாகச் சொன்னேன். இதுதான் என் வெற்றிக்குக் காரணம்.

கேள்வி : நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் யாவை? ஏன்?

பதில் : கல்லாடம், திருக்குறள், நாலடியார், தல புராணங்கள், 17 - 18 ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் எழுதிய சிறு பிரபந்தங்கள் ஆகிய வற்றை விரும்பிப் படிப்பதுண்டு. கொள்கை அளவில் புராண நூல்களை நான் வெறுத் தாலும், அவற்றை எழுதிய கவிஞர்களின் ஆற்றலை மிகவும் மதிக்கிறேன். பேராற்றல் மிக்க கவிஞர் பலர் ஊர் பேர் தெரியாமல் அழிந்து போனார்கள்; அவர்களுக்காக வருத்தப் படுகிறேன். நான் படிக்கும்போது பாடலை அதிகமாகச் சுவைப்பதில்லை. அதில் பயன் படுத்தப்பட்டுள்ள கவிதை உத்திகளைத்தான் அதிகம் சுவைப்பேன்.

கேள்வி : கவிதை எப்படி இருக்க வேண்டும்?

பதில் : முத்தத்தைப் போல் சுவையாகவும் சுருக்கமாக வும் இருக்க வேண்டும். சிறிய கவிதைகள் எழுதி வெற்றிபெறப் பெரிய ஆற்றல் வேண்டும். சொற் சுருக்கம் எனக்குப் பிடிக்கும். தாழம்பூவை மடித்துத் தலையில் செருகவேண்டும்; அதுபோல சொற்களை மடித்துக் கவிதையில் செருக வேண்டும். சங்க இலக்கியத்தின் வெற்றியே சொற் சுருக்கத்தில்தான்! நல்ல கவிதைகளை எழுதுவதற்கு மிகவும் கடினமான உழைப்புத் தேவை. கவிதை எழுதுவதைவிட ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்.

கேள்வி : நீங்கள் உங்கள் பாடல் வரிகளை பதிப்புக்குப் பதிப்பு மாற்றி விடுகிறீர்களே! ஏன்?

பதில் : அது என் வளர்ச்சியின் அடையாளம். ஒரு பெண் பருவ முதிர்ச்சி அடைந்த பிறகு தாவணிக்கு மாறுவது போல.

கேள்வி : கதைக் கவிதைகளை நீங்கள் விரும்பி எழுதக் காரணம் என்ன?

பதில் : சொல்ல விரும்பும் கருத்தைக் கதைக் கவிதையாகச் சொன்னால்தான் படிப்பவர் உள்ளத்தில் நிலைக்கும்படி சொல்ல முடியும். எனவே என் சொல்விளக்கப் பாடல்களைக் கதைக் கவிதையில் தொடங்கிக் கருத்து விளக்கத்தோடு முடிக்கிறேன்.

கேள்வி : 'செக்ஸ்' உங்கள் பாட்டில் அதிகம். ஏன்?

பதில் : அது நிலைபேறு பெற்ற 'சப்ஜெக்ட்'. சிறந்த உத்தி. மேலும் பாமரன் முதல் படித்தவன் வரை எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய பொருள் (theme). இந்து, புராண இதிகாசங்களை மட்டும் புரிந்து கொள்வான்; கிறித்தவன், பைபிளை மட்டும் புரிந்து கொள்வான்; முகம்மதியன், குரானை மட்டும் புரிந்து கொள்வான். ஆண்டவனைப் புரிந்து கொள்வதிலும் இப்படிப் பாகுபாடு உண்டு. ஆனால் இவர்கள் எல்லாருமே காதலைப் புரிந்து கொள்கிறார்கள் இல்லையா? எனவே காதலுக்கு ஆண்டவனை விடப் பரப்பு அதிகம். மேலும் நம் நாட்டுப் பக்தர்களுக்கு, ஆண்டவனையே படுக்கை அறைக்குள் அனுப்பி வைத்து, நாயக நாயகி பாவத்தில் பாடினால்தான் புரியும். காதல் ஆண்டவனுக்கும் அறிமுகமாக அமைகிறது.

கேள்வி : உங்கள் தகுதிக்குச் சுவரும் சுண்ணாம்பும் தேவைதானா?

பதில் : அதை ஒரு காரணத்துக்காக எழுதினேன். கவிதை ஒரு வீர வழிபாடு ஆகிவிட்டது. காதல், வீரம், பக்தி என்ற இம்மூன்று பொருளைப் பற்றி எழுதுவதுதான் கவிதை மரபாகத் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. அம்மரபை மட்டந்தட்ட எழுதப்பட்டதுதான் சுவரும் சுண்ணாம்பும்.

கேள்வி : கவிதையைப் பற்றி நீங்கள் கடைசியாகக் கூற விரும்புவது என்ன?

பதில் : ஒரு கவிஞன் எழுதுவதெல்லாமே கவிதையாகி விடுவதில்லை. சிலவே கவிதை அந்தஸ்து பெறுகின்றன; தன் படைப்புக்குக் கவிதை அந்தஸ்தைத் தேடித் தரக் கவிஞன் கடினமாக உழைக்க வேண்டும். மூக்கில் நுழைவதுதான் மூச்சு; முதுகைத் தடவிச் சென்றால் அது காற்றுத்தான்.

சுரதா
அரும்பிய
நேரம்

தமிழ்க் கவிதையின் உள்ளடக்கத்திலும், உருவத்திலும், உத்தியிலும் பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்தவன் பாரதி. பாரதி இருபதாம் நூற்றாண்டுக் கவிதையின் முதற்பாகம். பாரதிதாசன் இரண்டாம் பாகம்; சுரதா மூன்றாம் பாகம்.

கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை பாரதியின் நிழல்; தேசிக விநாயகம் பிள்ளை, ச. து. சு. யோகி, சுத்தானந்த பாரதி மூவரும் பாரதியின் அங்கங்கள். பாரதி ஒரு சகாப்தம் என்றால் பாரதிதாசன் அடுத்த சகாப்தம். முதலில் பாரதியைப் பின்பற்றிப் புரட்சிக் கவி, சஞ்சீவி பர்வதத்தின் சாரல் ஆகியவற்றைப் பாரதியின் சாயலில் எழுதிய பாரதிதாசன், பின்னால் எழுதிய படைப்புக்களில் முற்றிலும் வேறுபடுகிறார்; சில இடங்களில் முரண்படு கிறார். தமக்கென்று தனித் தன்மையுள்ள ஒரு பாதையை வகுத்துக் கொள்கிறார்.

'எங்கெங்கு காணினும் சக்தியடா'-என்று தொடங்கும் பாடலுக்குக் கீழே உள்ள 'பாரதிதாசனை' அடித்துவிட்டு 'பாரதி' என்று போட்டு விடலாம். அந்த அளவு முழுமை யான பாரதி ஆதிக்கம் அப்பாடலில் உள்ளது. என்றாலும், பிற்காலத்தில் பாரதியை விட்டுப் பாரதிதாசன் ஒதுங்கக் காரணம் என்ன? தமிழர் மறுமலர்ச்சி இயக்கமான திராவிட இயக்கத்தின்பால் கொண்ட பற்றும் ஈடுபாடும் தான் காரணம்.

திராவிட இயக்கம் தனது வளர்ச்சிக்குச் சில அரசியல் சமுதாயக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருந் தாலும், தமிழ் மொழியின் மறுமலர்ச்சியையும், பண்டைத் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சியையும் வலுவான காரணங்களாகவும் கொண்டிருந்தது. எனவே தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும் இயல்பாகவே இவ்வியக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டனர். எனவே பாரதிதாசன் திராவிட இயக்கத்தோடு தம்மை இணைத்துக் கொண்டது தவிர்க்க முடியாத ஒன்று.

தமிழ்ப் புலவர்கள் எதற்கெடுத்தாலும் சங்க இலக்கியங் களை மேற்கோள் காட்டிப் பேசினர். 'சங்க காலம்' ஒரு மந்திரச் சொல்லாயிற்று பள்ளியிலும் கல்லூரியிலும்

படித்துக் கொண்டிருந்த இளைய தலைமுறையினர் 'சங்க கால உடோபியா' பற்றிய கனவுகளில் வளர்ந்தனர். சங்க இலக்கியங்கள் புரியாவிட்டாலும் அதில் என்னதான் மாயமந்திரம் புதைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் குடைச்சல் அவர்களுக்கு மிகுதியாக இருந்தது. அந்த நேரத்தில்தான் டாக்டர் மு வ. போன்ற 'வியாக்கியான கர்த்தாக்கள்' தோன்றிச் சங்க இலக்கியச் சாரத்தைக் காட்சி காட்சியாக வரிசை வரிசையாகப் புற்றீசல் போல வெளியிட்டனர், தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சி, திராவிட இயக்க எழுச்சியால் சூடு பிடித்துக் கொண்டது. பாரதிதாசன் அந்த இயக்கத்தின் ஈட்டி முனையானார். அவர் படைப்புக்கள் புதிய திருப்பத்தையும், தீவிரத்தையும் புதிய பரிமாணத்தையும் பெற்றன. பாரதி-பாரதிதாசன் விரிசல் பெரிதாகியது. அரசியல் காரணங்களும் சேர்ந்து கொண்டதால், இருவருடைய சங்க நாதங்களும் வேறு பட்டு வெவ்வேறு திசையில் ஒலிக்கத் தொடங்கின. பாரதிதாசன் என்ற புதிய சகாப்தம் தோன்றியது. புதிய தமது தசாங்கத்தோடு, தமது ஆளுகைக்குட்பட்ட கவிதை ராச்சியத்தில் பவனி வரத் தொடங்கிவிட்டார் பாரதிதாசன். அவருக்கென்று தனிப் பரிவாரம் சேர்ந்து விட்டது. அவருடைய கொடி உயரப் பறக்கத் தொடங்கி விட்டது. பாரதிதாசன், கடந்த நாற்பதாம் ஐம்பதாம் ஆண்டுக் காலக் கட்டத்தில் இடிமுழக்கமாக, புயலாக, கொடிமின்னலாகக் கவிதை வானில் ஆற்றலோடு வெளிப் பட்டார். அவர் பாட்டு வரிகள் 'மோசஸின் பத்துக் கட்டளைகளாக' திராவிட இயக்க இளைஞர்களின் நெஞ்சில் இறங்கின. பாரதிதாசனுக்கு ஒரு பரம்பரை தோன்றத் தொடங்கியது. ஓர் இளங்கவிஞர் வரிசை அணிவகுத்து நின்றது. அந்த அணிவகுப்பின் கடைசி வரிசையில் உயரமாக, சற்று வித்தியாசமான தோற்றத் தில் நின்றவர் சுரதா.

பாரதிதாசனின் அருகில் மாணவர்களாக இருந்து பாடங் கேட்டவர்களில் சிலர், அவரைப் போல் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தில் அவரை நூற்றுக்கு நூறு பின்பற்றிக் கடைசியில் அவரோடு கலந்து கரைந்து விட்டனர். அந்த இளங்கவிஞர்களின் படைப்புக்கள் பாரதிதாசன் படைப் புக்களின் நகல்களாகி விட்டன.

சுரதா என்று பிற்காலத்தில் அழைக்கப்படும் சிக்கல் ராஜகோபாலன் பாரதிதாசனை வந்தடைந்த போது இருபது வயது கூட நிரம்பாத இளைஞர். அந்த வயதில் அவருக்கென்று தனிப்பட்ட கவிதைக் கொள்கை எதுவும் உருவாகியிருக்க நியாயமில்லை. அவர் அப்போது கைபடாத பச்சைக் களிமண். அப்போது பாரதிதாசன் சுரதாவுக்குக் கொடுத்த வேலை, தாம் எழுதும் கவிதைகளை நகல் எடுப்பதுதான். தமிழ்க் கவிஞர்களுள் சுரதாவின் கையெழுத்து மிகவும் அழகானது என்பது குறிப்பிடத் தக்கது. தெளிவான அழகிய சுரதாவின் கையெழுத்து, பாரதிதாசனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. பாண்டியன் பரிசை மூன்று தடவை நகல் எடுக்கச் சொல்லி இருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

எப்போதுமே ஒரு பாடலைப் படிப்பதைவிட, எழுதும் போது அதில் ஒரு லயிப்பு ஏற்படும். பாரதிதாசன் பாடல் களை ஓயாமல் நகலெடுத்து, அவற்றில் ஆழமான மெய் மறந்த லயிப்பும், ஈடுபாடும் சுரதாவுக்கு ஏற்பட்டுவிட்டது. நகல் எடுக்கும் போதெல்லாம் பாரதிதாசன் பாணியும், அவர் கையாளும் புதிய உத்திகளும் அவரைச் சிந்திக்க வைத்தன. பிறர் பாடல்களோடு பாரதிதாசன் பாடல் களை ஒப்பிட்டுப் பார்த்து வியந்தார். ஆனால் பாரதி தாசனைப் 'போல' எழுத வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்படவில்லை. பாரதிதாசனைப் போல் அல்லாமல், அவரிடமிருந்து வேறுபட்டும், அவரைவிடச்

சிறப்பாகவும் எழுத முயற்சித்தால் என்ன என்று சிந்திக்கலானார். ஓரிரு பாடல்களை எழுதி, தம்முடையது என்று சொல்லாமல் தம்முடைய நண்பனுடையது என்று சொல்லிப் பாரதிதாசனிடம் காட்டியிருக்கிறார். தம்முடையது என்று சொல்லிக் கொள்ள அச்சம்! பாரதிதாசன் உள்ளத்து உணர்ச்சிகளைப் பச்சையாக வெளிப்படுத்துபவர். அவரிடம் பாராட்டுப் பெறுவது அவ்வளவு எளிதன்று. 'ஊம் நல்லாத்தா இருக்குது' என்று சொல்லி விட்டாலே அது பெரிய பாராட்டு! பிழை இருந்தால் கசக்கி மூஞ்சியில் அடித்து விடுவார். 'உன்னையெல்லாம் எவ கவிதை எழுதச் சொன்னான்?' என்று, சொல்லி னாலேயே விளாசி விடுவார்.

சுரதா நீட்டிய கவிதையைப் பார்த்துவிட்டு 'ஊம் நல்லாருக்கு..... பக்குவப்பட்டவன் எழுதற கவிதை மாதிரி இருக்கு!' என்று சொல்லியிருக்கிறார் பாரதிதாசன். அது சுரதா வளர்ச்சியின் முதற்படி. சுரதா-பாரதிதாசன் தொடர்பு இப்படி நான்காண்டுகள் நீடித்தது. சுரதா தம்மையறியாமலே தமக்குள் ஒரு புதிய வளர்ச்சியைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தார்.

16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியை ஆங்கிலப் பேரரசின் பொற்காலம் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். புகழ் பெற்ற முதலாம் எலிசபெத் பேரரசியின் ஆட்சிக் காலம் அது. ஷேக்ஸ்பியர், பென் ஜான்சன் போன்ற நாடக மேதைகள் அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்தனர். அவர்களை அடுத்து மெய்விளக்கக் கவிஞர்கள் (Metaphysical Poets) தோன்றினர். இவர்களது கவிதைகள், இவர்களுக்கு முன் எழுதப்பட்ட மறுமலர்ச்சிக் கவிதைகளின்றும் (Renaissance Poetry), சீர்திருத்தக் கவிதைகளின்றும் (Poetry of Reformation) எழுதும் முறையிலும் உள்ளடக்கத்திலும் மாறுபட்டுப் புதிய பாணியில் தோன்றின.

ஒரு கனி முற்றிக் கனிந்த பிறகு அழுகத் தொடங்குவது போல், ஒரு காலகட்டத்தில் சிறப்பாக விளங்கும் ஒரு கவிதை இயக்கம் தனது உயர்ந்த நிலையை எட்டிய பிறகு சீர் குன்றத் தொடங்குகிறது. எலிசபெத் ஆட்சிக் காலத்தில் கொடிகட்டிப் பறந்த மறுமலர்ச்சி - சீர்திருத்தக் கவிதை இயக்கங்கள் வலிகுன்றத் தொடங்கின. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் தோற்றுவிக்கப்பட்ட புதிய சிந்தனைப் போக்குகளும், வானவியல் ஆராய்ச்சியும், அறிவியல் அடிப்படையில் கோபர்நிகஸ், கெப்ளர், கலீலியோ போன்ற மேதைகள் வெளியிட்ட கருத்துக்களும் கவிஞர்களின் சிந்தனையில் பெரிய மாற்றங்களைத் தோற்றுவித்தன. கவிதைகளுக்குப் புதிய பரிமாணங்களும், உள்ளீடுகளும் கிடைத்தன. கவிதை, தான் சென்று கொண்டிருந்த பாதையை மாற்றிக் கொண்டது.

17-ஆம் நூற்றாண்டில் ஜான்டன், ஜியார்ஜ் ஹெர்பர்ட், ஹென்றி வாகன், ரிச்சர்ட் க்ராஷா, தாமஸ் கேரு, ஆண்ட்ரு மார்வல், அப்ரகாம் கௌலி, ராபர்ட் ஹெர்ரிக் என்ற கவிஞர்கள் மெய் விளக்கவியலைக் கவிதையில் தோற்றுவித்து, ஆங்கிலக் கவிதையின் போக்கையே மாற்றி னர். ஸ்பானியக் கவிஞரான கங்கோராவின் படைப்புக் களும், இத்தாலியக் கவிஞரான மாரினியின் படைப்புக் களும் இதே அடிப்படையில் தோன்றியவைதான்.

தமக்கு முற்பட்ட கவிதை மரபில் இருந்த தேக்கத்தைப் போக்கி, புதிய சிந்தனைகளை புதிய பாணியில் சொல்ல வேண்டும் என்ற ஆர்வமே மெய்விளக்கக் கவிதைகளின் தோற்றத்துக்கு அடிப்படைக் காரணம். தாம் கூறுவதை அறிவு நுட்பத்தோடு, உணர்ச்சி பொங்க, நாடகப் பாங்கில் கூற இவர்கள் விரும்பினர்.

''பொங்கும் உணர்ச்சியில் கவிதை தோன்றுகிறது'' என்ற கொள்கையில், இவர்களுக்கு உடன்பாடு இல்லை. புலமை-யோடு கூடிய ஆழ்ந்த சிந்தனையிலிருந்து வெளிப்படுவதே கவிதை என்பதில் இவர்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டி-ருந்தனர். *உள்ளமும் ஆன்மாவும் கலந்து, உணர்ச்சிவசப்-பட்டுக் கிளம்பும் சிந்தனையே கவிதையென்று இவர்கள் கருதினர்.

ஆங்கில மேதையான சாமுவேல் ஜான்சன் இவர்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

''பதினேழாம். நூற்றாண்டில் தோன்றிய மெய்விளக்கக்-கவிஞர்கள் நல்ல படிப்பாளிகள்; தாம் கற்றதையெல்லாம் கவிதையில் கொட்டிக்குவிக்க இவர்கள் விரும்பினர். எனவே, இவர்கள் படைப்பு கவிதையாக இல்லாமல் வெறும் செய்யுளாக அமைந்தது. இவர்களுடைய சிந்தனை யில் தோன்றிய கருத்துக்கள் புதுமையாக இருந்தன; ஆனால் இயல்பாக இல்லை. மேலும் அவை பொருத்தமில்-லாமலும், தெளிவற்றும் இருந்தன. இவர்கள் கையாண்ட படிமங்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாதபடி அமைந்-திருந்தன. கதம்பமான கருத்துக்களைக் கவிதை ஏரில் வலியப் பூட்டினர். உவமைகளுக்காகவும், மேற்கோள்களுக்-காகவும், கருத்து வெளிப்பாட்டுக்காகவும், இயற்கையழ-கையும், கலையுணர்ச்சியையும் சிதைத்தனர்''

மெய்விளக்கக் கவிஞர்களைப்பற்றி ஜான்சன் மேலே குறிப்-பிட்டுள்ள கருத்துக்கள் முழுவதும் ஏற்றுக் கொள்ளத்-தக்கவை அல்ல. அவற்றுள் ஓரளவு உண்மை இருக்கலாம். இக்குறைபாடுகள் எல்லாக் கவிஞர்களிடமும் சில இடங்-களில் ஏற்படுவதுண்டு. புதுமைக்கவிஞரான டி. எஸ். எலியட், 'மெய்விளக்கப்பாடல்கள், சிந்தனையின் நேரடி-

---

* It was in fact, a wedding-bed of the mind and soul, of thought and emotion. — R. L. VARSHENEY.

யான உணர்ச்சியின்பம் என்றும், சிந்தனையின் உணர்ச்சி வடிவம் என்றும் பாராட்டிக் கூறுகிறார். இருபதாம் நூற்றாண்டுப் புதுக்கவிதை மறுமலர்ச்சிக்கு 17-ஆம் நூற்றாண்டில் விதைத்த விதையே மெய்விளக்கப்பாடல்கள்' என்று கவிதை ஆராய்ச்சியாளர் சிலரும் குறிப்பிடுகின்றனர்.

மெய் விளக்கக் கவிஞர்கள், தமக்கு முன்பு வாழ்ந்த கவிஞர்கள் சொல்லாததைச் சொல்ல விரும்பினர்; எனவே மரபு வழிச் சிந்தனையிலிருந்து ஒதுங்கிச் சிந்திக்க விரும்பினர்.

காதல், பக்தி இரண்டையும் தமது முக்கிய பாடு பொருள்களாகக் (Theme) கொண்டனர். இவர்களுக்கு முன் கவிஞர்கள் தொடாத அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளையும் எளிய அனுபவங்களையும் அன்றாட பேச்சு மொழியில் அழகாகச் சொல்ல விரும்பினர். கேட்பவர் வியக்கும் வண்ணம் எதையும் துணிச்சலோடு கவிதையில் கூறுவது இவர்கள் வழக்கம்.

புதுமையான படிம உத்தியும் (Novelty of Images), கடின உருவகங்களும் (Strained Metaphors), தொலை உவமைகளும் (Far-fetched Similes), மிகையான உயர்வு நவிற்சியும் (Extravagant Hyperbole) மெய் விளக்கக் கவிதைகளின் பொதுவான பண்புகள் ஆகும்.

''தெளிவான சூரிய ஒளிக் கற்றையை முப்பட்டைக் கண்ணாடியில் செலுத்தி, அதன் ஒளியை வண்ண வேறுபாடுகளாகச் சிதறச் செய்வது போல், செயற்கையான தமது தத்துவ விளக்கத்தாலும், தர்க்கத்தாலும், குறுக்கு வழியில் கற்ற அறிவு விசாலத்தாலும் (out of the way learning). கவிதையை நிரப்பி, இயற்கையழகையும் வாழ்க்கையுண்மைகளையும் சிதறடித்து விடுகிறார்கள்'' என்று ஜான்சன் மெய்விளக்கக் கவிஞர்களைப் பற்றிக் குறிப்பிடுவது ஓரளவு

உண்மை. இவர்கள் சொல்ல வந்த கருத்தைவிட, சொல்லு கின்ற முறைக்கு அதிக மதிப்பளித்தனர்.

புதுமை விருப்பத்துக்காக இவர்கள் பழைய மரபுகளை மீறத் தயங்கவில்லை; தெளிவற்ற படிமங்களையும், நம்ப முடியாத கற்பனைகளையும் புதுமை கருதிக் கையாண் டனர். சொல்லும் கருத்துக்களை விரசமாகவும், கொச்சை யாகவும் இவர்கள் சொல்லத் தயங்கியதில்லை. சுதந்தர மாகவும், காரண காரியத்தோடும் சிந்தித்த இவர்கள், பிறரைச் சாடும் அங்கதப் பாடல்களில் (Satires) மிகவும் வலிமையான கடுமையான சொற்களைக் கையாளச் சிறிதும் தயங்கியதில்லை.

இந்த மெய் விளக்கச் சட்டையைச் சுரதாவுக்கு மாட்டுவது எனது நோக்கமன்று. புதுமை காரணமாகச் சுரதாவின் பாட்டில், மாணவப் பருவத்திலிருந்தே எனக்கு ஒரு பிடிப்பு இருந்தது. புதிது புதிதாக அவர் படைத்த உவமைகளும் புதிய அவர் கவிதைப் பாணியும் என்னை வியப்பில் ஆழ்த்தின. அவர் கவிதை உத்திகளைப் பின்பற்ற முயற்சி செய்தபோது மிகவும் உழைக்க வேண்டியிருந்தது; அதிகம் படிக்க வேண்டியிருந்தது; ஆழமாகச் சிந்திக்க வேண்டி யிருந்தது.

ஆங்கில இலக்கியக் கவிதைகள்பால் ஆர்வம் ஏற்பட்டு நான் அவற்றை படித்துக் கொண்டிருந்த காலத்தில், கவிஞர் அப்துல் ரகுமான் ஒருநாள் பேச்சுவாக்கில் இந்த மெய்விளக்கக் கவிஞர்களைப் பற்றி வியந்து பாராட்டிக் கூறினார். ரிச்சர்ட் க்ராஷா என்ற மெய்விளக்கக் கவிஞர் மேரி மக்தலேனாவைப் பற்றி எழுதியுள்ள 'The Weeper' என்ற கவிதையிலிருந்து சில வியக்கத்தக்க வரிகளை எடுத்-துச் சொன்னார். உடனே என் கவனம் ஆங்கில மெய் விளக்கக் கவிஞர்களின் பக்கம் திரும்பியது. அவற்றைப்

ரடிக்கத் தொடங்கியதும் சட்டென்று சுரதா என் உள்ளத்தில் வந்து நின்றார். கவிதை உத்தியிலும், சிந்தனைப் போக்கிலும் சுரதாவுக்கும் ஆங்கிலக் கவிஞர்களுக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதைப் படிக்கப் படிக்கப் புரிந்து கொண்டேன்.

மெய்விளக்கக் கவிதைகளில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டதும் அக்கவிதைப் பண்புகளைப் பற்றியும், அவற்றைப் படைத்த கவிஞர்களின் வரலாறு பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. மெய் விளக்கக் கவிதை பற்றிய திறனாய்வு நூல்களைப் படிக்கத் தொடங்கினேன். சுரதாவின் கவிதைப் பாணி தோன்றுவதற்குரிய காரணங்கள் பற்றியும், மாறுபட்ட அவர் கவிதை உத்திகள் பற்றியும் சிந்தித்தபோது, என் உள்ளத்தில் சில பொருத்தமான கருத்துக்கள் தோன்றின. அக்கருத்துக்களைத் தமிழ்க் கவிதை விரும்பிகளோடு பகிர்ந்து கொள்ளலாம் என்ற நோக்கோடு இக்கட்டுரையை எழுதுகிறேன்.

முதலில் சுரதாவின் கவிதைப் பாணி தோன்றுவதற்குரிய காரணங்களை ஆராய்வோம். பாரதி பாரதிதாசன் காலத்தில் விருத்தப்பாக்கள் மறுமலர்ச்சியுற்றன. பாரதிதாசன் எண்சீர் விருத்தங்களை மிகவும் ஆற்றலோடு கையாண்டார்.

சுரதாவின் கவிதைப் பாணி

விருத்தத்தில் வெற்றிபெற்றான் கம்பன்; அந்த
வெற்றியினை இவர்பெற்றார் என்னைப் போல
தடைநடையே அவரெழுத்தில் இல்லை; வாழைத்
தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு?

என்று பாரதிதாசன் விருத்தப் பாவிற்குச் சுரதா சூட்டிய புகழாரம் மிகவும் பொருத்தமானதே. பாரதிதாசன் எண்சீர் விருத்தத்தில் வெற்றி பெற்றதும், அவர் காலத்தில் குருத்துவிட்ட இளங்கவிஞர்கள் எல்லாரும் எண்சீர் விருத்தத்தையே பிடித்துக் கொண்டனர். அதுவும் உப்புச் சப்பின்றி எழுதத் தொடங்கினர். படிப்பவர்க்கு அதில் ஒருவகைச் சலிப்பும் ஏற்பட்டது.

பாரதி பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு போன்ற சிறு காப்பியங்களை எழுதினார். பாரதிதாசனும் அவரைப் பின்பற்றி சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக் கவி, பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், தமிழச்சியின் கத்தி போன்ற சிறு காப்பியங்களை எழுதிக் குவித்தார். அவரைப் பின்பற்றி எழுதிய கவிஞர்களுக்கும் இக்காப்பிய வெறி பற்றிக் கொண்டது. தனித் தன்மையோடு புதுமையான சிறு காப்பியங்களைப் படைக்க முயற்சி செய்யாமல் பாரதி, பாரதிதாசனின் காப்பியங்களை நகல் எடுக்கத் தொடங்கினர். அவற்றைப் படிக்கும் போது பாரதி பாரதிதாசன் படைப்புக்களே நினைவுக்கு வந்தன. தலைப்பு மாற்றம் தவிர, உள்ளடக்கமும் உணர்ச்சிகளும் ஒன்றாகவே இருந்தன, சில இளங்கவிஞர்கள் பாரதி பாரதிதாசன் பாத்திரப் படைப்புக்களை அப்படியே எடுத்துத் தங்கள் காப்பியத்தில் பெயர் மாற்றிச் செருகிக் கொண்டனர்.

பெண்ணுரிமை, விதவை மணம், மடமை ஒழிப்பு ஆகிய கருத்துக்களை மையமாக வைத்துக் காலத்தின் தேவைக்கேற்பச் சீர்திருத்த நோக்கோடு, கதைக் கவிதை (Story Poem) களைத் தமிழில் முதன்முதலில் படைத்தவர் பாரதிதாசன். அவரைப் பின்பற்றி இளங்கவிஞர்கள் பலர் அதே கருத்துக்களை மையமாக வைத்து நிறையக் கதைக்

கவிதைகள் எழுதத் தொடங்கினர். ஆனால் அவரை விட்டு விலகிச் சென்று கதைக் கவிதைத் துறையில் புதிய சாதனை களை யாரும் செய்யவில்லை.

பாரதிதாசன் இயற்கையைப் பற்றி எழுதிய 'அழகின் சிரிப்பு' ஒரு வெற்றிப்படைப்பு. இளங்கவிஞர்கள் அதை யும் விட்டு வைக்கவில்லை. அதன் மறுபதிப்பாகப் பல நூல்கள் தோன்றத் தொடங்கின. அவைகள் அழகின் சிரிப்பின் எதிரொலிகளாகவே இருந்தன.

பாரதிதாசன் குடும்பவிளக்கு மட்டும் அதற்கு விதிவிலக்கு. அதை யாரும் நெருங்கமுடியவில்லை. பிறர் பாடுவதற்கு அத்துறையில் பாரதிதாசன் எதுவும் மிச்சம் வைக்கவில்லை.

மேலே குறிப்பிட்ட காரணங்களால் பாரதி, பாரதிதாசன் கவிதை இயக்கம் அதிகமாகப் பழுத்து, கனிந்து, தோல் சுருங்கி அழுகும் நிலை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் சுரதா தமது புதிய கவிதைப் பாணியைத் தொடங்கினார்.

சுரதாவும் தமது கவிதைக்கு எண்சீர் விருத்தத்தைத்தான் கருவியாகப் பயன்படுத்தினார். ஆனால் அவருடைய எண்சீர் விருத்தம் பாரதிதாசனுடைய எண்சீர் விருத்தத் தினின்றும் அடிப்படையில் மாறுபட்டிருந்தது. பாரதிதாச னின் எண்சீர் விருத்தம் ஓசையினிமையோடு கூடிய கருத் துத் தெளிவினை அடிப்படையாகக் கொண்டது. சுரதா வின் எண்சீர் விருத்தம் உவமை உருவக அணிகளோடு கூடிய பொருட்செறிவை அடிப்படையாகக் கொண்டது.

1. பொதிகைமலை விட்டெழுந்து சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்து பூந் தாது வாரி
நதிதழுவி அருவியின்தோள் உந்தித், தெற்கு
நன் முத்துக் கடலலையின் உச்சி தோறும்

சதிராடி மூங்கிலிலே பண்ணை மூப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர் தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க, என்றன்
சிந்தையுடல் அணு ஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்; அதன்பேர் தென்றற் காற்று.

— பாரதிதாசன்

2. பட்டாடை கட்டிக்கொண் டிருக்கும் வெள்ளைப்
பால்நிலவோ! பளிச்சென்று மின்னும் மீனோ!
கட்டிலுக்கே விட்டுவைத்த சிலையோ! இல்லை
கண்ணாடி மண்டிலமோ! கரும்போ! பூவின்
பட்டியலோ! பொன்அந்தி வெயிலோ! கோவைப்
பழக்கொத்தின் அறிமுகமோ! படமோ! நீல
வட்டாரம் விட்டுவந்த வான வில்லோ!
வாய்பேசும் தாமரையோ! காவிக்கல்லோ!

✠ ✠ ✠

3. கண்ணேபோற் சிறந்தவளைச் சித்தூர் முத்தைக்
கண்ணாடி தனிற்கண்டு காமங் கொண்டு
புண்ணானான்; புதுக்காம ராச னானான்.
பூவையிவள் தேவையிவள்; இப்பூ வுக்கோர்
வண்டாகி விடவேண்டும்; இன்றேல் என்றன்
வாழ்நாளை விடவேண்டும்; இவள்கை பட்டால்
மண்மேடும் பொன்மேடாய் மாறும்; வான
மழைத்துளியும் வலம்புரிமுத் தாக மாறும்.

— சுரதா

---

1. தென்றல் 2. அமுதும் தேனும் 3. சித்தூர்ச் சாம்பல்

சுரதாவின் பாடலில் அடுக்கடுக்காகத் தோன்றும் உவமை உருவகங்களும்,[1] கருத்துக்களின் சுமையும் நம்மைக் கவர்ச் சிக்கின்றன. பாரதிதாசனுடைய விருத்தத்தைப் படித்து விட்டுச் சுரதாவின் விருத்தத்தைப் படிக்கும் போது அழகான குடும்பப் பெண்ணைப் பார்த்துவிட்டு அலங்காரத் தோடு வரும் சினிமா நட்சத்திரத்தைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. இந்த ரச வாதமே சுரதாவின் விருத்த வெற்றி.

தம்முடைய விருத்தம் எப்படிச் சுவையாகப் பிறப்பெடுக் கிறது என்பதைத் தாய்மையுணர்ச்சியோடு சுரதா வெளிப் படுத்துகிறார் :

1. முதலடியைத் தேனாக்கி அடுத்த டுத்து
முளைக்கின்ற தொடரடியை அமுத மாக்கி
விதவிதமாய்ச் சந்தநய நட்புண் டாக்கி
வியப்புமிகு உவமைகளால் புதுமை தேக்கிப்
பதமுடைய பாவினமாம் விருத்த மாக்கி ......

கதைக் கவிதைகள் எழுதுவதில் சுரதாவுக்கு விருப்பம் அதிகம். சொல்லும் எந்தக் கருத்தையும் கதையாகச் சொன்னால் படிப்பவர் உள்ளத்தில் பதியும் என்பது அவர் கொள்கை. ஆனால் கதைக் கவிதை எழுதுவதில் பாரதி தாசனை முழுமையாகப் பின்பற்றவில்லை. இதற்கும் இவர் தனிப்பாணி அமைத்துக் கொண்டார். பாரதி தாசனைப் போல் சமுதாய சீர்திருத்தத்தைக் கருப்பொரு ளாகக் கொள்ளாமல், சிறந்த காதற் கதைகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் தேர்ந்தெடுத்துக் கதைக் கவிதைகளைச் சுரதா எழுதினார். அவ்வாறு அவற்றைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் உண்டு. தம்முடைய பல திறப்பட்ட திறமைகளையும் முழுமையாக வெளிப்படுத்த விசாலமான இடத்தை விரும்பினார் சுரதா. தம் கற்பனைப்

1. சமணன் சாதித்தான்

பசுவைக் கட்டிப் போட்டுத் தீனி வைக்கும் பழக்கம் அவருக்குக் கிடையாது; மேய்ச்சல் தரையில் அவிழ்த்து விட்டு விடுவார் அதுவாக மேய்ந்து ஒய்ந்து படுக்கவேண்டும். ஆனால் பாரதிதாசன் தன் கற்பனைப் பசுவை முளை அடித்துக் கட்டிப் போட்டுத் தீனி போடுவார்; சில நேரங்களில் கயிற்றைத் தளர்த்தி விடுவார்; ஆனால் பசுவை அவிழ்த்து விட்டுக் கண்டபடி மேய அனுமதிக்க மாட்டார்.

பாரசீகப் பஞ்ச காவியங்களில் ஒன்றான ஷிரீன்—ஃபர்காத் காதலை நயமான கதைக் கவிதையாக்கியுள்ளார் சுரதா. அமுதும் தேனும், விதவையும் வேதாந்தியும், முத்தமிட்ட ஞானி, கண்ணீர்க் கதை என்ற பாடல்கள், சுரதாவின் கதைக் கவிதை வெற்றிக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள். மெய்விளக்கக் கவிஞர்கள் யாரும் காப்பியத் துறையின் பக்கம் அதிகமாக நெருங்குவதில்லை. அவர் படைத்துள்ள பட்டத்தரசி, வன்னிய வீரன் என்ற சிறு காப்பியங்கள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. அவற்றுள் காப்பியப் பண்புகள் மிக அருகிக் காணப்படுகின்றன.

தமக்கு முன்பும், சம காலத்திலும் வாழ்ந்த கவிஞர்களிடம் இருந்து, தம்மை வேறுபடுத்திக் காட்ட வேண்டுமென்பதில் சுரதா முனைப்பாக இருந்தார். எனவே மற்ற கவிஞர்கள் செய்யாத, புதிய கவிதை முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பதே அவர் விருப்பம். விருப்பத்தின் வெளிப்பாடுதான் கவிதைக் கடிதங்கள். வாழைப் பூ வேதாந்தமும், நெப்போலியன் கடிதமும் இத்துறையில் சுரதா பெற்ற மிகச் சிறந்த வெற்றிகள். இக்கவிதைகள் 'முன்னணியில்' வெளிவந்தபோது, கவிதை விரும்பிகளிடையே பரபரப்பை உண்டாக்கின. இந்தப் பாடல்களுக்காகவே முன்னணிப் பத்திரிகையை எல்லாரும் விரும்பி வாங்கிப் படித்தனர்.

பாரதியும், பாரதிதாசனும் வசன கவிதைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்களைப் பின்பற்றிச் சுரதாவும் 'எச்சில் இரவுகள்' என்ற பெயரில் வசன கவிதைத் தொடர் ஒன்று எழுதினார். 'எச்சில்' விஷயமானாலும் கவிதைக்குரிய செறிவும், நயமும் சுரதாவின் படைப்பில்தான் காணப்படுகின்றன. இது ஒரு புதுமையான முயற்சிதான்; ஆனால் அதை அரைகுறையாக நிறுத்திவிட்டார்.

இவருடைய சொல்விளக்கப் பாடல்கள் புதுமையான முயற்சி. அவ்வப்போது தமது மூளையில் குவித்து வைத்திருந்த பலதரப்பட்ட செய்திகளையும் இச்சொல்விளக்கப் பாடல்களில் கொட்டிக் குவிக்கிறார். அவருடைய விசாலமான அறிவை இப்பாடல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. எப்போதும் இருப்பவர்கள், துன்பத் துறைமுகம், ஆராய்ச்சி என்ற தலைப்பில் பாடப்பட்ட கவிதைகளும் இவ்வகையைச் சார்ந்தவை.

ஆங்கில நாட்டு மெய் விளக்கக் கவிஞர்கள் காதலையும், பக்தியையுமே தமது முக்கியமான கருப் பொருளாகக் கொண்டனர். கவிஞர் சுரதா நாத்திகக் கவிஞரான பாரதிதாசன் வழியில் வந்தவர் ஆகையால், பக்தித் துறையை அவர் தீண்டவில்லை; காதலையே தமது கருப் பொருளாகக் கொண்டார். காதலைப் பாடுவதில் சுரதாவுக்கு விருப்பம் அதிகம்; அதை நுட்பமாகப் பாடுவதில் சுரதாவுக்கு இணை சுரதாவேதான்.

காதலையும் பக்தியையும் தமது கவிதைக்குரிய கருப் பொருளாக மெய்விளக்கக் கவிஞர்கள் கொண்டாலும், அன்றாட அரசியல், சமூகநிலை, நடைமுறை வாழ்க்கையில் தட்டுப்படும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும், சுவையான கவிதைகளாக மாற்றினர். சுரதா பத்திரிகைச் செய்திகளையும் 'நெய்தசெய்திகள்' என்ற

தலைப்பில் கவிதைகளாக மாற்றினார். திரைப்படச் செய்திகளையும் இவர் விட்டுவைக்கவில்லை. எதையும் கவிதையாக எழுதலாம் என்பதற்குச் 'சுவரும் சுண்ணாம் பும்' சிறந்த எடுத்துக்காட்டு.

பாரதி-பாரதிதாசன் கவிதை இயக்கம் (School of Bharathi and Bharathi Dasan Poetry) சோர்வு கண்ட நேரத்தில், சுரதாவின் பாணி திருப்புமுனையாக அமைந்தது. மேலே குறிப்பிட்ட எனது கருத்துக்களிலிருந்து, மற்றவர்களிட மிருந்து மாறுபடும் சுரதாவின் புதிய முயற்சிகள் தெளி வாகும். ஆங்கில நாட்டு மெய்விளக்கக் கவிஞர்களின் தோற்றக் காரணமும், கவிதைச் சிந்தனையும், உத்திகளும் சுரதாவோடு ஓரளவு ஒத்துப்போகின்ற காரணத்தால், சுரதாவையும் அவர்களோடு ஒப்பாய்வு செய்யவேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அந்த விருப்பத்தின் விளைவே இந்தக் கட்டுரை. இனி மெய்விளக்கக் கவிதை யின் பொதுப் பண்புகள், சுரதாவின் கவிதைக்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் பார்ப்போம்.

மில்டன் போன்ற காப்பியக் கவிஞர்களும் (Epic Poets), வொர்ட்ஸ் வொர்த், பைரன் போன்ற வியப்பார்வக் கவிஞர்களும் (Romantic Poets), ஷெல்லி போன்ற புரட்சிக் கவிஞர்களும் (Revolutionary Poets), தங்களுக் கென்று வரையறுத்துக் கொண்ட, அரசியல், சமுதாயக் கொள்கை களைக் கொண்டிருந்தனர். மெய்விளக்கக் கவிஞர்களுக்கு அத்தகைய வரையறுக்கப் பட்ட கொள்கை எதுவும் கிடையாது. கருத்துப் புரட்சியைவிடக் கவிதை உத்திகளில் இவர்கள் புரட்சி செய்தனர்.

புதுமை விருப்பம்

தாம் கூறும் எதையும், தமக்குமுன் எந்தக் கவிஞர்களும் கூறாத முறையில் புதுமையாகக் கூற வேண்டும் என்பதில் மெய் விளக்கக் கவிஞர்கள் அதிக அக்கறை காட்டினர்.

சுரதாவின் படைப்புகளில் இந்த விருப்பத்தை அதிகம் காணலாம். சுரதாவே அதை 'நல்ல தீர்ப்பு' என்ற கவிதையில் ஒரு கள்வன் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

''சுனையொன்றில் பூத்தபல மலர்கள் போன்று
சூழ்ந்தபல புலவர்களே! நீங்க ளெல்லாம்
பனியென்பீர்! 'நிலா வழிக்கும் வியர்வை' என்பேன்
பாடையென்பீர்; 'கால்கழிந்த கட்டில்' என்பேன்
கனியென்பீர்; 'விதைக்குடும்பம்' என்பேன்; நீலக்
கடலென்பீர்; 'மண்மகளின் ஆடை' என்பேன்
தனிநின்று புதுமைபல செய்யும் என்னைத்
தக்கையென்று நினையாதீர்" என்றான் கள்வன்.

பாத்திரப் படைப்பு கள்வனே என்றாலும், ஒலிக்கும் குரல் சுரதாவினுடையது என்பது தெளிவாகத் தெரிகிறது.

காதலனால் சுட்டப்படும் காதலி நாணத்தால் வினாக்குறி போல் குனிவதும், அவனிடம் எச்சில் முத்தம் பெறுவதும் அவன் உடலோடு தன்னுடலைத் தொகுத்துக் கொள்வதும் காதலால் அவனைத் தொடர்வதும் இயல்பான நிகழ்ச்சிகள். ஆனால் இவற்றைக் குறிப்பிடும்போது இதற்குமுன் பாடிய கவிஞர்களினின்றும் முற்றிலும் வேறுபட்டு,

சுட்டாகி வினாவாகி எச்சமாகித்
தொகையாகித் தொடராகி ஆங்கே நின்ற
கட்டாணி முத்தழகி......என்று

கூறும் போது சுரதாவின் புதுமை விருப்பம் புலனாகிறது.

உடலுறவைப் பற்றிப் பாடாத கவிஞர்கள் இல்லை. பிரபந்தக் கவிஞர்கள், மிகவும் நுட்பமாகப் பல கோணங்களில் உடலுறவைக் கவிதைகளில் படம் பிடித்துக் காட்டுகின்றனர். ஆனால் சுரதா வேறு எந்தக் கவிஞரும் சொல்லாத முறையில்

இருட்டுக்குச் சேலை தந்தாள்
இளமைக்கு வேலை தந்தாள்

என்று பாடி வியக்க வைக்கிறார்

வெள்ளை முயலைச் 'சலவை முயல்' என்று குறிப்பிடுவதும், அழகிய வரிசையான சிறிய பற்களைக் 'குறுந்தொகைப் பற்கள்' என்று குறிப்பிடுவதும், தாழைமடலை 'ஓலை மலர்' என்று குறிப்பிடுவதும், எண்ணெயை 'எள்ளின் கண்ணீர்' என்று குறிப்பிடுவதும், நுரையை 'நீரின் நோய்' என்று குறிப்பிடுவதும், காதலியை ஏழாம் வேற்றுமை உருபே!' (கண்ணே) என்று அழைப்பதும் நிலவை முத்து நுரை வட்டம் என்பதும் சுரதாவின் புதுமை விருப்பத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள். 'புருவக் காவடி' சுவையான சொல்லாட்சி.

சில பாடல்களுக்குச் சுரதா கொடுத்த தலைப்புக்களே புதுமையானவை. வரப்புச் சாமிகள், பரமசிவனும் பாரதிதாசனும், வாழைப்பூ வேதாந்தம் என்பவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இந்தப் புதிய சொல்லாட்சிகளுக்கு அவரே காரணங்களையும் கூறுகிறார்.

தொழுதுண்டு வாழ்வோர் தொழும்பர்கள்; அவரெலாம்
கூம்பிய தாமரைச் சோம்பல் சாமிகள்!
உழுது பயிரிடும் உழவராம் அவர்களே
வகுத்த வயலின் வரப்புச் சாமிகள்!

◈ ◈ ◈

அல்லிப்பூ முல்லைப்பூ தாமரைப்பூ
அத்தனையும் வானத்தை நோக்கிப் பூக்கும்
மெல்லியநல் வாழைமட்டும் தலைகுனிந்து
வீதிமண்ணைப் பார்த்தபடி பூக்கும்; நாட்டின்

நல்லவர்கள் என்கருத்தை ஆத ரிக்க
நாலைந்து வைதீக வெறியர் மட்டும்
வல்லமையே இல்லாமல் கூவு கின்றார்;
வாழைப்பூ வேதாந்தம் பேசுகின்றார்

வரப்பு வயலில் உழவு செய்வோரை 'வரப்புச் சாமிகள்' என்று குறிப்பிடுவதும், தலைக் குனிவை உண்டாக்கும் மடமைத் தத்துவத்தை 'வாழைப்பூ வேதாந்தம்' என்று குறிப்பிடுவதும் சிந்தித்து மகிழத் தக்க சொல்லாட்சிகள்.

புலவர் பெருஞ்சாத்தன் பல குழந்தைகளைப் பெற்றெடுத்த தனது மனைவியைப்பற்றிக் குமண வள்ளலிடம்' குறிப்பிடும்போது

'பலசுளைகள் நிறைந்திருக்கும் கார ணத்தால்
பலாப்பழத்தைப் பலவென்றார்; அதுபோல் மங்கை
பலபுதல்வர் தமையீன்றாள் என்ப தாலே
பலாமனைவி என்மனைவி' — என்று பாடுகிறான்.

'பலா மனைவி' புதிய சொல்லாட்சி.

◈ தொலைவு உவமைகள்

உவமை கவிதையின் மிக இன்றியமையாத ஓர் அங்கமாக ஆதிநாள் தொட்டுக் கருதப்பட்டு வருகின்றது. சிறந்த உவமைகள் ஒரு கவிஞனின் சிந்தனை ஆற்றலுக்கும் கற்பனை வளத்துக்கும் சான்றாக விளங்குகின்றன. தொல்காப்பியர் காலத்தில் உவமையே அணியாகக் கருதப்பட்டது. அதனால்தான் செய்யுள் அலங்காரம் பற்றிக் கூற வந்த இயலுக்கு 'உவமவியல்' என்று அவர் பெயரிட்டார். இந்த உவமை அணியே பிற்காலத்தில் தோன்றிய அணிகளுக்குத் தாயாக விளங்கியது. குறுந்தொகையில் பாடிய புலவர்களுள் பதின்மூவரின் பெயர்கள்

◈ Far fetched Similes.

அவர்கள் பாடலில் கூறிய உவமைகளாலேயே வழங்கப்படு கின்றன. அவர்களுள் 'செம்புலப் பெயல் நீரார்' எல்லா ராலும் அடிக்கடி குறிப்பிடப்படுபவர். எனவே உவமை யின் சிறப்பு புலனாகும்.

பிறமொழிக் கவிஞர்களும் உவமைக்குக் கவிதையில் சிறப் பிடம் தந்து போற்றியிருக்கின்றனர். மெய்விளக்கக் கவி ஞர்கள் தமக்குமுன் இருந்த கவிஞர்கள் கூறாத புதிய உவமைகளைத் தேடிப்பிடித்துக் கூறுவதில் அதிக ஆர்வம் காட்டினர். அதுவும் சிந்தனையைத் தொலைவில் ஓட விட்டு மிகவும் நுட்பமான உவமைகளைக் கூறுதல் அவர் கள் இயல்பு. மேலை நாட்டுக் கவிதைத் திறனாய்வாளர் கள் இவ்வித உவமைகளைத் 'தொலைவு உவமைகள்' என்றே பெயரிட்டு அழைத்தனர்.

ஆங்கில மெய்விளக்கக் கவிஞர்களின் பிதாமகன் என்று கருதப்படும் ஜான் டன் (John Donne) தொலைவு உவமை கள் கூறுவதில் ஆற்றல் மிக்கவன். அவன் கூறிய தொலைவு உவமைகளுள், காதலர்களுக்கு உவமையாகச் சொன்ன ஈயும் (Flea), கவராயமும் (Compass) மிகவும் பாராட்டுப் பெற்றவை. நான் இவ்விடத்தில் வேறு ஓர் உவமையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஜான் டன் எழுதிய பாடல்களுள் 'காலை வணக்கம்' (The Good - Morrow) என்ற பாடலும் குறிப்பிடத்தக்க ஒன்று. இதில் ஒரு பெண்ணிடத்தில்தான் கொண்டிருக்கும் தெய்வீகக் காதலைப் பறறிக் (Spiritual Love) குறிப்பிடு கிறான். மெய்விளக்கத் தத்துவப்படி, எந்த ஒரு பொருளும் அதன் மூலப் பொருட்களுள் முரண்பாடு தோன்றும்போது அழிகிறது. ஆனால் இவர்கள் காதலோ ஒரே மூலப் பொருளால் ஆக்கப்பட்டு ஒரே மாதிரியாக இருப்பதால் அதற்கு அழிவில்லை'' என்று குறிப்பிடுகிறான்.

என் முகம் உன் கண்ணிலும்
உன் முகம் என் கண்ணிலும்
தெரிகின்றன.
நம் தூய உள்ளங்கள்
நம் முகத்தில் தென்படுகின்றன.
வடக்கில் குவியாத
மேற்கில் சரியாத—
நம்மினும் சிறந்த—
அர்த்த கோளங்களை
எங்குக் காணமுடியும்?

இப்பாடலில் தன்னையும், தன் காதலியையும், பூமியின் இரண்டு அர்த்த கோளங்களுக்கு (Hemispheares) ஒப்பிடு கிறான். இரண்டு அர்த்த கோளங்கள் சேர்ந்ததுதான் பூமி உருண்டை. பூமியின் வடதுருவம் குவிந்தது; குளிர்ந்த பனி படர்ந்தது. பூமியின் மேற்குப் பகுதி சரிவானது.

இவர்கள் இருவரின் சேர்க்கையால் உருவாகியிருக்கும் காதல் உலகின் வடக்குப் பகுதி குவிவதும் இல்லை; குளிர் வதும் இல்லை; மேற்குப் பகுதி சரிவதும் இல்லை. இவ்விடத்தில் குவிதல் குறைவதற்கும் குளிர்ச்சி செயலற்ற தன்மைக்கும் (inaction), சரிவு காதற் சரிவுக்கும் (decline) குறியீடுகளாகக் கொள்ள வேண்டும். ஜான் டன் காலத் தில் புதிதாக வெளியிடப்பட்ட வானவியல் வல்லுநர் கெப்ளரின் கருத்துக்கள் இக்கவிதையில் உவமையாக்கப் பட்டுள்ளன. நாம் தமிழ்க் கவிதையில் காதலரின் நெருக் கத்தை 'மலரும் மணமும் போல் நகமும் சதையும் போல்' என்று மிகச் சுலபமாகச் சொல்லி விடுகிறோம். ஆனால் ஜான் டன் இந்த 'நெருக்கத்துக்கு' உவமை கூற பூகோள சாத்திரத்தில் நுழைகிறார்; வடதுருவத்துக்குத் தொலை வான பயணத்தையும் மேற்கொள்கிறார். அவர் உழைப்பை நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

சுரதாவின் கவிதைகளில் அவர் கையாளும் உவமைகளே ஆட்சி புரிகின்றன. 'உவமைக் கவிஞர்' என்ற பட்டம் அவரோடு இயல்பாக ஒட்டிக் கொள்கிறது. சுரதாவுக்குச் சிறு பிரபந்தங்களில் ஈடுபாடு அதிகம். அவற்றின் மூலை முடுக்கில் கூறப்பட்டுள்ள விநோதமான உவமைகளையெல்லாம் சுரதா விழுங்கிச் செரிக்க வைத்திருக்கிறார். உவமை அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்த சுரதா, பிறர் கூறாத புதிய உவமைகளைக் கூறுவதில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். அம்முயற்சியில் வெற்றியும் பெற்றார். சுரதாவின் தேன்மழையில் 'குமணன்' என்ற பாடல். நாடிழந்து காட்டில் தலைமறைவாகத் திரிந்த குமண வள்ளலைத் தேடிப் பெருந்தலைச் சாத்தனார் வருகிறார். குமணனிடம் தமது வறுமையை உருக்கமாகப் பாடுகிறார். இரக்கத்தால் உள்ளம் கசிந்த குமணன்,

எட்டடுக்கு மாளிகையும் நகரும் நாடும்
என்வசத்தில் இருக்கையில்நீ வந்திருந்தால்
ஒட்டகத்தின் காலடியை ஒத்த முத்தும்
ஒளிசிறந்த செம்பொன்னும் தந்திருப்பேன்—

என்று பெருந்தலைச் சாத்தனாரிடம் கூறுகின்றான்.

முத்து, முல்லை, கோவைப்பழம் போன்ற பொருள்கள் கவிதையில் உவமை சொல்வதெற்கென்றே பிறப்பெடுத்தவை. இவைகள் பிற பொருள்களுக்கு உவமைகள் ஆகின்றனவே தவிர, இவைகளுக்கு உவமை கூறுதல் வழக்கில் இல்லை. அப்படிக் கூறினாலும் மிகவும் அரிதாகக் கூறுவர். சிலப்பதிகாரத்தில் முத்துக்கு உவமை கூற வந்த இளங்கோவடிகள்,

சந்திர குருவே அங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதியும்—

என்று குறிப்பிடுகிறார். இதில் வெண்ணீர்மை கொண்ட முத்திற்கு வெள்ளி என்னும் கோளையும், செந்நீர்மை கொண்ட முத்துக்குச் செவ்வாய்க் கோளையும் உவமை கூறுகின்றார்.

ஆங்கிலக் கவிஞனும் நாடகாசிரியருமான ஆஸ்கார் வைல்டு தாம் எழுதியுள்ள சலோமி என்ற நாடகத்தில் சரிகைப் பையிலிட்ட முத்துக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'தங்க வலைக்குள் பிடித்து வைத்த ஐம்பது நிலவுகள்' **(They are like fifty moons caught in a golden net)** என்று குறிப்பிடுகிறான். இங்கே முத்துக்களுக்கு நிலவு உவமை யாகிறது.

ஒட்டகம் தமிழ்நாட்டு விலங்கு அன்று. ஊருக்குக்குள் வட்டக் காட்சிகள் (Circus) வரும்போது மட்டுமே அவற்றைக் காண முடியும். குதிரையின் காலடிச் சுவடு நீண்ட வட்டமாக (Oval) இருக்கும். ஒட்டகத்தின் காலடிச் சுவடு கவராயத்தால் போட்ட வட்டம் போல் இருக்கும். இதைச் சுரதா கூர்ந்து கவனித்து நினைவில் பதித்து, முத்துக்கு உவமை கூறியிருப்பது வியப்பாக உள்ளது.

'தரைமீன்' என்றொரு பாடல். அதில் ஆட்டன் அத்தி கழாஅர்த் துறையில் நீந்தி விளையாடுகிறான். கரையில் அவன் மனைவி ஆதிமந்தி நின்று, அவன் நீந்தும் அழகைக் கண்ணால் பருகிக் கொண்டிருக்கிறாள். அவன் நீரில் பாய்ந்து மூழ்கி, பின் நீர்மட்டத்திற்கு வருவதை, யானைத் தந்தம் கீழே சரிந்து நுனியில் மேல்நோக்கி வளைந்து வருவதற்கு ஒப்பிடுகிறார் சுரதா. மிகவும் நுட்பமான உவமை!

> பந்தெனவே காவிரியில் மிதந்தான் ; நீரில்
> பாராங்கல் போலமிழ்ந்தான் ; சேனை யானைத்
> தந்தமென மேல்நோக்கி எழுந்தான் அத்தி.

இதே பாடலில் ஆதிமந்தி வெட்கத்தால் நாணிக் குனிந்ததை 'பிழிந்ததொரு புடவையெனக் குனிந்து கொண்டாள்' என்று குறிப்பிடும் உவமைநயம் மிகச் சுவையானது.

சிலசமயங்களில் சில உவமைகளுக்காக இவர் நெடுந்தொலைவு பயணம் செய்வதுண்டு. உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை ஒழிக்க ஒருசட்டம் கொண்டுவர வேண்டுமென்று லார்டு பெண்டிங் துரைக்கு ராஜாராம் மோகன்ராய் எழுதிய கடிதத்தைச் சுரதா கவிதையாக்கியிருக்கிறார். வரலாற்றுச் சிறப்புமிக்க அக்கடிதம் சுரதாவின் கைபட்டு, ஒரு வானவில்லாக மாறியிருக்கிறது. சுரதாவின் ஆற்றலுக்கு அப்பாடல் ஓர் உரைகல்.

சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளைத் துணிச்சலோடு பரப்பிவந்த ராஜாராம் மோகன்ராய்க்கு எதிர்ப்பும் அதிகமாக இருந்தது. பழமை விரும்பிகள் அவரைக் ஒழித்துக் கட்ட ஒரு கொலையாளியை ஏவினர். அக்கொலையாளி மிகவும் உயரமானவன். அவனுக்கு உவமை சொல்ல அவனைப் போல் உயரமான ஓர் ஆளைத் தேடினார் சுரதா. சீன வரலாறு அவருக்குக் கை கொடுத்தது. சீன ஞானி கன்பூஷியஸின் தந்தை ஹூலியாங்ஹை என்பவர் பத்தடி உயரம் இருந்தார் என்று எங்கோ படித்திருக்கிறார். உடனே அச்செய்தியைத் தமது கவிதை வாகனத்தில் ஏற்றிவிட்டார்.

கன்பூஷ்யஸ் என்பவனோ சீன ஞானி
கற்றறிந்த மாமேதை உலகம் போற்றும்
அன்பாளன்; அவன்தந்தை ஹூலி யாங்ஹை!
அவனுயரம் பத்தடியாம்; சென்ற திங்கள்
முன்கோபத் தோடென்னை வெட்ட வந்த
முட்டாளும் அவனுயரம் இருப்பான்!

என்று பாடுகிறார். இவை போன்று நுட்பமாகச் சிந்தித்து எழுதும் தொலைவு உவமைகள் சுரதாவின் பாட்டிலே மலிந்திருக்கின்றன.

கல்விப் பரப்பு

இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த மெய்விளக்கக் கவிஞர்கள் பலதுறைக் கல்வியறிவு பெற்றவர்கள். அவர்கள் தமது காலத்தில் மக்களிடத்தில் வரவேற்புப் பெற்றிருந்த சமய தத்துவம், வானவியல், தர்க்கம், ரசவாதம் (Alchemy) வரலாறு ஆகிய பல கலைகளையும் பயின்று தமது அறிவை விசாலப்படுத்திக் கொண்டிருந்தனர். இவ்வாறு தாம் கற்ற பல்கலை அறிவையும் தாம் படைக்கும் கவிதையில் காட்டிக் கொள்ள விரும்பினர்.

சுரதாவும் கண்டது கற்கும் பண்டிதர். அவர் பொழுது போக்கே திருவல்லிக்கேணிக் கடற்கரைச் சாலையில் பழைய நூல்கள் வாங்குவதுதான். மஸ்தான் சாகிபு பாடல் முதல், மார்கரட் தாட்சர் வரை பதார்த்த குணசிந்தா மணி முதல் பல்லி சொல்லும் சகுனப் பலன் வரை எந்த நூல் கிடைத்தாலும் வாங்காமல் விடமாட்டார். வாங்கிப் படித்தும் விடுவார். பலதரப்பட்ட செய்திகளும், வெளியே விட்டால் போதுமென்று அவர் மூளையைக் குடைந்து கொண்டிருக்கும்; அடிக்கடி கவிதை எழுதும் போதெல் லாம் அவைகளுக்கு விடுதலை கிடைக்கும்: அவற்றின் அணிவகுப்பைக் கீழே காணலாம்:

வரலாறு

பாலிலே குளித்திட்டாளாம்
பனிமங்கை கிளியோத் பாத்ரை

— தேன்மழை பக். 44

தென்கோடித் திருடன்யான் ஆலயத்தில்
திருடியுள்ளேன் திருமங்கை ஆழ்வார் போலே
அன்றாடம் கன்னியரைக் கற்ப ழித்தே
ஆனந்தம் கண்டேன்யான் கோபாட் போல!
முன்கோபம் கொண்டவன்யான் பாண்டி நாட்டு
முடிவேந்த னாம்தந்து மாறன் போல!

தேன்மழை பக். 80

பேர்வாய்ந்த போர்வேந்தன் சந்த்ர குப்தன்
பிறராலே தீங்குவரும் என்றே அஞ்சி
ஓர்நாளைக் கோரிடத்தில் உறங்கு வானாம்

தேன் மழை பக். 196

ஆயிரத்தைந் நூற்றுநாற் பத்தி ரண்டாம்
ஆண்டுதனில் அவதரித்த அக்ப ரோடு

அமுதும் தேனும் பக். 21

அன்றாடம் ஆராய்ந்தான்; நோன்பு நோற்றான்
அக்பரைப்போல் குறைவாக உறங்கி வந்தான்

அமுதும் தேனும் பக். 34

மீன்கறியைத் தின்றதனால் துக்ளக் செத்தான்
மிதமிஞ்சினா லெதுவும் தீமை செய்யும்

துறைமுகம் பக். 32

சம்பங்கிப் பூவே பௌத்த
சங்கிகள் என்போர், மாட்டுக்
கொம்புக்குள் உப்பு வைத்துக்
கொள்வதுண் டென்று சொன்னான்.

துறைமுகம் பக். 49

இலக்கணம்

வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்ப தில்லை
வெறும்பாட்டைத் தமிழ்ச்சங்கம் சேர்ப்ப தில்லை.

தேன் மழை பக். 85

தகுதிமிக்கோர் தருகின்ற பட்டம்
பகுதி போல நிலைத்து நிற்கும்

தேன் மழை பக். 170

வினையுவமை பயனுவமை, உடல்அ மைப்பை
விளக்குகின்ற மெய்யுவமை, மின்னும் வண்ணம்
தனைக்குறிக்கும் உருவுவமை எனவ குத்த
தமிழ்த்தொல்காப் பியச்சட்டப் படியிம் மங்கை
வினைபயன்மெய் உருஇவற்றின் கூட்டோ? பற்கள்
விதைக்காத விளைவுக்கோர் எடுத்துக் காட்டோ?

அமுதும் தேனும் பக். 17

சற்று நீ பிரிந்திட் டாலும்
தளருவேன்! தனிமை நோயால்
குற்றிய லுகர மாவேன்!
கொதித்திடும் வெந்நீ ராவேன்!

— அனந்தநாயகி

சாமுத்திரிகா லட்சணம்

சிலேட்டும தேகம் அமைந்தவள் ஆகலின்
கூந்தல் நீண்ட கோதையாய் விளங்கினாள்

— தேன்மழை பக். 136

பத்தினியே இதனைக்கேள்! நாகப்பாம்பின்
படம்போன்று விரிந்தமைந்த கழுத்தும் மார்பும்
சித்திரம்போல் ஒழுங்கான உடலும், நன்கு
சிவந்திருக்கும் மாந்தளிர்போல் நீண்ட நாக்கும்

கத்துகடல் சங்கைபோல் நிறமும், நல்ல
கருநெய்தல் பூப்போன்ற கண்களோடே
ஒத்தபல சுழிகொண்ட குதிரை தன்னை
உலகத்தார் பாடலமென் றுரைப்பர் கண்டாய்

பல்லி சகுனப் பலன்

தலையில் நீ வந்து வீழ்ந்தால்
சண்டையாம்; தோளில் வீழ்ந்தால்
நலம்பல பெருகு மென்பர்
நானிதை நம்ப வில்லை.

மருத்துவம்

கனிந்தும் பயன்படாத பழம் எட்டிப்பழம்
நீயோ—
காய்த்தும் பயன்படுகிறாய்
என் கரங்களுக்கு!
கனிந்தும் பயன்படுகிறாய்
என் இதழ்களுக்கு.
பித்த தேகம்
உடையவர்களுக்குத் தான்
கடைக் கண்
சிவப்பாக இருக்கும்;
உடல் எப்போதும்
வெப்பமாக இருக்கும்.

உன் கடைக் கண்
சிவப்பாகவும்
உன்னுடல் எப்போதும்
வெப்பமாகவும் இருக்கிறதே!
உன்னுடைய தேகமும்
பித்த தேகந்தானா? – என்றான்

உடனே அவள்
அவனைப் பார்த்து—
ஒரு மருத்துவரிடம்
கேட்க வேண்டிய கேள்வியை
இந்த —
மங்கையிடம் கேட்கிறீர்களே—
என்றாள் அவள்.

— எச்சில் இரவு பக். 70

சனியன்றும், புதனன்றும் எண்ணெய் தேய்த்துத்
தலைமுழுகி வருவோர்க்கு, மேலும் மேலும்
நினைவாற்றல் அதிகரிக்கும்; இதனை நாங்கள்
நெடுங்காலம் ஆராய்ந்தே சொல்லு கின்றோம்.

— துறைமுகம் பக். 62

தாவரவியல்

வாட்டும் முன்பனி வருகை தருகையில்
தின்னும் இலந்தை திரண்டு பழுக்கும்.

சுரதா இதழ் 1—3—68

பூகோளம்

ஆஸ்திரேலியா—
தீவுகளுக்குள் ஒரு தீவாகவும்
கண்டங்களுக்குள்
ஒரு கண்டமாகவும்
இருப்பது போல்
காமராஜர்—
தொண்டர்களுக்குத் தொண்டராகவும்
தலைவர்களுக்குத் தலைவராகவும்
விளங்குகின்றார்.

சித்தாந்தம்

சத்தென்றால் உள்ளதென்று பொருளாம்; உன்னைத்
தழுவியபின் நானதனைப் புரிந்து கொண்டேன்
சித்தென்றால் தன்னைத்தான் அறிவ தென்பர்;
தினையளவே நானென்னை அறிவேன்.

சுரதா இதழ் 15—3—68

விநோதமான கற்பனைகள்

Metaphysics—என்ற சொல், கவிதைத் துறையில் அடிபடத் தொடங்கியதும், ஆங்கில இலக்கியவாதிகள் அச் சொல்லுக்குப் பலவிதமாகப் பொருள் கூறத் தொடங்கினர். 'விநோதமான, நம்பத் தகாத, அதீத கற்பனையுள்ள' என்ற பொருள்களை அச்சொல்லோடு தொடர்புபடுத்தி எழுதினர். மேலும் விநோதமானதும் நம்பத் தகாததுமான அதீத கற்பனைகள், மெய்விளக்கக் கவிதைகளின் பண்பு என்றும் கருதத் தொடங்கினர். ◈ சில சமயங்களில் மெய் விளக்கக் கவிஞர்கள் பலவித உணர்ச்சிகளால் பின்னப் பட்டு, தாங்கள் கூறுபவை காரண காரியங்களுக்கு ஒத்து வருகின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், புதிர் போலப் பூடகமாகக் கூறுவதும் உண்டு. சுரதாவின் படைப்புக்களிலும் இத்தகைய கற்பனைகளைப் பலவிடங்களில் காணலாம். பிறர் சொல்லாத மாதிரி புதுமையாகச் சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காகச் சிலவிடங்களில் குழப்பமாகவும், சிலவிடங்களில் புதிர் போலவும், சிலவிடங்களில் நம்ப முடியாதபடியும் சுரதா பாடுகிறார்.

தன் கணவன் ரகுநாத சொக்கலிங்க நாயக்கன் இறந்த பிறகு விதவை மீனாட்சி அரியணை ஏறித் திருச்சியை ஆட்சி செய்கிறாள். தாயுமானவர் மீனாட்சியின் அரண்

◈ The distinctive note of metaphysical poetry is the blend of passionate feeling and paradoxical ratiocination.
— Sir Herbert Grierson

மனையில் 'பெரிய சம்பிரதி' (தலைமைக் கணக்கர்) யாகப் பணிபுரிகிறார். இளமையும் அழகும் மிக்க தாயுமானவர் மீது மீனாட்சிக்குக் காதல் ஏற்படுகிறது. அவள் தனது காதலை வெளிப்படுத்திய போது, தாயுமானவர் மறுக்கிறார். அவளைக் கண்டிக்கவும் செய்கிறார். காதல் வயப்பட்ட மீனாட்சி,

பளிங்குதனைக் கரைத்ததுபோல் இருக்கும் நீரின்
பாசியென்றே ஏசியெனைப் பேசினாலும்
அளவுக்கே அடங்காத ஆசை யென்னை
அங்குமிங்கும் இழுக்கிறதே என்ன செய்வேன்!
வளைவுதனை முடிப்பதில்லை புருவம்; எல்லாம்
வாழ்நாளில் நிறைவேறி விடுவ தில்லை.
பிளவுபடும் இயல்புடைய உளுந்தின் கூட்டம்
போன்றவர் அன்றோபுவியில் வாழும் பெண்கள்!

என்று கூறி மன்றாடுகிறாள். 'பெண்களைப் பிளவுபடும் உளுந்தின் கூட்டம்' என்று சுரதா ஏன் குறிப்பிடுகின்றார் என்ற காரணம் தெளிவாகப் புரியவில்லை. வினை, பயன், மெய், உரு என்ற உவமை வகையில் எதைச் சேர்ந்தது இது என்றும் புரியவில்லை. உளுந்து மட்டுமா பிளவு படுகிறது? எல்லாப் பருப்பு வகைகளுந்தான் பிளவுபடு கின்றன. உளுந்தை மட்டும் இங்கு அவர் ஏன் குறிப்பிடு கிறார்? படிப்பவர்கள் குழப்பமடைகிறார்கள்.

வன்னிய வீரன் காப்பியத்தில் பஞ்சணைப் பறவை வேசி குப்பாச்சியை அறிமுகம் செய்யும் கவிஞர்

வேசி குப்பாச்சியோர் விளம்பர விளக்கு
பாவின் இனத்தைச் சேர்ந்த பரத்தை

என்று குறிப்பிடுகிறார். 'பரத்தையைப் பாவின் இனத்தைச் சேர்ந்தவள்' என்று குறிப்பிடக் காரணம் என்னவென்று நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை; குழம்புகிறோம். 'வேற்றுத் தளைவிரவ நடக்கும் பா' என்று சொன்னால் கூட ஓரளவு பொருத்தமாக இருக்கலாம்.

'கொய்யாக்கனி' என்ற பாடலில் ஒரு பெண்ணைப் பற்றிப் பாடவந்த சுரதா,

வெள்ளிக் கிழமை பிறந்தவளாம் — அவள்
வேலிப் பருத்தியைப் போன்றவளாம்
பள்ளக் கடலவள் பார்வைகளாம் — புதுப்
பங்கயப் பூக்களே செங்கைகளாம்

என்று குறிப்பிடுகிறார். வெள்ளிக்கிழமை பிறந்ததனால் சோதிட சாத்திரப்படி அவள் சிறப்புப் பெற்றவளாக இருக்கலாம். 'ஆனால் வேலிப் பருத்தியைப் போன்றவளாம்' என்ற உவமையை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. வேலிப் பருத்தி எந்தவிதத்தில் சிறந்தது? இந்த உவமையின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் விடக்கூடாது என்று நான் பதார்த்த குணசிந்தாமணியை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். வேலிப் பருத்திக்கு 'உத்தாமணி' என்ற வேறு பெயரும் உண்டு.

'உணவில் மணத்தைத் தருகின்ற உத்தாமணியிலையால் வாதநோய், விஷம், ஜன்னி, திரிதோஷம், வாத குன்மம், சரீரக் குடைச்சல், குத்தல், நடுக்கல், தநுர்வாதம், சுவாச நோய், பலவிதத் தடிப்புகள், அக்கினி மாந்தம் இவை நீங்கும்; தீபனமுண்டாம்' என்று வேலிப் பருத்தியின் குணம் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் எந்தப் பண்பை அப்பெண்ணுக்குப் பொருத்துவது? 'தீபனம் என்றால் பசி. வேலிப் பருத்தியிலையைத் துவையல் செய்து சாப்பிட்டால் நல்ல பசியெடுக்கும் என்பர். ஒருகால் இப்பெண் காதற் பசியைக் கிளப்பிவிடுவதால், கவிஞர் இவளை வேலிப் பருத்திக்கு ஒப்பிடுகிறாரோ என்று நானே குழம்புகிறேன்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் இறப்புக்கு இரங்கிச் சுரதா பாடிய பாடல் அவருடைய தேன் மழையில் இடம் பெற்றுள்ளது. அதில் ஒரு விருத்தப்பா :

பானையது வீழ்ந்துடைந்தால் அப்பா னைக்குள்
பரவிநின்ற பழங்காற்றவ் விடத்தை விட்டு
வானவெளி செல்வதில்லை; அதனைப் போன்று
வைகுண்டம் எவர்மூச்சும் செல்வதில்லை.

என்று பாடுகிறார். இதில் 'வைகுண்டம் எவர்மூச்சும் செல்வதில்லை' என்ற கருத்தை ஒத்துக் கொள்கிறோம். ஆனால் 'பானையுடைந்ததும், அதில் பரவியிருந்த காற்று வானவெளியை அடைவதில்லை' என்று சொல்லுகிறாரே, அது எப்படி? ஏன் காற்று வானவெளியை அடையாது? பூமிக்குமேல் இருப்பதெல்லாம் வானவெளிதானே! மேலும் காற்று வெப்பத்தால் லேசாகி வானவெளிக்குச் செல்வது இயல்பான நிகழ்ச்சிதானே! பானைக்குள் பரவியிருந்த காற்றுக்குமட்டும் விதிவிலக்கு உண்டா? மீண்டும் குழம்புகிறோம்.

இவை எல்லாவற்றையும்விட விநோதமான ஒரு குழப்பத்தைக் கவிஞர் மங்கை மாசா என்ற பாடலில் மிகச் சுவையாகச் சித்தரிக்கிறார். அப்பாடல், வெவ்வேறு பெயரில் பல பிறவிகளை எடுத்துள்ளது.

கான் சாகிப் என்ற வீரன் தக்கோலம் என்ற ஊரை வெற்றி கண்டு, கொக்கூரைக் குருகூரைச் சூறையாடி, எக்காளமிட்டபடி தன் வீரர்களோடு வந்து கொண்டிருக்கிறான். அப்போது மாசா என்ற நாட்டுப்புறப் பெண்ணொருத்தி புற்கட்டைத் தலையில் ஏந்திய வண்ணம் எதிரில் வருகிறாள். அவள் கட்டான மேனியில், கான் சாகிபின் உள்ளம் ஒட்டிக் கொள்கிறது. அவள் சம்மதத்தைப் பெற்று அவளைக் குதிரையின்மீது ஏற்றி வைத்துக் கொண்டு புறப்படுகிறான் கான் சாகிப்.

செல்லும் வழியிலேயே கான் சாகிப்புக்குக் காதல் பசி அதிகமாவிட்டது. அவளை உடனே அனுபவித்துவிட வேண்டும் என்ற அவா அவனை உந்தித் தள்ளுகிறது.

குதிரையை விட்டுக் கீழே குதித்தான் கான் சாகிப்; மாசாவையும் கீழே இறக்கினான். காதலர் ஒதுங்க அவ்விடத்தில் அடர்ந்த காடோ, புதர்களோ எதுவுமில்லை. வெட்டவெளி! கான் சாகிப் மூளையில் ஒரு நூதனமான யோசனை தோன்றியது. குதிரையின் சேணத்தில் ஒரு சிறிய வெடிமருந்துப் பை இருந்தது. அந்த வெடிமருந்தைக் கையாலே வாரி வாயாலே ஊதினான். வெடிமருந்து காற்றில் பரவி, அவ்விடம் இருட்டாகிவிட்டது. அந்த இருட்டில் மாசாவைப் புணர்ந்தான் கான் சாகிப். எப்படி கற்பனை? பாட்டைப் படியுங்கள்.

◈ குருவிகளும் தாமரையும் அயர்ந்து தூங்கும்
குளிர் இரவில் உயிர்கொல்லும் புதுப் பீரங்கி
மருந்தெடுத்து வாயாலே அதனை ஊதி
மாவீரன் ஓரிடத்தில் இருட்டு செய்தான்.
'இருங்களென்று' முந்தானை தனைய விழ்த்து
ஏந்திழையாள் திரைபோட ஆரம் பித்தாள்.
கரம்பிடித்தான் கட்டழகன்; கன்னி அந்தக்
கட்டழகன் தொட்டவுடன் குளிர்ந்து போனாள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுரதாவின் கற்பனைகள் நம்பமுடியாதனவாகவும், இயற்கைக்கு மாறுபட்டும், பொருத்தமில்லாமலும் இருந்தாலும், புதுமை கருதியும், சுவை கருதியும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

சுரதாவின் பலமும் பலவீனமும்

ஆங்கிலக் கவிஞர்களுள் மிகவும் சுவையானவன் பைரன்; ஃப்ரஞ்சுக் கவிஞர்களுள் மிகவும் சுவையானவர் போதலேர். தமிழ்க் கவிஞர்களுள் மிகவும் சுவையானவர் சுரதா.

◈ மங்கைமாசா - பிறகு 'நெல்லூர் நிகழ்ச்சி' என்று பெயர் மாற்றத்தோடு வெளியிடப்பட்டுள்ளது.

சுரதாவோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு இந்த உண்மை விளங்கும். சுரதாவே சுவையான ஒரு கவிதை. கால் நூற்றாண்டுக் காலம் அவர் சுவையில் ஊறிப்போனவன் நான்.

தமது குருநாதர் சுப்புரத்தினத்தைப் போலவே சுரதாவும், புரிந்து கொள்ள முடியாத விசித்திரப் போக்குகளும், முரண்பாடுகளும் மிக்கவர்; கவிஞன் என்ற முனைப்பான செருக்கும், முரட்டுத்தனமும் உள்ளவர். ஆனால் இப் பண்புகள் யாவும் அவரை அணி செய்கின்றனவே தவிர கேவலப் படுத்தவில்லை. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால், அவருடைய உள்ளத்தின் நுட்பமான பரிமாணங்களை, இக்குணங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

பொதுவாக இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் ஏதாவது, ஓர் அரசியல் அல்லது சமூக இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது வழக்கம். சுரதாவுக்குத் துவக்க காலத்திலிருந்தே அப்படியோர் ஈடுபாடு கிடையாது. தம்மையோர் நாத்திகர் என்று கூறிக்கொள்வார். எந்த அரசியல் கட்சியிலும் அவர் உறுப்பினர் அல்லர்; ஆனால் எல்லாக் கட்சியிலும் இருப்பார். கட்சிக் கட்டுப்பாட்டில் அடங்கியிருப்பது அவரால் முடியாத செயல்.

ஒருமுறை காங்கிரஸ் கூட்டத்தில் பேசச் சுரதாவை அழைத்திருந்தனர். பழுத்த தேசியவாதியான திருவாளர் பக்தவத்சலமும் அக்கூட்டத்தில் இருந்தார். சுரதா பேசும் போது, ''நான் காந்தியை விட ஒழுக்கமானவன்'' என்று ஒரு வெடிகுண்டை வீசினார். சுரதா காந்தியைவிட ஒழுக்கமானவராகவே இருக்கட்டும். இந்த வெடிகுண்டை காந்தியவாதிகளால் தாங்கிக் கொள்ள முடியுமா? அதன் பிறகு காங்கிரஸ்காரர்கள் இவர் பக்கம் தலைவைத்துப்

படுப்பதில்லை, இவரை வளர்த்து விட்டது திராவிட இயக்கம் என்றாலும், தம்மை ஓர் இயக்கக் கவிஞனாக இவர் முத்திரை குத்திக் கொள்ள விரும்பவில்லை.

''மெய்விளக்கக் கவிஞர்கள் மக்களியல்பை ஊன்றி நோக்கும் திறனாய்வாளர்களாக இருந்தார்களே அன்றி, அவ்வியல்புகளோடு ஒன்றி விடுபவர்களாக இல்லை. சமுதாயத்திலுள்ள நன்மை தீமைகளைக் கண்டு உணர்ச்சி வசப்படாமல், ஓய்வு நேரப் பார்வையாளர்களாக இவர்கள் விளங்கினர். சமுதாயத்தின் நடைமுறைகள், மக்கள் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றைப் பற்றி ஆர்வமோ, அக்கறையோ காட்டாமல் அவற்றைப்பற்றி மேற்போக்கான தம் கருத்துக்களைக் கூறும் இன்பத் தேவதைகள் இவர்கள். இவர்கள் சமுதாயத்தின்பால் காட்டுகின்ற அன்பும், வருத்தமும் ஆழமற்ற நிலையில் இருக்கும். இவர்கள் விருப்பமெல்லாம் மற்றவர் சொல்லாதவற்றைத் தாம் சொல்ல வேண்டும் என்பதுதான்'' என்று ஒரு மேலை நாட்டுத் திறனாய்வாளர் குறிப்பிடுகிறார்.

சுரதாவைப் பொறுத்தவரையில், இந்த விளக்கம் அவருக்குப் பொருந்துவதாக உள்ளது. சுரதாவுக்கென்று தனிப்பட்ட முறையில் எந்தக் கொள்கையும் கிடையாது. எந்த ஓர் 'இனத்திலும்' இவருக்கு ஈடுபாடு கிடையாது. கவிதைதான் இவர் கொள்கை. ''கவிஞனுக்கென்று தனிப்

"They wrote rather as beholders than partakers of human nature; as beings looking upon good and evil, impassive and at leisure; as epicurean deities, making remarks on the actions of men, and the vicissitudes of life, without interest and without, emotion Their courtship was void of fondness, and their lamentation of sorrow. Their wish was only to say what they hoped had been never said before. — Ibid

பட்ட கொள்கை இருக்க வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அது ஒரு பித்தலாட்டம்!'' என்று சுரதா வெளிப்படையாகவே பேசுவார். தனிப்பட்ட குறிக்கோளோ, லட்சியமோ இல்லாத கவிஞன் உணர்ச்சி வசப்பட முடியாது; தன் படைப்போடு ஒன்றிப் போக முடியாது. சுரதா காதலைப் பற்றிப் பாடும்போது மட்டுமே உணர்ச்சி வசப்படுவார். ஆனால் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் வரையறுக்கப்பட்ட திட்டவட்டமான கொள்கைகளும், கோட்பாடுகளும் இருந்தன. இவ்விருவர்க்கும் அவர்கள் இறப்புக்குப் பின்னும் பலமான அரசியல் பின்னணியும், படைபலமும் பெருகக் காரணம் அவர்கள் ஆர்வத்தோடு கடைப்பிடித்த கொள்கைகளும், கோட்பாடு களும்தான்.

சுரதா உலக இயல்பையும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் கூர்ந்து பார்க்கிறார். அவற்றை இயல்பாகவும், சுவை யாகவும் வெளிப்படுத்துகிறார். ஆனால் எந்த ஒரு குறிக் கோளுக்காகவும் வாதாடுவதில்லை; போர்க்குரல் கொடுப் பதில்லை. அவர் படைப்புக்கள் முழுவதையும் படித் தாலும், ''இவர் என்ன கொள்கைவாதி? இவர் சமுதாயத் துக்கு உணர்த்தவந்த உயர்கருத்து (message) என்ன?'' என்பதை இனங்கண்டு கூற முடியாது.

சில கவிஞர்கள் வாழ்நாள் முழுவதும் எழுதிக் கொண்டிருப் பார்கள். ஜெர்மன் மகாகவி கெதே தமது எண்பதாவது வயதில் தமது பெருங்காப்பியமான 'பாஸ்து' வை எழுதி முடித்தார். பாரதிதாசனும் இறக்கும்போதுகூடத் தமது 73-ஆம் வயதில் கவிதை எழுதிக்கொண்டிருந்தார். சுரதா தமது 40-ஆம் வயதிலேயே கவிதை எழுதுவதை நிறுத்தி விட்டார். மற்றவர்கள் வற்புறுத்திப் பாடச் சொன்னால், கவியரங்குகளுக்காகவும், பத்திரிகைகளுக்காகவும் எழுது கிறார். தாமே விரும்பி எழுதுவதில்லை. ''நன்கு அறிவு

முதிர்ச்சி பெற்றிருக்கும் இந்த வயதில், நீங்கள் தமிழுக்கு ஒரு நல்ல காப்பியம் படைத்துத் தந்தால் என்ன?'' என்று நண்பர்கள் கேட்டால் நான் இதுவரை எழுதியது போதாதா? சங்கப் புலவர்கள் குறைவாகத்தானே எழுதினார்கள்? பூத்த வேங்கை... என்று தொடங்கும் மூன்று வரிப் பாடலை எழுதிவிட்டுச் சங்க இலக்கியத்தில் நிலையான இடத்தை ஒரு புலவன் பிடித்து விடவில்லையா?'' என்று சொல்லிவிட்டுச் சிரிப்பார்.

கவிதை எழுதுவதை எளிய ஒரு பொழுது போக்காகச் சுரதா கருதுவது இல்லை. கவிதை எழுதுவது என்பது அவருக்குக் கடுமையான உழைப்பு. கவிதை என்ற பெயரில், எதையாவது எழுதுவது என்பது அவருக்குப் பிடிக்காது. ஒருவரி எழுதினாலும், அதில் அவருடைய கடின உழைப்புத் தெரியும்.

பேரறிஞர் அண்ணாவுக்குச் சுரதாவின் பாட்டில் ஒரு வெறியே இருந்தது. திராவிட நாடு, காஞ்சி இதழ்களை நடத்தியபோது, ஏதேனும் மலர்கள் வெளியிட்டால், சுரதாவின் பாட்டை விரும்பிக் கேட்டு வாங்கி அழகாக வெளியிடுவார். ஆனால் அண்ணாவுக்கே அவ்வளவு எளிதில் பாடலைச் சுரதா எழுதிக் கொடுக்கமாட்டார். மறைந்த மதியழகனும், தில்லை வில்லாளனும், அரங்கண்ணலும் இவர் வீட்டுக்கு நடையாய் நடந்து கவிதையை வாங்கிச் செல்வது வழக்கம். சில சமயங்களில் சுரதாவைக் காஞ்சிக்குக் கடத்திக் கொண்டு போய், ஓர் அறையில் வைத்துப் பாடலை எழுதி வாங்கிக் கொண்டு அனுப்புவார் அண்ணா. அப்படி எழுதப்பட்டதுதான் ◈ 'அவன் மகன் தான் ஆள்கின்றான்' பாடல். அந்தக் காலத்திலேயே சுரதா பாடலுக்கு அண்ணா ரூ. 100/- அன்பளிப்பு வழங்குவார்.

◈ இப்பாடல் 'வென்றவனை வென்றவன்' என்று வேறு பெயர் பெற்று துறைமுகத்தில் இடம் பெற்றுள்ளது.

பாரசீகக் கவிஞன் ஓமர்கய்யாம் எழுதிய 'ருபாயியாத்'தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பிட்ஜரால்டு, மூன்றுமுறை திருத்தம் செய்து வெளியிட்டான். சுரதாவும் ஒரு திருத்தப் பிரியர். அவருடைய பாடல்கள் பலமுறை திருத்தம் பெற்று, வெவ்வேறு பத்திரிகைகளில் வெளிவரும். ஏன் என்று காரணம் கேட்டால், 'திருத்தம் என் அறிவு முதிர்ச் சிக்கு அத்தாட்சி' என்று கூறுவார். சில திருத்தங்கள் சிறப்பாக இருக்கும். சில திருத்தங்கள் 'ஐயோ! இப்படிச் செய்துவிட்டாரே!' என்று நாம் வருந்தும்படி இருக்கும்.

சுரதா தம் மூளையில் குவிந்து கிடக்கும் பழைய சரக்கு களைக் கொட்டிக் குவிப்பதற்கென்றே சில பாடல்களை எழுதுவதுண்டு. அவை அவ்விடத்திற்கு வேண்டாத செய்தி களாகக்கூட இருக்கலாம். அவற்றைப் பொருத்தமில்லாத படிம வரிசையாகப் (Combination of dissimilar Images) பாடலில் கொண்டுவந்து நிறுத்துவார். அவை பாடலின் சுவையைக் கெடுப்பதோடு, கருத்துத் தெளிவையும் கலக்கி விடும்.

சோழமென்றால் சூரியனாம்; அதனால் அன்றோ
    சூரியன்போல் சிறந்தோனைச் சோழன் என்றார்
ஆழமென்று கண்டறிந்த கார ணத்தால்
    அலைகடலை ஆழியென்றார்; உங்கட் கெல்லாம்
வேழமென்றால் தெரியாதா? பெண்க ளோடு
    விளையாடும் என்மகனா வேழம்? சான்றோர்,
ஈழமென்றால் கள்கென்பர்; செம்பொன் என்பர்;
    என்மகனைப் பொன்னென்றா சொல்லுகின்றீர்?

ஒழுக்கமில்லாமல் திரிந்த தன் மகன் கிள்ளியைச் சோழன் தித்தன் இவ்வாறு விமர்சிக்கிறான். சோழம், வேழம், ஈழம், ஆழம் என்ற நான்கு சொற்களின் நிகண்டு விளக்க மாக இப்பாடல் விளங்குகிறதே தவிர, எடுத்துக் கொண்ட பாத்திர விளக்கமாக (Characterization) இல்லை.

சுரதாவின் கற்பனைகள் சிலவிடங்களில் புரியாமல் நமக்குப் புதிராக இருப்பது போல், சில நேரங்களில் சுரதாவின் பேச்சும் நடவடிக்கையும்கூட நமக்குப் புதிராக இருக்கும். இவை கவிஞர்களுக்கே இயல்பாக அமைந்த பண்புகள். சுரதா மற்றவர்களை விமர்சிப்பதிலும் வல்லவர். அவருடைய விமர்சனம் சில சமயங்களில் கேட்பவர் உள்ளத்தைக் காயப்படுத்தினாலும் மிகவும் சுவையாக இருக்கும்.

1968-ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு சென்னைத் தீவுத் திடலில் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. 7–1–1968 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்குக் கலைஞர் கருணாநிதி தலைமையில் 'அண்ணா கவியரங்கம்' மாநாட்டு மேடையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கவியரங்க இளவரசர் அப்துல் ரகுமான், சரமாரியான சிலேடை வீச்சுக்களால் மாநாட்டு மேடையை 'அதம்' செய்து கொண்டிருந்தார், நானும் கவிஞர் சுரதாவும், கவியரங்கத்தைச் சுவைத்தபடி, ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தோம்.

''என்ன நவாப் சிலேடை மழை பொழிகிறார். சிலேடையை அரிதாகக் கையாள வேண்டும். இல்லாவிட்டால் அது செயற்கையாகத் தெரியும். ஒரு பெண்ணின் முன்தானை தானாக நழுவி விழுவது அழகு; வேண்டுமென்றே நழுவ விடுவது விரசம்'' என்றார் சுரதா. உவமையில்லாமல் அவருக்குப் பேச வராது.

1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17, 18 தேதிகளில் பூம்புகார் விழா. சிற்பச் சோலையான சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை அன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார்; இரண்டு நாளும் அடர்த்தியான முத்தமிழ் நிகழ்ச்சிகள். தமிழகத்தின்

இயல் இசை நாடக வித்தகர்கள் அத்துணை பேரும் கடற் கரைக் கூடாரங்களையும், சுற்றுப்புறத் தங்கல் மனை களையும் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

கவிஞர்களாகிய எங்களுக்கு வைத்தீஸ்வரன் கோவிலில், ஒரு தங்கல் மனையில் அறைகள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. கவிஞர் சுரதாவும் கொத்தமங்கலம் சுப்புவும் எனக்கு முன்பாகவே அங்கு வந்து தங்கியிருந்தனர். கவிஞர்களின் உபயோகத்துக்காக ஒரு தனிக் காரும் வழங் கப்பட்டிருந்தது. கவிஞர் சுரதா ஓர் உரையாடல் மன்னர் (Conversationist) ஓயாமல் விடிய விடியப் பேசுவார். 'சுரதா இரவுக்கும்', 'முதலிரவுக்கும்' சுவையில் அதிக வேறுபாடில்லை. சங்க இலக்கியம் முதல் சண்முகம் பட்டணம் பொடி வரை அன்று சரளமாகப் பேசினார் சுரதா; நேரம் போனது தெரியவில்லை.

பூம்புகார் விழாவில் கவியரங்கத் தலைமை கண்ணதாச னுக்கா சுரதாவுக்கா என்பதில் நிகழ்ச்சி அமைப்பாளர் களிடையே பெரிய குழப்பம். கடைசியில் கவியரங்கத் தலைமை கண்ணதாசனுக்குக் கொடுக்கப்பட்டது. தமிழறிஞர் கி. வா. ஜ. தலைமையில் நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் பலருள் ஒரு பேச்சாளராக முதல்நாள் நிகழ்ச்சியில் சுரதா இடம் பெற்றார். தம்மை ஒதுக்கிவிட்டார்கள் என்று சுரதா கருதிவிடக் கூடாதே என்பதற்காகக் கொடுக்கப்பட்ட ஆறுதல் பதவி அது, சுரதாவுக்கு அதில் வருத்தந்தான்; உறுமிக் கொண்டே இருந்தார்.

இரண்டாம் நாள் விழா நிகழ்ச்சிகளைக் காண நானும் சுரதாவும் புறப்பட்டோம். டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் சிலப்பதிகாரப் பட்டிமண்டபம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நானும் சுரதாவும் பார்வையாளர்

களிடையே சென்று அமர்ந்தோம். எங்கள் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தவர் போலக் கவிஞர் கருணானந்தம் அவசரமாக மேடையை விட்டு இறங்கி வந்தார்; என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பந்தலுக்கு வெளியே ஓடினார்.

''முருகு ஒரு பெரிய சிக்கல்! கண்ணதாசன் இன்று வரமுடியவில்லை என்று சொல்லிவிட்டார். பிற்பகல் சுரதாதான் கவியரங்கத் தலைமை ஏற்கவேண்டும். சுரதாவைச் சமாளிப்பது உங்கள் பொறுப்பு!'' என்று அழாக்குறையாகச் சொன்னார் கருணானந்தம்.

எனக்கு மிகவும் தர்ம சங்கடமான நிலை. சுரதா மானப் பிரச்சனையில் எப்போதும் விட்டுக் கொடுக்காதவர். நான் சுரதா அருகில் சென்று நின்றேன்.

'என்ன?' - சுருக்கென்று சுரதாவின் கேள்வி தைத்தது. 'என்னோடு வாருங்கள் சொல்கிறேன்' என்று சொல்லி அவரை அழைத்துக் கொண்டு கார் அருகில் சென்றேன். 'காரில் ஏறுங்கள்' என்றேன். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுக் காரில் ஏறிக் கொண்டார். 'நேராக வைத்தீஸ்வரன் கோவில் லாட்ஜுக்கு ஓட்டு' என்று காரோட்டியிடம் சொன்னேன். சுரதா புரிந்து கொண்டார்.

கவிஞர் கண்ணதாசனின் சாதிப் பெயரைச் சொல்லி...... 'வரலியா?' என்று கேட்டார்.

'நீங்கள்தான் இன்று கவியரங்கத் தலைவர்!' என்று சொன்னேன். ஆத்திரமும் கோபமும் கலந்த சொற்களால் சுரதா என்னை அருச்சிக்கத் தொடங்கி விட்டார். அவரே ஓயட்டும் என்று பேசாமல் இருந்தேன். கார் விடுதியை அடைந்தது.

காஃபியும் பொடியும் கேட்டார்; தருவித்துக் கொடுத்தேன். எழுதுகோலையும், தாளையும் கையில் கொடுத்து 'தலைமைக் கவிதை எழுதுங்கள்' என்று சொல்லி விட்டு, அவருடைய அறையை வெளியில் பூட்டிவிட்டேன், மற்றவர்கள் உள்ளே சென்று அவர் வேலையைக் கெடுத்து விடக் கூடாது என்பதற்காக.

கவியரங்கம் பிற்பகல் 4 மணிக்குத் தொடக்கம். 3 மணிக்கு அறைக்கதவைத் திறந்து விட்டேன். ''இதோ ஆச்சு! கடைசிப் பாட்டு எழுதிக்கிட்டிருக்கிறேன். சே! கவிதை எவ எழுதுவான்! விறகு பொளக்கற மாதிரி அலுப்பா இருக்குது'' என்று முணகிக் கொண்டே எழுதினார். சரியாக 4 மணிக்கு நானும் சுரதாவும் கவியரங்க மேடையில் ஏறினோம்.

''அப்பா இப்பத்தா எனக்கு உசிரே வந்தது!'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டார் கவிஞர் கருணானந்தம். அன்று சுரதா பாடியவற்றுள் 'கொசுக்கடித்து யானையொன்றும் சாவதில்லை' என்ற உவமை என் உள்ளத்தில் உடனே அப்பிக் கொண்டது.

கவியரங்கம் மாலை 6 மணிக்கு முடிவுற்றது. நானும் சுரதாவும் வேறு பல நண்பர்களும் வைத்தீஸ்வரன் கோவிலுக்குக் காரில் திரும்பிக் கொண்டிருந்தோம். அந்தியிருள் கவியத் தொடங்கியிருந்தது.

''டிரைவர்! காரை கழாஅர்த் துறைக்கு ஓட்டு'' என்றார் சுரதா. வண்டி சற்று நேரத்தில் காவிரிக் கரையை அடைந்தது. முசிரிக்கருகில் மைல் கணக்கில் பரந்திருந்த அகண்ட காவேரி, இளைத்துப்போய் அவ்விடத்தில் ஒரு வாய்க்காலாக ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையில் 'கழாஅர்த் துறை' என்று பெயர்ப் பலகை காணப்பட்டது.

சுரதா காரில் இருந்து இறங்கி அவசர அவசரமாக ஆற்றுச் சரிவில் ஓடினார். நானும் அவருடன் ஓடினேன். ஆற்று நீரை உள்ளங்கையால் எடுத்து முத்தமிட்டார் சுரதா. 'என்ன இது?' என்றேன் நான்.

'நீயும் முத்தமிடு! இது எவ்வளவு வரலாற்றுப் புகழ்மிக்க இடம்! ஆட்டன் அத்தி இங்குதானே நீரில் குடைந்து விளையாடினான்! ஆதிமந்தி இந்தக் கரையில்தானே கண்ணீர் மாலை தொடுத்தாள்!'' என்று சொல்லி மெய் மறந்து நின்றார். ஓ...... உண்மையான ஒரு கவிஞ தரிசனம்?

1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் சுரதா சேலம் வந்திருந் தார். அப்போது அவருடைய 'சுரதா இதழ்' புத்தக வடிவில் ஆஃப்செட் வண்ண முகப்போடு வெளியாகி யிருந்தது. புதுப்பெண்ணைத் தேனிலவுக்கு அழைத்து வந்ததுபோல், மெருகு குலையாத 'சுரதா இதழோடு' வந்திருந்தார் சுரதா.

'சுரதா பொங்கல் மலர்' சிறப்பாக வெளியிடப் போகிறேன். எனக்குச் சேலத்தில் விளம்பரங்கள் திரட்டித் தர வேண்டும்'' என்று என்னிடம் கேட்டார். சேலம் சுரதா அன்பர்களுள் குறிப்பிடத்தக்கவரான புலவர் அருச்சுனனும், நானும் இரண்டு மூன்று நாட்கள் அலைந்து திரிந்து ரூ. 2000/- அளவுக்கு விளம்பரம் திரட்டித் தந்தோம்.

சேலத்தில் பெரிய செல்வரும், பேருந்து உரிமையாளரும், ஆலை அதிபரும், காங்கிரஸ் தலைவருமான ஒரு பிரமுக ரிடம் விளம்பரம் பெறுவதற்காகச் சுரதாவை அழைத்துச் சென்றோம். அவர் அப்போது வெளியில் சென்றிருந்தார். அங்கே அப்போது இரண்டு பெரும் புலவர்கள் அமர்ந்திருந் தனர். இருவரும் பழுத்த ஆத்திகர்கள்; வைராக்கிய

வைணவர்கள்; கம்ப ராமாயணத்திலும், காந்தியத்திலும் அளவு கடந்த பற்றும் ஈடுபாடும் கொண்டவர்கள். சுரதா விடம் அன்பும் மரியாதையும் கொண்டவர்கள். சுரதாவைக் கண்டவுடன் ''கவிஞரே! வருக!'' என்று ஆவலோடு வரவேற்று அன்புடன் அளவளாவினர்.

சுரதாவின் பேச்சு இலக்கியத்தைக் குடைந்து கொண்டு சென்று, இறுதியில் விவேகானந்தரிடம் வந்து நின்றது. பேசிக் கொண்டிருந்த சுரதா திடீரென்று 'நிவேதிதா விவேகானந்தரின் காதலி' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். உடனே அவ்விடத்தில் ஒரு நிசப்தம்! புலவர் களின் முகம் பேயறைந்தாற் போல் ஆயிற்று.

சற்றுநேர மௌனத்துக்குப் பின், இக்கருத்தை நீங்கள் ஆதாரத்தோடு நிரூபிக்க முடியுமா?'' என்று கேட்டார் ஒரு புலவர். மிகவும் புண்பட்ட உணர்வோடு அக்கேள்வி அவர் உள்ளத்திலிருந்து புறப்பட்டு வந்தது. கோபத்தால் அவர் உடல் நடுங்கியது. நானும் புலவர் அருச்சுனனும் செய்வதறியாது திகைத்தோம்.

சுரதா போருக்குத் தயாராகி விட்டார். ''நான் இங்கே விளம்பரம் பெறுவதற்காக வந்தேன்' சரி! அது கிடக் கட்டும்! இப்போது இதை (விவேகானந்தர் நிவேதிதா விவகாரத்தை) இரண்டிலொன்று பார்த்து விடுவோம்'' என்று தோள் தட்டத் தொடங்கிவிட்டார். கவிஞரைச் சமாதானம் செய்து எப்படியோ வெளியில் அழைத்து வந்துவிட்டோம். அடுத்த நாள் நான் மட்டும் தனியாகப் போய் அச்செல்வரைக் கண்டு, முதல் நாள் நிகழ்ச்சிக்குச் சமாதானம் சொல்லிவிட்டு, ஒரு பக்கம் விளம்பரம் வாங்கிக் கொண்டு வந்தேன்.

சுரதாவுக்கு எப்போதும் போலித் தனம் பிடிக்காது. திறமையில்லாத எவரையும் மதிக்கமாட்டார். கொஞ்சம் கூடக் கூச்ச நாச்சமில்லாமல் வேண்டியவர்-நீண்ட நாள்

பழகியவர் என்ற தாட்சண்யம் பார்க்காமல் உள்ளத்தில் நினைப்பதை அப்படியே அம்மணமாகக் கொட்டி விடுவார். சில சமயம் கேட்பவர் நடுங்கி ஒடுங்கிப் போகுமளவுக்கு உண்மைகளைப் பச்சையாக உதறி விடுவார்.

கவிஞர் நன்னியூர் நாவரசன் சுரதாவின் அணுக்கச் சீடர்களில் ஒருவர்; காவிரிக் கரைப் பண்ணையார். கவிதை, பேசும் பாணி, நடைஉடை பாவனை யாவற்றிலும் அப்படியே சுரதாவை நூற்றுக்கு நூறு பின்பற்றுபவர். பொதுவாகச் சொன்னால் நாவரசன் ஒரு 'சுரதாயிஸ்ட்', சில சமயங்களில் சுரதா நன்னியூர் போய், நாவரசன் வீட்டில் அரச மரியாதையோடு தங்குவது வழக்கம்.

1982-இல் பொங்கல் விழாக் கவியரங்கிற்குத் தலைமை தாங்குவதற்குக் கரூர் வந்திருந்தார் சுரதா. நன்னியூர் நாவரசனும், சுரதாவின் கவிதையன்பர்களும், கல்லூரிப் பேராசிரியர் சிலரும், சுரதா தங்கியிருந்த அறையில் கூடியிருந்தனர். சுரதா தமக்கே உரிய பாணியில் சுவையாகவும், சுறுசுறுப்பாகவும் பேசிக் கொண்டிருந்தார்.

தமிழகத்தில் மிகப் பெரிய பதவியில் இருப்பவரும், கவிஞருமான ஒரு பிரமுகரின் தம்பி ஒருவரும், அக்கூட்டத்தில் இருந்தார். அவர் ஓயாமல் தமையனாரைப் பற்றியும், அவருடைய கவிதையைப் பற்றியும், பேசிக் கொண்டிருந்தார். கேட்டுக் கேட்டுச் சுரதாவுக்கு அலுத்துப் போய் விட்டது. கடைசியில் எரிச்சலும் வந்துவிட்டது.

"என்னய்யா சுத்த முட்டாளா இருக்கிற. ஓயாம உங்கண்ண புகழையே பேசிக்கிட்டிருக்கிறயே! நீ என்னய்யா சாதிச்சிருக்கிறே?'' என்று வெடுக்கெனக் கேட்டார் சுரதா. அந்த நண்பர் முகம் தொங்கிப் போயிற்று.

சுரதாவின் கவிதைப் பாணி சற்றுக் கடினமான ஒன்று. எல்லாராலும் எளிதில் பின்பற்ற முடியாத ஒன்று. ஆழ்ந்து, அகன்ற கல்வியறிவும், நுட்பமான கற்பனை யாற்றலும், சிந்திக்கும் திறனும் உள்ளவர்களே சுரதாவின் கவிதைப் பாணியில் வெற்றி பெறமுடியும். எனவே சுரதாவைப் பின்பற்றி எழுதியவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். ஆங்கிலக் கவிதையுலகில் கூட, மெய்விளக்கக் கவிஞர்கள் ஒரு நூற்றாண்டுக் காலம்தான் ஆதிக்கம் செலுத்தினர். அவர்களுள் ஐந்தாறு கவிஞர்களே குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள்.

தமிழகத்தில் சுரதாவை பின்பற்றி எழுதிய கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் நான், பனம்பாக்கம் சீத்தா, பொன்னி வளவன், நன்னியூர் நாவரசன், எழில்முதல்வன், புதுமைவாணன் ஆகியோர். எழில்முதல்வன் இருபது ஆண்டுகளுக்கு முன்பே கவிதை எழுதுவதை விட்டு விட்டார். அவருடைய துவக்க கால வளர்ச்சி விறுவிறுப் பாக இருந்தது. ஏன் கவிதைத் துறையை விட்டு ஒதுங்கி விட்டார் என்பது புரியவில்லை. பொன்னி வளவன் நல்ல விளம்பரத்தோடு வளர்ந்தார். அவருடைய படைப்புக் களும் நூல்களாக வெளி வந்துள்ளன. கவியரங்க மேடை களில் அவர் கவனம் திரும்பிவிட்டது. கவிதைத் துறை யின் தற்காலப் போக்கையொட்டி, சுரதா பாணியிலிருந்து நானும் திசை திரும்பிவிட்டேன். நன்னியூர் நாவரசன், பனம்பாக்கம் சீத்தா ஆகியோரின் கவிதைகள் விட்டு விட்டுச் சிறு தூறல்களாகப் பெய்து கொண்டிருக்கின்றன. சுரதாவின் கவிதைப் பாணி (The School of Suradha Poetry) அவரோடு முடிந்து விடும். ஆனால் அவரது பாணி கவிதைத் துறையில் பல புதிய வாயில்களைத் திறந்து விட்டிருக்கிறது. சொல்வதைப் புதுமையாகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தை இளைஞர் உள்ளத்தில்

தோற்றுவித்தவர் சுரதா. படிமங்களை அடுக்கிப் பாடும் உத்தியும் (Imagism), உருவகங்களைச் செறிவாகப் பயன் படுத்தும் உத்தியும் இன்றைய புதுக் கவிதையில் விரும்பி வரவேற்கப்படுகின்றன. சுரதா தமது மரபுக் கவிதை யிலேயே இவற்றை வெற்றிகரமாகக் கையாண்டு இளைஞர் களுக்கு வழிகாட்டியிருக்கிறார். சுரதாவின் வசன கவிதை யும் வெற்றிகரமான முயற்சி. நெடுந்தூரம் நடந்துவந்த மரபுக் கவிதை, சுரதா என்னும் வசந்த மண்டபத்தில் தங்கி இளைப்பாறி, புத்துணர்ச்சி பெற்று, தன் புதிய பயணத் தைத் துவங்கியிருக்கிறது.

சுரதாவுக்குப் பிறமொழி இலக்கியப் பயிற்சி இல்லை. மேலை நாடுகளின் கவிதை வளர்ச்சியைப் பற்றிச் சுரதா அறிந்திருந் தால், அவருடைய வளர்ச்சி இன்னும் வியக்கத் தக்கதாக இருந்திருக்கும். சங்க இலக்கியங்களிலும், இடைக்காலப் பிரபந்தங்களிலுமே இவர் எண்ணங்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன. இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகள் இவர் படைப்பில் குறைவு. ஒரு மகாகவிக்குரிய ஆற்றல்கள் சுரதாவிடம் முழுமை பெறாமல் நிற்கின்றன. என்றாலும் தமிழ்க் கவிதை வரலாற்றில் சுரதாவுக்கு ஓர் அத்தியாயம் கட்டாயம் உண்டு,

௨

சார்ல் போதலேர்

எட்கார் ஆலன்போ என்ற அமெரிக்க எழுத்தாளரின் படைப்பின் மீது போதலேருக்கு அளவு கடந்த ஈடுபாடு உண்டு. இலக்கியத் துறையில் அவரைத் தம் குருவாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டார். அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை! அவருடைய பழக்கங்களையும் ஏற்றுக் கொண்டார்.

ஆலன்போ ஒரு அபின் பிரியர்; போதலேர் கஞ்சாப் பிரியர். அபினும் கஞ்சாவும், பயன்படுத்துபவரைத் தூக்கத்தில் ஆழ்த்துவதில்லை; அவர்கள் உள்ளத்தில் ஒருவிதக் கிளர்ச்சியை ஏற்படுத்தி, விரும்பி ஏற்றுக் கொண்ட கனவு நிலைக்கு ஆட்படுத்துகின்றன. அவற்றைப் பயன்படுத்தியவுடன் அவர்கள் உள்ளம் எந்தப் போக்கில் பயணம் செய்கின்றதோ, அந்தப் போக்கிற்கு அவர்களை எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் செலுத்துகின்றன.

கஞ்சா மயக்கம் ஏற்படுத்தும் குழப்பமான அற்புதம் பற்றிப் போதலேர், பின்கண்டவாறு குறிப்பிடுகிறார்: ''கஞ்சாப் போதையின் துவக்கத்தில், வழக்கத்திற்கு மாறான வண்ணத்தின் ஆதிக்கம் நமக்குப் புலப்படும்.

கண்ணைப் பறிக்கும் ஒளியுடம்போடு காட்சி தரும் மோகினிப் பெண்கள், நீலவானை விடத் தெளிவான ஆழமான விழிகளால் நம்மை உற்றுப் பார்ப்பார்கள். அப்போது ஏற்படும் இனம் புரியாத க்ஷணநேர மனநிலை களில் நம் வாழ்க்கையின் ஆழ அகலங்களும், நெளிவு சுழிவுகளும், அற்புதங்களும் நம் கண்முன் பளிச்சிடும். நம் கண்ணுக்கு முதன் முதலில் எந்தப் பொருள் தென் படுகிறதோ, அதுவே நம் அறிவை நடத்திச் செல்லும் குறியீடாக அமையும். தெளிந்த நீர்நிலைகளும், நிலைக் கண்ணாடிகளும் கனவுலகத்தை நமக்குத் திறந்துவிடும்; சோகமயமான ஒரு பேரின்பத்தில் நம் உள்ளம் ஆழ்ந்து, எல்லையற்ற காட்சிகளில் திளைக்கும்.''

இத்தகைய அனுபவத்தில் திளைத்து மிகவும் நூதனமான உணர்ச்சி வெளிப்பாடுகளுடன் கூடிய அரிய கவிதை களைப் படைத்த கவிஞர், போதலேர் மட்டும் அல்லர்; வேறுபலரும் இருந்திருக்கின்றனர். மகாகவி பாரதியாருக் கும் கஞ்சாப்பழக்கம் உண்டு; குயில்பாட்டும் இந்த அடிப்படையில், அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட கனவு நிலைக் கற்பனைதான். கோலரிட்ஜின் 'குப்ளாய்கான்' என்ற கவிதையையும், இந்த வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம்.

பியர் சார்ல் போதலேர் (Baudelaire Piere Charles) 1821 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப் பினரின் மகனாகப் பாரிசில் பிறந்தார். இவர் சிறுவனாக இருக்கும்போதே தந்தை இறந்தார்; தாய் ஓர் இராணுவ அதிகாரியை மறுமணம் செய்துகொண்டார். போதலேர் பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்டு, சட்டக்கல்லூரியில் நுழைந்தார்.

வீட்டுக் கடங்காத பிள்ளையாக இருந்த இவரைக் கப்பலேற்றிக் கல்கத்தாவுக்கு அனுப்பினர் பெற்றோர். ஆனால் நடுவழியில் மொரீஷியஸ் தீவில் இறங்கிக் கொண்டார். வெப்பமண்டலத்தில் இருந்த மொரீஷியஸ் தீவில் சிலகாலம் தங்கியிருந்து வெது வெதுப்பான அனுபவங்களோடு பாரீஸ் திரும்பினார் போதலேர்.

சுதந்தரமான பணவசதியோடு இருந்த போதலேர், பாரீசின் நவநாகரீகக் கேந்திரமான 'லத்தீன் குவார்ட்டர்ஸ்' என்ற பகுதியில் கட்டுப்பாடற்ற உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டார். நீக்ரோக் கலப்பு இனக் காரிகை, கருப்பு ரதி ழான் துய்வால் (Black Venus Jeanre Duval) என்பவள் இவருக்கு நிரந்தரக் காதலியாகக் கிடைத்தாள். சீமாட்டி சபாத்தியர் என்ற நடிகையிடமும் அவருக்குத் தொடர்பிருந்தது. போதலேரின் சொர்க்க நரகக் கற்பனைகள், இவ்விருவர் மீதும் அவர் கொண்ட காதற் சுழியிலே சுழன்றடிக்கின்றன.

இளமையில் அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட கொள்கை 'டாண்டியிசம்'. தன் விருப்பப்படி வாழ்தல், தன்முனைப் போடு முதன்மையாக இருத்தல், நட்பு, நாடு, குடும்பம் என்ற பற்றுக்களை அறுத்துச் சுதந்தர மனிதனாக வாழ்தல், பிரபுக்களை வெறுத்தல் என்பன டாண்டியிசத்தின் குறிக்கோள்கள்.

''பசி, இன்பம், அன்புக்கினிய தாய் ஆகிய எல்லாவற்றுக்கும் மேலாக நான் நேசிப்பது இலக்கியமே'' என்று குறிப்பிடும் போதலேர் 'கலை கலைக்காகவே' என்ற கொள்கையுடையவர். ரொமாண்டிக் கவிஞர்கள் விரும்பிப் போற்றும், 'பொங்கிவரும் மனவெழுச்சிக் கொள்கையை' இவர் ஏற்றுக் கொள்வதில்லை. கலைக்கு ஒரு தெய்வீக மரியாதையும் இவரிடத்தில் கிடையாது.

''அழகு, அறம், கலை யாவும் செயற்கையானவை; அவை கலைஞன் அல்லது கவிஞனின் திட்டமிட்ட சிந்தனையிலிருந்து தோன்றுபவை. கவிதையை எந்த விதப் பிரசாரத்துக்கும் பயன்படுத்தக் கூடாது. அழகின் மீது அடங்காக் காதல் கொள்ளுதலும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் அழைப்புகளுக்கு அடிபணிதலும், தவிர்க்க முடியாதவை என்ற காரணத்தால், கலைஞனும் கவிஞனும் தாம் மேற்கொண்ட படைப்புப் பணிக்கு நிரந்தர அடிமை'' என்ற சிந்தனைப் போக்குடையவர் போதலேர்.

கவிதையின் கருப்பொருள் உயர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தில் போதலேருக்கு உடன்பாடு கிடையாது. அன்றாட வாழ்க்கையில் தட்டுப்படும் சாதாரணப் பொருள்களும், இழிந்த பொருள்களுமே அழகானவை என்றும், அப்பொருள்களை அழகிய சொல் லோவியத்தால் அலங்கரிப்பதே மேலான கவிதை உத்தி (Grand Style of Poetry) என்று குறிப்பிட்டார். ஏழை, குடிகாரன், தெருப் பிச்சைக்காரன், விபசாரி, அபலை ஆகியோரும், பழி, பாவம், தீவினை, பொல்லாங்கு ஆகியவையும், அவர் கவிதைக்கு விரும்பி ஏற்றுக் கொண்ட கருப்பொருள்கள். இக்கொள்கைக்கு அவர் பாடியுள்ள 'சூரியன்' என்ற கவிதை சிறந்த எடுத்துக்காட்டு. மேற்கு வாயிலில் படியும் மாலைச் சூரியனின் வர்ணஜாலத்தால் உலகின் சாதாரணப் பொருள்களும் எப்படிப் பேரழகு பூணுகின்றன என்பதை அப்பாட்டில் சிறப்பித்துப் பாடுகிறார். இத்தகைய ரசவாதத்தை ஏற்படுத்தக் கவிஞனானவன் மப்புமந்தாரமற்ற மேல் வானத்துக்குத் தன் ஒளிபடைத்த கண்களை உயர்த்த வேண்டும்; அப்போது பொருளற்ற அற்பப் பொருள்களும் நுட்பமான பொருள் விளக்கம் பெறும்'' என்று கூறுகிறார் போதலேர்.

போதலேரின் இக்கொள்கையை மாநகர்க் கொள்கை (The religious intoxication of great cities) என்று திறனாய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

மேலைநாட்டுக் கலை இலக்கியப் போக்கை அடியோடு மாற்றியமைத்த ஆற்றல் மிக்க இயக்கங்களான சர்ரியலிசம், சிம்பாலிசம் ஆகியுவற்றின் ஊற்றுக் கண்ணே போதலேர்தான் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட உண்மை. அவருடைய கவிதை நூலான 'நச்சுப் பூக்கள்' (Les Fleurs du Mal) 1857 ஆம் ஆண்டு முதன்முதலாக வெளியிடப்பட்டது. அதில் தெய்வ நிந்தனை காணப்படு கிறது என்று கூறிச் சமயவாதிகள் கண்டனக் குரல் எழுப் பினர். படிப்பவர் உள்ளத்தில் கீழ்த்தரமான உணர்ச்சிகளை அவர் கவிதைகள் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி, பிரெஞ்சு அரசாங்கம் 300 பிராங்க் அவருக்கு அபராதம் விதித்தது.

தனக்குப் பின் வந்த சந்ததியினரிடையே நச்சுப் பூக்களைப் போல் அபரிதமான செல்வாக்குப் பெற்ற வேறு கவிதை நூல் மேலை நாட்டில் எதுவுமில்லை என்று சொல்லாம். மேலை நாட்டில் கவிதைப் புதுமையே (Modernism in poetry) இந்நூலில் இருந்துதான் தொடங்குகிறது.

புதுக் கவிஞர்களின் முன்மாதிரியே (Archtype) போதலேர் தான். புதுக் கவிஞர்களின் பண்புகளான வரையறுக்கப் பட்ட தனிமை, எதிர்ப்புணர்ச்சி, மனச் சஞ்சலம், தன்னையே அழித்துக் கொள்ளும் ஆத்திர உணர்ச்சி யாவும் போதலேரிடமிருந்து பெற்றவையே. ''பிறர் தூற்றும்படி புரட்சிகரமாக வாழ்ந்த போதலேருடைய வாழ்க்கையின் அடிக்குறிப்புப் பற்றிய வரலாறே, புதுக் கவிதையின் தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாறாகும்'' என்று மேலை நாட்டுத் திறனாய்வாளர் குறிப்பிடுவது பொருத்தமே.

''கற்பனை என்பது அறிவியல் அடிப்படையில் அமைந்த பேராற்றல். பேரண்டத்தின் ஒழுங்கையும் இயக்கத்தையும் கற்பனை ஆற்றலால்தான் உணர முடியும்'' என்று போதலேர் குறிப்பிட்டார். ஸ்வீடன் பர்க்கும், ஆலன்போவும் இதே கொள்கையுடையவர்கள்.

போதலேர் ஓர் ஐயுறவாளர் (Sceptic). கற்பனை ஒரு பேராற்றல் என்று குறிப்பிட்டாலும், அது கை கொடுத்து உதவாத சில நேரங்களில் அதன் மீது அவருக்கு ஐயுறவு ஏற்பட்டது. அந்த நேரங்களில் கற்பனைக்கு ஊக்கம் கொடுப்பதற்காக மதுவையும், கஞ்சாவையும் நாடினார். அவற்றின் தூண்டுதலால் ஒரு செயற்கைச் சொர்க்கத்தை அவரே படைத்துக்கொண்டு அதில் திளைத்தார்.

போதலேர் கடவுட்பற்றோ, மதப்பற்றோ இல்லாதவர். என்றாலும் அவர் உள்ளத்தில் படிந்துவிட்ட சமயக் கருத்துக்கள் சிலவற்றை அவரால் உதற முடியவில்லை, கிறித்தவ சமயக் கொள்கைப்படி, மனிதன் பாவியாகவே இருக்கிறான் என்ற உணர்வும், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்வதற்குமுன் வாழ்ந்த 'ஏதேன்' என்ற சொர்க்கத்தை மனிதன் மீண்டும் அடையமுடியாது என்ற உணர்வும், இவ்வுலகின் துன்பமாகிய கோரப்பிடியிலிருந்து விடுபடமுடியாது என்ற உணர்வும் போதலேரை ஆட்டிப் படைக்கின்றன. இத்துன்ப உலகின் பிடியிலிருந்து விடு பட்டுத்தன் ஆன்மாவைப் பரவசப் படுத்துவதற்காக, அவரே படைத்துக் கொண்டது தான் 'செயற்கைச் சொர்க்கம்!'.

போதலேரின் நச்சுப் பூக்கள் மூன்று கொத்தாக மலர்ந் திருக்கின்றன. முதல்கொத்து அவர் உளச்சோர்வையும், இரண்டாவது கொத்து பாரிஸ் நகரக் காட்சிகளையும், மூன்றாவது கொத்து செயற்கைச் சொர்க்கத்தை

நோக்கிய அவர் பயணத்தையும், விவரிக்கின்றன. இளமையில் கட்டுப்பாடின்றி வாழ்ந்த தம் இழிந்த வாழ்க்கையைப் பலபாடல்களில் அவர் திரும்பிப்பார்த்து உளச்சோர்வு கொள்கிறார். தம்மை வாட்டும் உளச் சோர்வில் அழுந்திப்போவதா அல்லது செயற்கைச் சொர்க்கத்தில் பறப்பதா என்ற ஊசலாட்டம் பல பாடல் களில் கற்பனை நயத்தோடு எடுத்துரைக்கப்படுகின்றது. பல பாடல்களில் செயற்கைச் சொர்க்கத்தில் அவர் அடை யும் பரவசநிலை பேசப்படுகின்றது. பெண்ணால் பெறும் ஐம்புலன் இன்பத்தைக் கற்பனை செய்யாமல் ஒலி, ஒளி, மணம் இவற்றால் பெறும் இன்பங்களையே கற்பனை செய் கிறார் போதலேர். அவருடைய சொர்க்கத்தில் வரும் அடிமைகளும் ஏவலர்களும் நிர்வாணமாகக் காட்சி தருகின் றனர். அவர்களுடைய நிர்வாணம், இவ்வுலக நாகரீகத்தின் தீக்கரங்களால் தீண்டப்படாத தூய்மையின் உருவகம்.

செயற்கைச் சொர்க்கத்தில் போதலேர் அடிக்கடி திளைத்துப் பரவசப்பட்டாலும், சாவைப் பற்றிய எண்ணம் அவர் உள்ளத்தை விட்டு நீங்கவில்லை. நச்சுப் பூக்களின் இறுதியில் உள்ள பயணம் என்ற பாட்டில் தாம் கடலின் அலைவயிற்றில் ஆழ்ந்துவிட விருப்பம் தெரிவிக் கிறார். தாம் சென்றடைய விரும்பும் குறிக்கோள் சொர்க் மாக இருந்தாலும் சரி, நரகமாக இருந்தாலும் சரி, இனந் தெரியாத ஒன்றன் ஆழத்தில் தாம் மூழ்கிவிட விரும்பு கிறார். 'ஏழையின் சாவு' என்ற பாடலில் சாவை மகிழ்ச்சி தரும் இன்ப உணர்வோடு வரவேற்றுப் பாடுகிறார்.

சாவே!
தெய்வீகப் பெரும்புகழே!
தேடலுக்குப் புலப்படாத
கற்பனைக் களஞ்சியமே!
ஏழை விரும்பும் போது
எடுத்துச் செலவிடும்
பரம்பரைச் சொத்தே !

புரிந்து கொள்ள முடியாத
வானுலகின் வாயிற் கதவே! — என்று

சாவைத் தன் சங்கீத வரிகளால் அலங்கரிக்கிறார்.

செயற்கைச் சொர்க்கத்துப் பரவச நிலையைக்கூட மரணத் துன்பத்தைக் கலந்துதான் அனுபவித்தார். ◈ 'சிதிரியாப் பயணம்' என்ற கவிதையில், காதல் தீவே அவருக்குக் கறைபடிந்து காட்சியளிக்கிறது.

வானம் -
தெளிந்த அழகோடு
காட்சி யளிக்கிறது.
கடலும் -
ஆழ்ந்த அமைதியுடன்
படுத்திருக்கிறது.
ஆனால் -
எங்கும் இருள்;
திட்டுத் திட்டான
ரத்தக் கறைகள்!
என் இதயம் -
ஒரு முரட்டுக் காகிதத்தில்
சுருட்டப் பட்டுப்
புதைந்து கிடப்பதாக
எனக்குள் ஓர் உருவகம்!

ஓ வீனஸே!
உன் காதல் தீவில்
ஒரு கற்பனைத்
தூக்கு மரத்தில்
என் உருவம்
தொங்கிக் கொண்டிருக்கிறது.

◈ சிதிரியா-கிரேக்கக் காதல் தேவதை வீனஸ் வீற்றிருக்கும் தீவு.

ஆண்டவனே !
என் உடம்பையும்
இதயத்தையும்
வெறுப்பில்லாமல் பார்க்க
எனக்கு ஆற்றலைக் கொடு ! — என்று

வேண்டுகிறார் போதலேர்.

அவர் எழுதியுள்ள கடற்பறவை (Albeatross) என்ற பாடல் அவருடைய அவஸ்தையின் குறியீடாகவும், நச்சுப் பூக்களின் மையக் கருத்தாகவும் அமைந்துள்ளது. ஆல்பட்ராஸ் என்ற கடற்பறவை நீண்ட இறக்கைகளை உடையது. அதை வானமண்டலத்தரசன் (The prince of the clouds) என்று குறிப்பிடுவர். வானத்தை அனாயாசமாக அளக்க உதவும் அப்பெரிய சிறகுகளே, பூமியை அடைந்ததும் அதற்குப்பெரிய சுமையாக மாறிவிடுகின்றன. அவற்றைத் தூக்கிக்கொண்டு அப்பறவையால் அடியெடுத்து நடக்க முடிவதில்லை.

போதலேர் தமது ஆற்றல் மிக்க கற்பனையின் உதவியோடு சொர்க்கமண்டலத்தில் பறந்தாலும், இவ்வுலகப் பற்றும், சிற்றின்ப இச்சையும் தம்மைப் பிணித்து முடக்கி விடுவதாக எண்ணி வருந்துகிறார்; தாம் ஆழ்ந்திருக்கும் துன்பக் கடலிலிருந்து மீட்சியே கிடையாது என்ற வருத்தம் அடிக்கடி அவரிடம் மேலோங்கி நிற்பதுண்டு.

பாரிஸ் நகரம் -
மாறிக் கொண்டிருக்கிறது
என்னை அழுத்தும்
துயரச் சுமை
சிறிது கூட அசையவில்லை -

என்று அவருடைய துயரப் பெருமூச்சு ஒருபாடலில் கேட்கிறது, மற்றொரு பாடலில்,

என் துயரமே!
அறிவோடு நடந்துகொள்,
அமைதியாக இரு!
இரவின் கொடுமைக்கஞ்சி
நீ கதறுகிறாய்?
இரவு விழுந்துவிட்டது,
இதோ -
விடியல் தலை தூக்குகிறது,

என்று ஞானிபோல் தமக்குத்தாமே ஆறுதல் கூறிக் கொள்கிறார்.

என்றாலும் அவர் வாழ்வில் மிஞ்சியது ஏமாற்றமே. அவர் எழுதியுள்ள உரைப் பாடல்களில், வாழ்வின் இறுதியில் அவர்கொண்ட சலிப்பும், ஏமாற்றமும் உருக்கமாகப் பேசப்படுகின்றன.

''சில சமயங்களில் என்னை ஒரு ஞானியென்று நான் முட்டாள்தனமாக நினைந்துக் கொள்வதுண்டு. ஒரு மருத்துவனுக்கு இருப்பதுபோல், அருளுள்ளம் என்னிடத்தில் அமையவேண்டும் என்று நான் அவாவுவதுண்டு; அப்பேறு எனக்குக் கிடைக்கப்போவதில்லை. இவ்வஞ்சக உலகில் என்னை நானே தொலைத்துவிட்டு, மக்கட் கூட்டத்தின் புறங்கையால் இடித்துத் தள்ளப்பட்டு அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன். என் கடந்த கால நினைவுகளின் ஆழத்தை அடிக்கடி எட்டிப் பார்த்து, நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன். ஏமாற்றமும், கசப்புணர்ச்சியும், துன்பமா - மீட்சியா என்று உணர முடியாத குழப்பமுமே எனக்கு மிஞ்சியவை என்று புலம்புகிறார் போதலேர்.

மேகத்தின் உச்சியில் பறப்பதற்கு உதவிய பெரிய சிறகுகளின் சுமை, பூமியில் கடற் பறவையைச் செயலற்றதாக்குவதுபோல், கற்பனைச் சொர்க்கத்தில் பறப்பதற்கு

இவருக்கு உதவியாக இருந்த இவரது சிறகுகளே (கஞ்சா, அளவற்ற மதுப்பழக்கம்) கடைசி நாட்களில் இவரை முடக்கிப்போட்டு விட்டன. பக்கவாதம், இவரை முடக்கிப் போட்டுப் படுக்கையில் தள்ளிவிட்டது. 'சிபிலிஸ்' இவரைச் சிதைத்துவிட்டது.

நீண்டநாள் கஞ்சாப் பழக்கத்தின் கடைசி மைல்கல், தலை சுற்றலும் (Vertigo) பைத்தியமும்தான். தன் கடைசி நிலையைப்பற்றிக் குறிப்பிடும்போது ''இன்பமும் அதிர்ச்சியும் கொண்ட இழுப்பு நோய் (Hysteria) எனக்குப் பழக்கமாகிப் போய்விட்டது. தொடர்ந்து தலைசுற்றலால் நான் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன். 23-1-1862 ஆம் நாளாகிய இன்று, எதிர்பாராத ஓர் எச்சரிக்கை எனக்குக் கிட்டியது. பறந்து செல்லும் பைத்தியச் சிறகு 'வீச்சின் காற்று, என்மீது படிந்து சென்றதை நான் உணர்ந்தேன்'' என்று குறிப்பிடுகிறார்.

தன்பெயரைக்கூட நினைவுகூர முடியாத நிலையிலும், நிலைக் கண்ணாடியில் தன் சொந்த முகத்தையே அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலையிலும், புறக்கணிப்புக்கு ஆளாகி, ஆதரவற்றுத் தமது கடைசி நாட்களைப் பாரிசில் கழித்தார். மிகச் சிறந்த கவிஞரான போதலேரைப் புகழ்பெற்ற பிரெஞ்சு இலக்கியக் கழகம் (French Acadamy) உறுப்பினராக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. அந்த வேதனையைத் தாளாத அவர், பாரீசை விட்டு நீங்கி, பெல்ஜியத்தில் சொற்பொழிவுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அலைச்சல் அவர் உடலை மிகவும் பாதித்தது. 1867 இல் பாரீஸ் மருத்துவமனையொன்றில் உயிர்துறந்தார்.

தாம் செய்யும் எந்தப் பணியையும், செப்பமாகவும், திருத்தமாகவும் செய்யவேண்டும் என்ற கொள்கையுடை

யவர் போதலேர். நிறைய எழுதுவதை அவர் விரும்ப வில்லை. ஒன்று செய்தாலும், ஒப்பற்றதாக இருக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். நச்சுப்பூக்களை 1850-இல் தொடங்கினார். அதன் குறைகளைக் களைந்து, பத்தாண்டுகள் திருத்தம் செய்து, மேன் மேலும் அழகுபடுத்தினார். 1861-இல் அதன் இறுதி வடிவம் உருப்பெற்றது.

போதலேரின் படைப்புக்கள் பற்றி ஆர்தர் சைமன்ஸ் என்ற திறனாய்வாளர், தாம் எழுதியுள்ள ' இலக்கியத்தில் குறியீட்டு இயக்கம்' (The Symbolist Movement in Literature) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> ''ஒரே ஒரு கவிதை நூலை எழுதுவதில் போதலேர் தமது வாழ்க்கை முழுவதை யும் செலவிட்டார்; அதன் பிறகுதான் பிரெஞ்சு மொழியில் உயர்ந்த கவிதை கள் எல்லாம் தோற்றம் எடுத்தன.
>
> ஓர் உரைநடை நூல் எழுதினார்; அந்த உரைநடை அழகுக் கலையாக (Fine Art) மதிக்கப்படுகிறது.
>
> ஒரு திறனாய்வு நூல் எழுதினார். அவர் வாழ்ந்த காலத்தில் தோன்றிய திறனாய்வு நூல்களில் இதுவே உயர்ந்த தும் உண்மையானதும், நுட்பமானதும் ஆகும்.
>
> ஒரு மொழிபெயர்ப்புச் செய்தார்; அது மூலத்தை விடச் சிறப்பானது''.

போதலேர் எழுதியுள்ள உரைப்பாக்கள் (Spleen de Paris) ஐம்பது இருக்கும். அவை எதுகையோ, இசையொழுங்கோ

இல்லாமல் எழுதப்பட்டவை; உள்ளத்தின் உணர்ச்சிகளுக் கேற்ற ஓசையொழுங்கும், தன்னை மறந்த சிந்தனையின் அலைவீச்சும் கொண்டவை; யாரும் எளிதில் பின்பற்ற முடியாதபடி கலைநுணுக்கமும், வேலைப்பாடும் மிக்கவை; உரைப்பாக்கள் வரலாற்றில் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவை; சில பண்புகளில் ஒப்பற்றவை; இலக்கியச் சோதனை முயற்சியில் பாராட்டத்தக்க அரிய வெற்றி.

தி லாக்ரிக்ஸ் என்ற ஓவியர் பற்றியும், தாமியர், மானெட், ஃப்ளாபர்ட், வேக்னர் என்ற எழுத்தாளர்கள் பற்றியும் அவர் எழுதியுள்ள கட்டுரைகள், திறனாய்வுக்கலை வளர்ச்சி பெறாத காலத்தில் எழுதப்பட்டவை. அக்கட்டுரை களைப் பெரும் இலக்கிய சாதனையாகப் பிற்கால அறிஞர் கள் பாராட்டியுள்ளனர்.

அமெரிக்க எழுத்தாளர் ஆலன் போவின் கதைகளைப் போதலேர் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்திருக் கிறார். மூலத்தின் சிறப்பு குன்றாமலும், மூலத்தைவிடச் சிறந்த கலையம்சத்துடனும் அது செய்யப்பட்டிருப் பதாக எல்லாரும் குறிப்பிடுகின்றனர். அமெரிக்க மக்களிடையே இந்த மொழிபெயர்ப்புக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

1865 ஆம் ஆண்டில் தமது படைப்புக்கள் பற்றித் தம் தாயிடம் குறிப்பிடும் போது ''என் படைப்பின் அளவு சிறியதாக இருக்கலாம்; ஆனால் அச்சிறிய படைப்பு, என் துயரம்மிக்க கடின உழைப்பின் வெளிப்பாடு'' என்று கூறியிருக்கிறார்.

1920 ஆம் ஆண்டில் ஆந்திரே கைட் என்ற அறிஞர் போதலேரைப் பற்றிப் பத்திரிகையில் குறிப்பிடும்போது,

''அவருடைய ஒவ்வொரு முயற்சியும், அவரது ஆன்மாவின் பரிதவிப்பாகவும், ஒப்பற்ற போராட்டமாகவும் அமைந்துள்ளது'' என்று கூறியுள்ளார்.

படித்தவர் உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கும்படி, எட்கார் ஆலன் போவைப் பற்றிப் போதலேர் உணர்ச்சி பூர்வமாக ஒரு கருத்தை வெளியிட்டார். ''இன்று நம் மகிழ்ச்சிக்கு ஊற்றாக இருப்பது (அவர் படைப்பு) எதுவோ, அதுவே அவரைக் கொன்றுவிட்டது'' என்றார். அந்தக் கருத்து போதலேருக்கும் பொருந்தும்.

○

ஃப்ரான்சுவா வில்லன்

பிரெஞ்சு நாட்டு வீராங்கனை ஜோன்-ஆப் ஆர்க் தீயிலிட்டுத் தெருவில் எரிக்கப்பட்ட 1431 ஆம் ஆண்டு, பாரிஸ் நகரில் பிறந் தான் கவிஞன் வில்லன். பெற்றோர் இவனுக்கு வைத்த பெயர் ஃப்ரான்சுவா-டி-மாண்ட் கார்பியர். வில்லன் என்பது இவனை இளமையில் பாதுகாத்து வளர்த்த கில்லாம்-டி-வில்லன் என்ற பாதிரியாரிட மிருந்து பெற்ற பெயர்.

இந்திய இலக்கிய வரலாற்றில் கள்வனாக வாழ்க்கையைத் தொடங்கிக் கவிஞனாக மாறியவர் மகாகவி வால்மீகி. பிரெஞ்சு இலக்கிய வரலாற்றில் கள்வனாகவும், கவிஞ னாகவும் கடைசிவரை வாழ்ந்து தன் மூச்சை முடித்துக் கொண்டவன் வில்லன்.

வில்லன் குழந்தையாக இருக்கும்போதே தந்தையை இழந்தான்; ஆங்கிலேயரோடு நூற்றாண்டுப் போர் (Hundred years war) நடத்தி பிரெஞ்சு நாடு வறுமையின் எல்லைக் கோட்டைத் தொட்டுக் கொண் டிருந்த நேரம், வில்லனின் தளர்நடைப் பருவம். நாடெங்கும் திரிந்து கொண் டிருந்த கூலியில்லாப் பட்டாளம், எதிர்ப் பட்டதையெல்லாம் அடித்து நொறுக்கிக் கபளீகரம் செய்து கொண்டிருந்தது.

நாற்பது நாட்கள் தொடர்ந்து பனிமழை பெய்ததால், கடுங்குளிரில் சிக்கி ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். கொடிய பஞ்சம் ஏற்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினிக்கு இரையானார்கள். கடும்புயல் வீசி ஊர்களைச் சூறையாடியது. அம்மை நோய் வந்து ஐம்பதாயிரம் பேர் இறந்தனர். காட்டுக்குள்ளிருந்த ஓநாய்க் கூட்டங்கள் பாரிஸ் நகரில் நுழைந்து, குழந்தைகளையும் பெண்களையும் கொன்று இழுத்துக் கொண்டு ஓடின.

இவையாவும், மகாகவி வில்லன் பாரிஸ் மாநகரில் திருஅவதாரம் செய்தபோது தோன்றிய உற்பாதங்கள். குழந்தைக் கவிஞனின் பிஞ்சு விழிகள் இந்தக் கோரக் காட்சிகளை வியப்போடும் அச்சத்தோடும் பார்த்துப் பதிவு செய்து கொண்டன.

ஒரு கவிஞனின் வரலாற்றை அவன் படைத்த இலக்கியங்களில் இருந்தும், அவன் சமகாலக் கவிஞர்களின் படைப்புக்களிலிருந்தும் தேடிக் கண்டறிவது வழக்கம். வில்லனுடைய வரலாற்றை அவன் வாழ்ந்த காலத்துக் காவல் துறைக் குற்றப் பதிவேடுகளிலிருந்து, பிற்கால வரலாற்றாசிரியர்கள் தேடிக் கண்டறிந்தனர்.

1449 ஆம் ஆண்டு பி. ஏ. பட்டமும், 1452 ஆம் ஆண்டு எம். ஏ. பட்டமும் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பெற்றான் வில்லன். 15 ஆம் நூற்றாண்டில் பாரிசில் ஏற்பட்ட புகழ் பெற்ற மாணவர் கிளர்ச்சி, இவன் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோதுதான் ஏற்பட்டது. அக்கிளர்ச்சியில் வில்லனுக்கு முக்கியப் பங்கு உண்டு.

பாரிஸ் நகரின் பெருந்தனக்காரர்களின் வீட்டுக்குமுன் அடையாளக் கற்கள் (House Signs) நட்டிருப்பது அன்றைய வழக்கம். சீமாட்டி ப்ரூயெர்ஸ் (Madamoiselle-de-Bruyeres)

என்பவரின் வீட்டுக்கு முன்னால் நடப்பட்டிருந்த அடையாளக் கல்லின் பெயர் The Devils Fart (காற்றுப் பரிதல்) என்பது. அந்த விநோதமான பெயர் மாணவர் கூட்டத்தின் எல்லையில்லாத கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளாகியது. மாணவர்கள் பலர் ஓர் இரவில் கூட்டமாகச் சேர்ந்து அக்கல்லைப் பெயர்த்தெடுத்து சீன் நதிக்கரைக்கு இழுத்து சென்றனர். வேறொரு பிரபுவின் வீட்டு அடையாளக் கல்லையும் அங்கு இழுத்துக்கொண்டு வந்தனர். இரண்டையும் அருகில் நட்டு ஒன்றில் மான் என்றும், மற்றொன்றில் கரடி என்றும் எழுதி இரண்டிற்கும் கேலித் திருமணம் (Mock Marriage) செய்து வைத்தனர். இத்தகைய விளையாட்டு பல மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றது. பாரிஸ் நகரக் காவற் படைத் தலைவர் ஒரு நாள் தமது படையோடு மாணவர் இல்லங்களில் புகுந்து அவர்களைக் கடுமையாகத் தாக்கியதோடு, அவர்கள் உடமைகளையும் பறிமுதல் செய்தார். இத்திருவிளையாடலின் கதாநாயகன் ஃப்ரான்சுவா வில்லன்தான். இக்கேலித் திருமண வழக்கு பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் நீதித்துறைக்குமிடையே நீண்ட நாள் நடைபெற்றது.

வில்லன் இனிய குரல் வளம் படைத்த பாடகன். மதுப் புரைகளில் அவன் பாடுவான். எல்லோரும், அவன் கான மழையில் நனைந்து மெய்மறந்திருக்கும் போது வில்லனின் கூட்டாளிகள் மதுக் குடங்களைக் களவாடிக் கொண்டு சென்று விடுவது வழக்கம்.

அன்றைய பிரெஞ்சுப் பல்கலைக்கழகக் கல்வி, சமயக்கல்வி (Theology) யாகத்தான் இருந்தது. பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் ஓரளவு சமய அந்தஸ்துப் பெற்றவர்களாகக் கருதப்பட்டனர். சமய குருக்களைப்போல் தலையலங்காரம் செய்து கொள்ளவும் பட்டதாரிகள்

அனுமதிக்கப்பட்டனர். பட்டம் பெற்றவர்கள் எந்தத் தவறு செய்தாலும், அவர்களை விசாரிக்கும் அதிகாரம், சமய நீதி மன்றங்களுக்கே இருந்தது. இந்தச் சலுகை, வில்லனுக்குப் பெரும் பாதுகாப்பாக அமைந்து விட்டது. பலமுறை வில்லன் திருட்டுக் குற்றங்களில் பிடிபட்ட போது, அவன் படித்த சமயக் கல்விக்காக இரக்கங் காட்டிச் சமய நீதி மன்றங்கள் அவனுக்கு மன்னிப்பு வழங்கின. இம்மன்னிப்புக்கள் வில்லனைத் திருத்த வில்லை. மேன்மேலும் தவறு செய்யும்படி தூண்டின.

1455-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5-ஆம் நாள் பாரிஸ் நகரில் கார்பஸ் கிறிஸ்டி (Corpus Christi) என்ற விழா நாள். வில்லன் தனது நண்பர் கூட்டத்துடன் செயிண்ட் பெனுய்ட் தேவாலயத்தின் வாசலில் அமர்ந்திருந்தான். அப்போது அப்பக்கமாக வந்த ஃபிலிப் செர்மாயி என்ற பாதிரிக்கும் வில்லனுக்கும் வாய்ச் சண்டை முற்றிக் கைகலப்பில் முடிந்தது. செர்மாயி கையில் இருந்த குறுவாளால் வில்லன் முகத்தில் குத்தினார். வில்லனின் மேலுதடு கிழிந்து குருதி வழிந்தது. தாக்குதலுக்கு ஆளான வில்லன் குமுறி எழுந்து செர்மாயியின் வயிற்றில் தன் குத்து வாளைச் செலுத்தினான்; ஒரு பெரிய கல்லை எடுத்துப் பாதிரியின் முகத்தில் அடித்தான். படுகாயம் அடைந்த பாதிரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டு, சில நாட்களில் இறந்தார். இந்த மோதலுக்கு மூலகாரணம், அப்போது வில்லனோடு அமர்ந்திருந்த 'சாபு' என்ற சாயல் மயில்.

இந்த மோதலுக்குப் பிறகு வில்லன் தலை மறைவாகி விட்டான். நண்பர்களின் தீவிர முயற்சியால், இக்கொலை வழக்கினின்றும் வில்லன் மீண்டு மன்னிப்பும் பெற்றான்.

1456-ஆம் ஆண்டு வில்லன் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஆண்டு. இந்த ஆண்டில் தான் வில்லனின் முதல் சிறந்த படைப்பான The Legacy எழுதி முடிக்கப் பட்டது; அவன் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்த கல்லூரித் திருட்டும் இவ்வாண்டில்தான் நிகழ்ந்தது. கிறிஸ்துமஸ் திருவிழாவின்போது வில்லன் தனது நான்கு நண்பர்களையும் கூட்டாகச் சேர்த்துக் கொண்டு பாரிசில் இருந்த 'நவேரி கல்லூரி'யைக் கொள்ளையடித்தான். இந்நண்பர்களுள் 'டாபரி' என்பவன் கல்லூரிக் காலந் தொட்டே வில்லனோடு நெருங்கிப் பழகியவன்; வில்லன் எழுதும் கவிதைகளைப் படியெடுத்துக் கொடுப்பவன்.

டாபரி ஒருநாள் குடிபோதையில் இருந்தபோது பியரி மெர்ச்செண்ட் என்ற பாதிரியிடம் தான் கலந்து கொண்ட கல்லூரித் திருட்டைப் பற்றி உளறிவிட்டான். பின்னர் காவல்துறை கொடுத்த அடியில் அதில் கலந்து கொண்ட நண்பர்களையும் காட்டிக் கொடுத்துவிட்டான்.

காவல் துறையால் தீவிரமாகத் தேடப்பட்ட வில்லன், மீண்டும் தலைமறைவாகி விட்டான். நான்கரை ஆண்டுகள் காவல் துறையின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு பிரெஞ்சு நாடெங்கும் சுற்றித் திரிந்தான். இந்தத் தலை மறைவுக் காலத்தில்தான் ஆர்லியன்ஸ் பிரபு (Charles-d-Orleans) வைச் சந்தித்து அவர் அவைக் களப் புலவனாக போலே நகரில் கொஞ்ச நாள் இருக்கும் வாய்ப்பைப் பெற்றான் வில்லன்.

ஆர்லியன் பிரபு சார்லஸ், தாம் வாழ்ந்த காலத்தில் மிகச் சிறந்த கவிஞராக பிரெஞ்சு மக்களால் மதிக்கப்பட்டவர். வில்லன் எல்லாவிதத்திலும் அவருக்கு முரண்பட்டவன். சார்லஸ் அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரபு; வில்லன் காவல் துறைப் பட்டியலில் பதிவான குற்றவாளி.

அவர் அரசவைப் பாடல்கள் (Courtly Poetry) பாடுவதில் வல்லவர்; இவன் தன்னைச் சார்ந்து பாடும் தன்னுணர்வுப் பாடல்களில் (Lyric Poetry) வல்லவன். இந்த இரு துருவங்களின் சந்திப்பு வில்லன் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இப் பிரபு வின் மகளுக்கு, வில்லன் ஒரு சீட்டுக்கவி (Epistle to Marie-d-Orleans) யும் எழுதியிருக்கிறான். ஆர்லியன்ஸ் பிரபுவிற்கும் வில்லனுக்கும் இடையே இருந்த உறவும், பிரபுவின் மகள் மேரிக்கு வில்லன் சீட்டுக்கவி எழுதிய காரணமும் பிரெஞ்சு இலக்கிய வரலாற்றாசிரியர் களிடையே இன்னும் ஒரு புதிராகவே உள்ளது.

நான்கரை ஆண்டுகள் தலை மறைவு வாழ்க்கைக்குப் பிறகு, 1461-ஆம் ஆண்டில் மியூங் நகர்ச் சிறையில் வில்லன் இருந்ததாகக் குற்றப்பதிவேடுகள் குறிப்பிடுகின் றன. எந்தக் குற்றத்துக்காக வில்லன் அந்தச் சிறையில் அடைக்கப்பட்டான் என்று தெரியவில்லை. சிறைக் காவலர்கள் வில்லனைச் சித்திரவதைக்கு ஆட்படுத்திய தால், உடல் நலன் மிகவும் பாதிக்கப்பட்டான். இந்தச் சமயத்தில், புதிதாகப் பட்டமேறிய ஃபிரெஞ்சு மன்னர் பதினொன்றாம் லூயி, மியூங் நகருக்கு வருகை தந்தார். பிரெஞ்சு நாட்டுச் சட்டப்படி, அந்நாட்டு மன்னர் முதன் முறையாக, ஒரு நகருக்குள் காலடி வைக்கும்போது, அந்நகரில் உள்ள சிறைச் சாலைக் கைதிகளுக்கு விடுதலை வழங்குவது வழக்கம். வில்லனுக்கு விடுதலை கிடைத்தது. வில்லன் பாரிஸ் நகர எல்லையில் தலைமறைவாகத் தங்கி யிருந்து தனது படைப்புக்களின் சிகரமான 'The Testa ment'- என்ற நெடுங்கவிதையை எழுதி முடித்தான்.

1462 ஆம் ஆண்டு ஒரு நாள் இரவு வில்லன் தன் கூட்டாளிகளுடன் செயிண்ட் ஜோக்ஸ் வீதி வழியாக வந்து கொண்டிருந்தபோது, குடிபோதையில் இருந்த

அவன் குறும்புக்காரக் கூட்டாளி ஒருவன், எதிரில் வந்த செல்வாக்கு மிக்க சமயத்துறைத் தலைமை எழுத்தர் மாஸ்டர் ஃப்ரான்சுவா ஃபெர்பெக் என்பவரை வம்புச் சண்டைக்கு அழைத்தான். வாய்ச்சண்டை கைகலப்பாக மாறிக் கத்திக் குத்தில் முடிந்தது. காயம்பட்ட ஃபெர்பெக்கின் நினைவில் அப்போது நின்றவன் கவிஞன் வில்லன்தான். செய்யாத குற்றத்துக்காக இம்முறை வில்லன் சிறை செய்யப்பட்டான்.

வில்லனின் நண்பராகவும் சமயசஞ்சீவியாகவும் காவல்துறையில் முக்கிய பொறுப்பாளராகவும் விளங்கிய ராபர்ட்-டி-ஈஸ்டர்வில்லி என்பவர் இப்போது ஓய்வு பெற்றுவிட்டார். புதிதாகப் பொறுப்பேற்றிருந்த காவல்துறைத் தலைவரின் கண்டிப்புக் கரங்களின் பிடி, வில்லன் மீது இறுக்கமாக விழுந்தது. நவேரிக் கல்லூரித் திருட்டு போன்ற பழைய குற்றங்கள் புத்துயிர் பெற்றன. வில்லன் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டான். இவ்வழக்கில், தான் குற்றமற்றவன் என்பதை விளக்கிப் பாராளுமன்றத்துக்கு வில்லன் விண்ணப்பித்தான். தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டது. ஆனால் பத்தாண்டு காலம் நாடு கடத்தப்பட்டான். அதன் பிறகு பாரிஸ் குற்றப் பதிவேடுகளில் வில்லனைப் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை.

தூக்கு மேடைக் கைதியாக இருந்த சில நாட்களில், புகழ் மிக்க தனது நாலடிப் பாடல்களையும் (Quatrain) கல்லறை வரிகளையும் (Villon's Epitaph) எழுதும் உள்ள உரம் பெற்றிருந்தான் வில்லன்.

1463 இல் நாடு கடத்தப்பட்ட கவிஞன் வில்லனுக்கு வயது 32 தான். ஆனால் வறுமையும் சிறையும் வயதுக்கு மீறிய முதுமையை அவனுக்கு வாரி வழங்கியிருந்தன. பிரெஞ்சு நாட்டின் கண்காணாத ஒரு மூலையில் பட்டினியிலோ,

குளிரிலோ, தெருச் சண்டையிலோ அல்லது தன்னைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டபடி தூக்கு மேடையிலோ வில்லன் அநாதையாக இறந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

வில்லன் தான்தோன்றித் தனமானவன்; திருடன்; தெருச் சண்டைக்காரன்; காமுகன்; கொலைகாரன்; மேதை. வில்லனைப் போல் தூற்றுதலுக்கும், பழிச் சொல்லுக்கும் ஆளான கவிஞன் உலகில் வேறு யாருமில்லை. அவன் படைப்புக் காலம் ஆறு ஆண்டுகள்தான். அவன் எழுதிய கவிதை 3000 வரிகள் தான். ஆனால் பிரெஞ்சு நாட்டிலும், உலகிலும் அவனுக்கு ஒப்பான கவிஞர்கள் மிகச் சிலரே.

வில்லன் 15 ஆம் நூற்றாண்டுப் பாரிஸ் வாசி. பாரிசின் ஜனசந்தடி மிக்க தெருக்களும், அன்றாட நிகழ்ச்சிகளும், ஆடம்பரமும், ஏழ்மையும், கேளிக்கையும், மடங்களும், மடத்துறவிகளின் போலித்தனமும் அவன் கவிதையின் கருப்பொருள்கள். பளிங்கு நீரோட்டத் தெளிவும், செதுக்கி எடுத்த சிறப்புச் சொல்லாட்சியும், நகைச்சுவை யோடு கூடிய அங்கதமும் அவன் கவிதையின் சிறப்பம் சங்கள். அவன் படைப்புக்களில் முதலிடம் வகிக்கும் The Testament - என்ற கவிதை நெருக்கமாக அவனைப் பற்றியும், அவன் மனச்சாட்சியைப் பற்றியுமே பேசு கின்றது. அதில் தன் குற்றங்களையும், தன் கழிவிரக்கத் தையும் வெளிப்படையாகப் பேசுகிறான் வில்லன். கீழ்க் கண்டவரிகள் அவன் உள்ளத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

''பேரரசன் அலெக்சாண்டர் முன்பு டயமிடிஸ் என்ற கடற் கொள்ளைக்காரன், விலங்கு பூட்டப்பட்டுக் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறான்.

'ஏன் நீ ஒரு கடற் கொள்ளைக்காரனாக வாழ்கிறாய்?' என்று கேட்டார் அலெக்சாண்டர்.

டயமிடிஸ் பதில் சொன்னான்:

'என்னிடம் சிறிய கப்பல் மட்டுமே இருப்பதால் நான் கடற் கொள்ளைக்காரன் என்று அழைக்கப்படுகிறேன். உங்களிடம் இருப்பதுபோல் பெரிய படை இருந்தால் நானும் சக்கரவர்த்திதான்! ஒருமனிதன் ஒழுக்கமாக இருப்பது அவன் வாழ்க்கை வசதியைப் பொருத்தது. வறுமையில் ஏது ஒழுக்கம்?' என்றான் அவன். அலெக்சாண்டர் அவனுக்கு வேண்டிய வாழ்க்கை வசதி களைத் தந்து நல்லவனாக வாழ வைத்தார்.

ஆண்டவன் எனக்கு அன்புகாட்டும் மற்றொரு
அலெக்சாண்டரை அனுப்பி வைக்கட்டும்.
நானும் திருந்தி வாழ்கிறேன்.
அதையும் மீறித் தவறு செய்தால்-
நானே தீக் குளித்து
இறக்கத் தயங்க மாட்டேன்-

என்று பாடுகிறான் வில்லன்.

அவன் படைத்தவற்றுள் எல்லாரும் விரும்பிப் படித்துப் பாராட்டுவது 'தொன்மை மகளிர்' (Of The Ladies of Bygone Times) என்ற சிறிய கவிதை. அதன் ஒவ்வொரு வரியும் உணர்ச்சி மிக்க-வரலாற்றுச் சிறப்பு மிக்க-இலக்கிய மேற் கோள்களைக் கருக்கொண்டு காட்சியளிக்கிறது. அதைப் படிக்கும் எவரும் அதில் பொதிந்து கிடக்கும் கருத்தழகை நீண்ட நேரம் அசைபோட்டு மெய் மறக்காமல் இருக்க முடியாது.

ஆடரங்கத்தில் ஏறி
ரோமாபுரி ஆடவரின் நெஞ்சத்தை
ஆட்டிப்படைத்த ஃப்ளோரா,

காதற்கணையோடு வந்தவரைக்
கருத்துக் கணையால் தோற்கடித்த
ஆர்ச்சி பியாடா,

அலெக் சாண்டரின்
அரங்கமயில் தாய்ஸ்,
இந்த அழகுத் தேவதைகள் எங்கே?
அந்த வசந்தப் பனிக்காலம்
எங்கே ஓடி மறைந்தது?

எந்த அழகுத் தேவதைக்காக
அபெலார்டு காயடிக்கப்பட்டுச்
சன்னியாசி ஆக்கப்பட்டானோ,
அந்த அறிவுக் கோயிலின்
அழகுச் சிற்பம் ஹெலாய் எங்கே?

எந்த அழகு ராணியின்
கட்டளைப்படி
இளமை நலம் கொழிக்கும் பரிடான்
சீன் நதியின்
சுழித்தோடும் வெள்ளப் பெருக்கில்
வீசி எறியப்பட்டானோ

அந்த அழகு ராணி எங்கே?
அந்த வசந்தப் பனிக்காலம்
எங்கே ஓடி மறைந்தது?

கடற் கன்னியின்
கானக் குரலும்,
அல்லி மலர் மேனியும் கொண்ட
ஆரணங்கு பிளாஞ்ச்சி,
தாமரை அடியெடுத்துச்
சதிராடும் பெர்தா,
பெண்மைக்கு இலக்கணம் வகுத்த
பீட்ரிஸ், ஆலிஸ் -

அஞ்சு கோமகனைத்
தன்விழிவலையால்
ஆட்டிப் படைத்த
ஆரம்பர்க் கோமகள்,
ஆங்கில நெருப்புக்குத் தன்னை
அர்ப்பணித்த ஜோன் - ஆப் - ஆர்க்-
அன்னை மரியே...
எங்கே அந்த அழகுத் தீபங்கள்?
அந்த வசந்தப் பனிக்காலம்
எங்கே ஓடி மறைந்தது?

❀

விலாடிமிர் மாயகோவ்ஸ்கி

மாயகோவ்ஸ்கி தன் தந்தையின் பிறந்த நாளில் (ஜூலை 7) பிறந்தான். எனவே இருவர் பிறந்த நாளும் வீட்டில் ஒன்றுகவே கொண்டாடப்பட்டன.

ஐந்து வயதிலேயே, தன் வயதுக்கு அதிக மான பாடல்களை மனப்பாடம் செய்து கூறும் ஆற்றலைப் பெற்றிருந்தான். அவன் விரும்பிப் படித்த முதல் நூல் 'டான் குவிக்சாட்'.

ஒரு பக்கம் கவிதை. மற்றொரு பக்கம் புரட்சி. கவிதையும் புரட்சியும் என் உள்ளத்தில் பின்னிப் பிணைந்து விட்டன என்று அவன் இளமைக் குறிப்பில் எழுதியிருக்கிறான். தனது பன்னிரண்டாம் வயதிலேயே, காலையில் கண் விழித்ததும் 'செய்தித்தாள் வந்துவிட்டதா?' என்று தான் முதலில் கேட்பான்.

தனது 16 ஆம் வயதிற்குள் மூன்று முறை சிறைக்குச் சென்றிருக்கிறான். சிறைப் பறவையாய் இருந்தபோது காவல் துறையினர் அவனுக்குச் சூட்டிய திருநாமம் 'நெட்டையன்'. உயரத்தில் அவன் ஒரு 'காக்கஸஸ்'; 6 அடி 8 அங்குலம்.

வீட்டைவிட்டுக் கிளம்பும் போது வழக்கமான அவன் முசுமுசுத் தொப்பியைத் (Fur cap) தலையில் அணிந்ததும் அவன் வாய் முணுமுணுக்கும் வாலிபப் பாடல் வரிகள் :

பயனற்ற ஆலைமுதலாளி—வீட்டில்
படுத்திருப்பான் எப்போதும்
சோம்பேறி! காலி—ஆமாம்
படுத்திருப்பான் எப்போதும்
சோம்பேறி! காலி

1909 ஆம் ஆண்டில் அவன் பதினாறு வயதுக் கட்டிளங் காளை. நொவின்ஸ்கயா சிறைச்சாலையில் அடைபட்டு இருந்த 13 பெண் அரசியற் கைதிகள் தப்பிச் செல்வதற்கு அவன் துணை புரிந்தான். அக்கைதிகள் மாறுவேடத்தில் தப்பிச் செல்ல அவன் தாயும் சகோதரிகளும் பள்ளிச் சீருடை தைத்துக் கொடுத்தனர். அதற்காக அவன் சிறைப் படுத்தப்பட்டான். பின்னர் 'மைனர்' என்று விடுதலை செய்யப்பட்டான்.

சிறையில் இருந்தபோதுதான் காந்தியடிகளுக்கு அறப் போரை பற்றிய ஞானோதயம் பிறந்தது. சிறையில் இருந்தபோதுதான் எதிர்காலத்தில் தான் சமைக்கவிருந்த சமதருமக் கலையைப் பற்றிய ஞானோதயம் அவனுக்கு ஏற்பட்டது.

ஷெல்லி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது 'நாத்திகத்தின் அவசியம்' (The necessity of Atheism) என்ற கட்டுரை எழுதி வெளியிட்டதற்காகக் கல்லூரி நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டான். கலைக்கல்லூரி யில் பயின்றபோது பழைய மரபுக் கலையை (Bourgeois Art) இகழ்ந்து பேசியதற்காகக் கல்லூரி நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டான் மாயகோவ்ஸ்கி.

கலைக் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்ட போது அவன் தாய் 'நீ எப்படியாவது இந்தப் படிப்பை (Painting) முடித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்!, என்று வருத்தத் தோடு சொன்னாள்.

அதற்கு அவன் சொன்னான்:

> ''ஓவியத்தொழில் செய்யத் தனியாக ஒரு கூடமும் (Studio), திரைச் சேலைகளும், வண்ணங்களும், தூரிகைகளும் இன்னும் பலவும் தேவைப்படும். ஆனால் கவிதை எழுத பழைய நோட்டுப்புத்தகம் ஒன்று இருந்தால் போதும்; எந்த இடத்திலும் உட்கார்ந்து கொண்டு எழுதலாம். எனவே நான் கவிஞனாகப் போகிறேன்''—

சொன்னபடி மாகவிஞன் ஆகிவிட்டான்.

மாஸ்கோ மன்றங்களில் அவன் தனது கவிதைகளைப் படித்தபோது, இளைஞர் பட்டாளம் உணர்ச்சி வசப்பட்டு மெய் மறந்த ஈடுபாட்டோடு, ஆரவாரம் செய்யும். ஆனால் அதே சமயத்தில் முன் வரிசையில் அமர்ந்திருக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கு அவன் கவிதைக் குறியீடுகள் எதைக் குறிப்பிடுகின்றன என்று புரியாது; அவன் கருத்துக் கள் தீவிரமானவையா, நகைச் சுவையானவையா என்று புரியாமல் விழிப்பர். புரியாத இவன் குறியீட்டுக் கவிதை கள் பற்றி அவன் தாய் ஒருமுறை கேட்டபோது மாயகோவ்ஸ்கி சொன்னான்:

> ''எல்லாருக்கும் புரியும்படி தெளிவாக எழுதி விட்டால், நான் மாஸ்கோவில் இருக்க மாட் டேன். சைபீரியாவில் கண் காணாத இடத்திற்கு நாடு கடத்தப்படுவேன். காவல் துறையின் கழுகுக் கண்கள் எப்போதும் என் மீது வட்ட மிட்டுக் கொண்டிருக்கின்றன. நான் எப்படி

வெளிப்படையாகப் பாடமுடியும்? அடக்கு முறை ஒழிக!''—

மாயகோவ்ஸ்கி ருசிய நாட்டில் முக்கியமான நகரங்களுக்கெல்லாம் சென்று மாலைக் கூட்டங்களில் தனது கவிதையைப் படிப்பது வழக்கம். இத்தகைய கூட்டம் மாஸ்கோவில் அடிக்கடி நடைபெறுவதுண்டு. அக்கூட்டங்களில் மாயகோவ்ஸ்கியின் சகோதரி அடிக்கடி கலந்து கொள்வாள். ஒரு முறை அவன் தாய், தானும் அக் கூட்டத்தில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்தபோது அவன் சொன்னான் :

''நான் என் கவிதையைக் கூட்டங்களில் படிக்கும் போது என் எதிரிகள் என்னை இகழ்ந்து பேசுவார்கள். எதிர்த்தாக்குதல் நடத்துவார்கள். உன்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது; உள்ளம் உடைந்து வருந்துவாய். எனவே நீ வரவேண்டாம்!''

உணர்ச்சி வசப்படும் கவிஞர்கள், காதலைப் பொறுத்த வரையில் எப்போதும் கட்டுப்பாடற்றவர்கள். சந்த வேறுபாடுகளும், சாயல் மயில் வேறுபாடுகளும் அவர்களால் தவிர்க்க முடியாதவை. பைரன், ஷெல்லி, கெதே, போதலேர், பாப்லோ நெருடா எல்லாரும் காதல் மன்னர்களே! மாயகோவ்ஸ்கி மட்டும் அதற்கு விதிவிலக்கா? மாயகோவ்ஸ்கியின் வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ பூந்தோட்டங்கள்! குளிர் அருவிகள்! இளமரக் காடுகள்!

இவன் ஒரு பெண்ணை முழுமூச்சோடு காதலிக்கத் தொடங்கினால், உடனே அவளுக்குத் திருமணம் வேறொரு செல்வச் சீமானோடு முடிந்துவிடும். இது இவன் ராசி. முதலில் எல்சா என்ற பெண்ணைக் காதலித்தான்; அவள் லூயி அரகான் என்ற சீமானை மணந்து

கொண்டாள். பின்னர் அவள் தமக்கை லில்லி என்பவளைக் காதலித்தான்; அவள் ஆசிப்பிரிக் என்ற சீமானை மணந்து கொண்டாள். எனவே திருமணமான லில்லிபிரிக்கையே தொடர்ந்து காதலித்தான். அவர்கள் காதல் விவகாரத்தில் சிக்கல் ஏற்பட்ட போதெல்லாம் தற்கொலை செய்து கொள்வதாகப் பலமுறை மிரட்டியிருக்கிறான் மாயகோவ்ஸ்கி. அந்தச் சமயங்களில் அச்சிக்கல்களைத் தீர்த்துச் சமரசம் செய்ய அவர்கள் இரண்டு பேருக்கும் தூதுவனாக இருந்து உதவியிருக்கிறான் லில்லியின் கணவனான சீமான் பிரிக். உலகக் காதல் வரலாற்றில் குறிப்பிடத் தக்க பொறுமைசாலி இந்தப் பிரிக் சீமான்! இவர்கள் காதல் விவகாரம் இப்படி இழுபறியாகப் பத்தாண்டுக் காலம் நீடித்தது.

நமக்கு மாயகோவ்ஸ்கியின் காதல் விவகாரம் அவ்வளவு முக்கியமில்லை. இக்காதல் தோல்வியினால் ஏற்பட்ட தாக்கம் அவன் இலக்கியத்தைப் பெரிதும் பாதித்து, ருசிய இலக்கியத்திலும் பெரிய மாறுதலைத் தோற்றுவித்தது.

காதல் கவிதைக்கு இலக்கிய உலகில் எப்போதும் வரவேற்பு அதிகம். அதுவும் கண்ணீரோடு வழிந்து வரும் காதற் கவிதைக்கு - எழுதுபவர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வசந்த வரவேற்பு உண்டு. மாயகோவ்ஸ்கியின் காதல் தோல்வி பெற்றெடுத்த 'காற்செராய் அணிந்த மேகம்' (Cloud in pants) 'இது' (It) 'அன்பு லில்லிக்குப் பதில் கடிதம்' (Lily Dear! In Lieu of A Letter) என்ற கவிதைகள் மூன்றும் உணர்ச்சி மிக்க காதற் கவிதைகள். இவற்றுக்கு ஒப்பாக ஒரு சிலவற்றையே உலக இலக்கியத்தில் தேடிப் பிடிக்க முடியும்.

மிக்க ஆர்வத்தோடு காதலித்த லில்லி, தான் வேறொரு சீமானைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறியதும் இவன் அதிர்ந்துபோனான். ஏமாற்றம் இவன் குரல்வளையை நெரித்து மூச்சுத் திணரும்படி செய்தது. அப்போது அவன் உள்ளத்தில் பீறிட்டெழுந்த கவிதை, குருதியில் குளித்து வந்தது என்று கூறலாம்.

நீ எங்கு
ஓடி ஒளிந்தாலும்
முடமான என் காதற் சுமை
உன்னைக் கட்டாயம்
அழுத்திக் கொண்டிருக்கும்.
ஏமாற்றத்தின் கொடுமையை
நான் கடைசி முறையாக
அழுது தீர்க்கிறேன்,

உழைத்துச் சலித்த எருது
தண்ணீரில் படிந்து
தன் தளர்ச்சியை
நீக்கிக் கொள்ளும்.
எனக்கோ —
உன் காதல் கடலைத் தவிர
மூழ்குவதற்கு
வேறு இடமில்லை.
ஆனால் —
வழியும் கண்ணீர்
என் பாதையை மறைக்கிறது.

களைத்த களிறு
களைப்புத்தீர விரும்பினால்
சூரியச் சூடேறிய மணலில்
சுகங்காணப் புரளும்.

எனக்கு
இதமான
சுகச் சூடு தரும் சூரியன்
உன்னையன்றி வேறில்லை.
ஆனால் —
இப்போது
உன் கையில் விளையாடும்
காதலன் யாரென்று
என்னால்
ஊகிக்க முடியவில்லை.

(அன்பு லில்லிக்குப் பதில் கடிதம்)

மேரியா!
ஒரு கவிஞன்
தன் உள்ளத்தில்
திடீரென்று குதித்தெழுந்த
கவிதைச் சொல் ஒன்றை
மறப்பதற்கு
எப்படி அஞ்சுவானோ
அது போல் —
உன் பெயரை மறக்க
நான் அஞ்சுகிறேன்.
மேரியா!
போரில் மிஞ்சிய
தனது ஒற்றைக்காலை
ஒரு போர் வீரன்
எப்படி நேசிப்பானோ
அது போல,
உன் பளிங்குமேனியை
நான் நேசிக்கிறேன்.
ஆனால்... ..
நீ என்னை விரும்பவில்லை.

நீ என்னை
ஒதுக்கியது உண்மையென்றால் -
ஒரு நாய்,
ரயில் சக்கரத்தில் சிக்கி
அறைபட்டுத் தொங்கும்
தனது காலைப்
பரிதாபமாக இழுத்துக்கொண்டு
நகர்வது போல்,
நானும் —
தனியாக,
கண்ணீரில் நனைந்த
என் இதயத்தைச்
சுமந்து கொண்டு
நகர்ந்து செல்வதும் உண்மை!

(கால் சொராய் அணிந்த மேகம்)

அடலேறு போல் ஆற்றலும், பெருமிதமும் மிக்க ருசிய 'சாம்சன்', லில்லி என்ற ஒரு பெண்ணின் முன்னால் கூனிக் குறுகி எவ்வளவு சிறிய 'லில்லிபுட்டன்' ஆகிவிட்டான் பார்த்தீர்களா! ஆனால் அந்தத் தோல்வி மாயகோவ்ஸ்கியை ஆயிரம் யானை பலத்தோடு கிளர்ந்தெழச் செய்தது. ஏழைகளின் காதலைக்கூட ஈவு இரக்கமில்லாமல் தட்டிப் பறிக்கும் முதலாளித்துவ சமுதாயப் பின்னணியைத் தன் தீக் கண்களால் பார்த்தான். அதை நோக்கி —

'நான்—
என்னைப் பொருத்த வரை
மிக மிகச் சிறியவன்
என்பதை உணர்கிறேன்.

ஆனால் —
யாரும் எதிர்க்க முடியாதபடி

என்னுள் ஒருவன்
உருவாகிக் கொண்டிருக்கிறான்.

என்னை விட
ஒரு பிச்சைக்காரன்
வசதியானவன்
என்பதைச் சுட்டிக்காட்டிக்
கேலி செய்கிறாய்!

ஆனால்—
ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்!

வெசுவியஸ் எரிமலை
குமுறி எழுந்தபோது
செல்வம் கொழுத்த
பாம்பி நகரம்
உருத் தெரியாமல்
அழிந்தது போல்
நீயும் அழியப் போகிறாய்!-

என்று சாபம் கொடுத்தான். காதற் போட்டியில் முதலாளித்துவத்திற்குப் படைக்கலன்களாக இருந்து துணைபுரிந்த மதம், கலை, இலக்கியம், சமுதாய அமைப்பு யாவற்றையும் தன் எழுத்துச் சூறாவளியால் சுழன்றடித்தான். காதற்போட்டியில் மனிதனுக்கு மனிதன் சமநிலையிலிருந்து போட்டியிட வேண்டும், என்பது அவனுடைய காதற்கொள்கை.

புரட்சிப் பயணத்தில் மிதவாதிகளாக இருந்த புஷ்கின், டால்ஸ்டாய், தாஸ்தோவ்ஸ்கி ஆகியோரின் படைப்புகளைக்கூடத் தமது புரட்சிக் கப்பலிலிருந்து தூக்கிக் கடலில் வீசும்படி தனது இளைஞர் பட்டாளத்துக்குக் கட்டளையிட்டான்.

ஹெலனைவிட அழகிய,
ஏழை மக்களின்
ஆன்மப் பேரொளியின் முன்னால்
முதலாளித்துவச் சூரியன்
ஒளியிழந்து மறைவான்

என்று உணர்ச்சி பொங்கப் பாடினான்.

புரட்சி யென்னும்
முட்கிரீட மணிந்து
1916 ஆம் ஆண்டு
நெருங்கி
வந்து கொண்டிருக்கிறது

என்று கவிதைக் கட்டியம் கூறினான்.

அவன் கணிப்பு ஓராண்டு பின் தங்கியது. 1917 இல் அக்டோபர் புரட்சி வெடித்தது. இன்று பணத்தையும், சமயத்தையும், சமுதாய அந்தஸ்தையும் பக்க பலமாக வைத்துக் கொண்டு ருசிய நாட்டில் யாரும் காதல் போட்டியில் இறங்க முடியாது.

○

பாப்லோ நெருடா

எரிமலையும், கனமழையும் சூழ்ந்த சிலி நாட்டின் தெற்குப்பகுதியில் ஓர் ஏழை ரயில்வேக் கூலிக்கு மகனாகப் பிறந்து, துன்பத்தில் வளர்ந்து, உலக நாடுகள் பலவற்றுள் சிலி நாட்டுப்பிரதிநிதி (Consul) யாகப் பதவி வகித்து நோபெல் பரிசு பெற்ற பெருங் கவிஞனாக இந்த நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்தவர் பாப்லோ நெருடா.

பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் பாப்லோ. தன் மகன் பட்டம் பெற்று ஒரு பெரிய அதிகாரியாக வரவேண்டும், என்பது இவர் தந்தையின் விருப்பம்; இவர் கவிஞனாவதை அவர் விரும்ப வில்லை. எனவே தம் பெயரோடு 'நெருடா' என்ற வேற்று மொழிச் சொல்லையும் சேர்த்துக் கொண்டு 'பாப்லோ நெருடா' என்ற புனைபெயரில் தம் முதல் கவிதை நூலை வெளியிட்டார். தந்தையை ஏமாற்றுவதற்காகச் செய்து கொண்டதே இப்பெயர் மாற்றம். தமது பதினான்காம் வயதில், செக்நாட்டுப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண் டிருந்தபோது, அதில் காணப்பட்ட 'நெருடா' என்ற பெயரை இவர் தம்

பெயருடன் சேர்த்துக் கொண்டார். ஆனால் செக்நாட்டு 'நெரூடா'வைப் பற்றி அப்போது இவருக்கு ஒன்றும் தெரியாது.

'நெரூடா' உணர்ச்சி மிக்க கதைப் பாடல்களும் நாட்டுப் பாடல்களும் (Ballads and narrative Poems) நிறைய எழுதிக் குவித்த செக்நாட்டுப் பெருங்கவிஞர்; மக்கள் கவிஞர். செக்நாட்டு மக்கள் அவரைப் பெரிதும் போற்றி மதித்தனர்; சிலையெடுத்துப் பெருமை சேர்த்தனர். பாப்லோ நெரூடா செக்நாட்டுத் தலை நகரான பிராகுவுக்கு முதன் முறையாகச் சென்றபோது, தாடி வைத்த இந்தக் கவிஞரின் சிலைக்கு மலர் வளையம் வைத்து வணங்கினார்.

சில கவிஞர்களின் நடவடிக்கைகளுக்கு மூலம் கண்டறிய முடியாது, ரிஷிமூலம் போல. காரண காரியத்தை ஆராய்ந்து கொண்டிருப்பவன் கவிஞனாக இருப்பதில்லை; கவிஞனாக இருப்பவனும் காரண காரியத்தை ஆராய்வதில்லை. கவிஞனாக இருக்கும் அவனை அவனாகவே நாம் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

பாப்லோ நெரூடா சாண்டியாகோ நகரத்தில் கல்லூரி மாணவனாக இருந்தபோது, அவ்வூரில் இருந்த இளைய இலக்கியத் தலைமுறையுடன் இவரும் ஒன்றிவிட்டார். கவிஞர்கள், இசைக்கலைஞர்கள், ஓவியர்கள், நாடகாசிரியர்கள் — யாவரும் அதில் அடங்குவர். இவர்கள் கூட்டத்தில் ஆல்பெர்ட்டோ வால்டிவியா (Alberto Valdivia) என்ற நடுவயதுக் கவிஞர் ஒருவரும் கலந்து கொள்வார். மிக மெலிந்து நோயாளித் தோற்றத்தோடு காட்சிதரும் அவருடைய உடம்பு, முழுக்க முழுக்க எலும்பால் ஆனது போல் இருக்கும். நரைத்துக் கலைந்த தலைமயிர். கிட்டப்பார்வைக் கண்ணாடி அணிந்திருக்கும் அவர்

கண்கள், எப்போதும் தொலைவில் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும். உணவுவிடுதி, மதுப்புரை, (bar), இசையரங்கு ஆகிய இடங்களில் கையில் ஒரு பத்திரிகைக் கற்றையுடன் ஓசையின்றித் திரிந்துகொண்டிருப்பார் வால்டிவியா. நண்பர்கள் 'அன்புள்ள பிணமே!' (Dear Corpse) என்று ஆசையோடு அவரை அழைப்பர். அவர் அதற்காக முகஞ்சுழிக்க மாட்டார்; சிலசமயங்களில் புன்னகைசெய்து அந்த வரவேற்பை ஏற்றுக்கொள்வார்.

பாப்லோ நெருடாவும் அவர் நண்பர்களும் அவரை 'பிணமே! இன்று எங்களுடன் தங்கி விருந்து சாப்பிட்டு விட்டுச் செல்லவேண்டும்' என்று அடிக்கடி அழைப்பதுண்டு. அவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார். 'பிணம்' கற்பனைத்திறன் மிக்க சிறந்த கவிஞர். மிகச் சுருக்கமாகவும், நிதானமாகவும், பேசும் இயல்புடையவர். ஆனால் அவர் பேசும் சில சொற்களும் நினைவில் நிற்கும் படி இருக்கும்.

பாப்லோ நெருடாவின் நண்பர்கள் ஆண்டு தோறும் நவம்பர் முதல் நாள் இரவு இந்தப் 'பிணக் கவிஞருக்கு, சிறப்பான விருந்தொன்று கொடுப்பது வழக்கம். 'பிணம், மரியாதைக்குரிய தமது ஆசனத்தில் நடுநாயகமாக வீற்றிருந்து விருந்து சாப்பிடுவார். நள்ளிரவு சரியாக 12 மணிக்கு எல்லோரும் விடுதியை விட்டு வெளியில் வந்து இடுகாட்டுக்கு அமைதியுடன் ஊர்வலமாகச் செல்வர். அமைதியான அந்த நடுநிசியில் யாராவது ஒரு நண்பர் 'பிணமான அக்கவிஞரின்' பெருமைகளைப் பேசுவார். பிறகு எல்லாரும் 'பிணத்திடம்' விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்புவர். 'பிணம் மட்டும்' ஒருகல்லறையில் தனியாக அமர்ந்திருப்பார். பசியெடுத்தால் ஏதாவது வாங்கிச்சாப்பிடக் கொஞ்சம் சில்லறையும்

பிணத்திடம் அவர்கள் கொடுத்துவிட்டுச் செல்வது வழக்கம். இரண்டு மூன்று நாட்கள் கழித்து, 'பிணம்' தம் நண்பர்கள் கூட்டத்தோடு இயல்பாக வந்து கலந்து கொள்வார். அடுத்த ஆண்டு நவம்பர் தொடங்கும் வரை அவருக்கு இதுபோன்ற தொல்லை இருக்காது. நண்பர்கள் ஆண்டுதோறும் நடத்தும் இச்சடங்கைத் 'திருவாளர் பிணம்' ஈடுபாட்டோடு ஏற்றுக்கொள்வார். மனம் சிறிதும் வருந்த மாட்டார்.

நெரூடா பர்மாவில் சிலிநாட்டுப் பிரதிநிதியாகப் பணி புரிந்துகொண்டிருந்தபோது, அழகிய ஒரு பர்மியப் பெண்ணின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. கொஞ்ச நாள் அவளோடு அவர் வாழ்க்கை நடத்தினார். அவள் வெளியில் செல்லும்போது, ஓர் ஆங்கில மாதைப் போல் உடையுடுத்திக் கொள்வாள்; தன் பெயரையும் ஜோஸி பிலிஸ் (Josie Bliss) என்று கூறிக்கொள்வாள். வீட்டுக்கு வந்ததும் ஆங்கில உடையைக் களைந்து விட்டு பர்மிய உடையான 'சராங்' (Sorong) அணிந்து கொள்வாள்; தன் பர்மியப் பெயரைக் கூறிக்கொள்வாள்.

அவள் உறவு கொஞ்சநாள் சுகமாக இருந்தது. பிறகு முள்ளாக உறுத்தத் தொடங்கியது. ஜோசியின் முகம் கூட்டுப் புழுவாகியது. பேச்சைக் குறைத்துக்கொண்டாள். நெரூடா எப்போதும் தன்னைப் பிரியாமல் இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். தன்னிடத்தை வேறு எந்தப்பெண்ணாவது வந்து பிடித்துக் கொள் வாளோ என்ற அச்சமும் பொறாமையும் அவளை ஆட்கொண்டன. சிலசமயங்களில் உணர்ச்சி வசப்பட்டுக் கத்துவாள். நெரூடாவுக்கு வரும் கடிதங்களையும், தந்தி களையும் கூட எடுத்து ஒளித்து வைத்துக் கொள்வாள். திறந்த, அழகிய அவளுடைய 'வெல்வெட் பாதங்களும்', வண்ணப் பூங்கொத்தோடு வசீகரிக்கும், அடர்ந்த அவள்

கருங்கூந்தலும் நெரூடாவைப் பித்தாக அடிப்பதுண்டு. என்றாலும் கொஞ்ச நாளில் அவருக்கு அவள் நோயாக மாறிவிட்டாள்.

சில நாட்களில் சிறிய ஓசை கேட்டு நள்ளிரவில் நெரூடா விழித்துப் பார்ப்பார். அவரைச் சுற்றித் தொங்கும் கொசுவலைக்கு வெளியே— மங்கிய விளக்கொளியில்— மேனியில் வெள்ளுடையும், கையில் நாட்டுக் குத்துவாளு மாகக் கவலையும் பீதியும் தோய்ந்த முகத்துடன், அந்தப் பர்மியச் சிறுத்தை மணிக்கணக்காக வளைய வந்து கொண்டிருக்கும். 'உன்னைக் கொன்று விட்டால் என் அச்சமும் பீதியும் அடியோடு நின்றுவிடும்' என்று அவரைப் பார்த்துக் கத்துவாள். கொஞ்சநாளில் அவள் நெரூடா வைக் கொன்றும் இருப்பாள். நல்ல வேளையாக பர்மா விலிருந்து சிலோனுக்கு மாறுதல் செய்தி அவருக்குக் கிட்டியது. சிலோனுக்குப் புறப்பட இரகசிய ஏற்பாடு களைச் செய்தார். தமது துணிமணிகளையும், விலை உயர்ந்த நூல்களையும் கூட எடுத்துக் கொள்ளாமல், ஜோஸியிடம் சொல்லாமல் சிலோனுக்குக் கப்பல் ஏறிவிட்டார் நெரூடா.

போனஸ் அயர்ஸ் நகரத்தில் நடாலியா பொடானா (Natalio Botana) என்ற ஒரு பத்திராதிபர் இருந்தார். அவர் பெரிய கோடீசுவரர். ஒருநாள் மாலை பாப்லோ நெருடாவும், ஸ்பெயின் நாட்டுப் பெருங்கவிஞர் லார்காவும் அவருடைய மாளிகைக்கு விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நடாலியா பொடானு பெரும் புரட்சிக்காரர்; சொந்த உழைப்பால் முன்னுக்கு வந்தவர். ஓர் இளமரக் காட்டின் நடுவே புதிய கலைக்கனவாக அவர் மாளிகை அமைந்திருந்தது. உலகின் பல பகுதியில் இருந்தும் வரவழைக்கப்பட்ட வண்ணப் பறவைகள் நூற்றுக்கணக்கான கூடுகளை அலங்கரித்தன. அவர்

நூலகம் மிகப்பெரியது. கவர்ச்சியானது. ஐரோப்பிய நாடுகளின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட பல மொழி இலக்கியச் செல்வங்கள் வரிசைப் படுத்தப்பட்டு, கண்ணாடிச் சட்டமிட்ட மஹாகனி பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்நூலகத்தின் தளம் சிறுத்தைத் தோல்களினால் தைக்கப்பட்ட ஒரே விரிப்பால் மூடப் பட்டிருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அச்சிறுத்தைத் தோலின் புள்ளிகள் அவ்விரண்டு மகா கவிகளின் காலடியில் புஷ்பராகம் போல் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன.

அர்ஜென்டைனா நாட்டு அரசியலையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த நடாலியா பொடானியாவின் எதிரில் இருந்த மேசையின் இரு பக்கத்தில் நெரூடாவும் லார்கா வும் அமர்ந்திருந்தனர். நடுவில் அந்த நாட்டுப் பெண் கவிஞர் ஒருவரும் அமர்ந்திருந்தார். இளவேனில் நங்கை யான அவள், தன் பசிய - பசித்த - கண்களால் நெரூடா வையே அதிகம் நோட்டம் விட்டுக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் அவனைச்சுற்றி ஒரு காந்த மண்டலத் தையே தோற்றுவித்துக் கொண்டிருந்தன. அவள் பெரு மூச்சு நெரூடாவின் உள்ள நெருப்பைப் போர்த்திருந்த சாம்பலை ஊதிக் கனன்று எரியச் செய்து கொண் டிருந்தது. தோலோடு சேர்த்துச் சுட்டெடுத்த மாட்டி றைச்சியின் மணமும், மசாலையின் மணமும், சுற்றியிருந்த சொகுசு வாழ்க்கையின் மணமும் கவிஞர்களை லேசாக்கி வானில் மிதக்கவிட்டன.

விருந்து முடிந்ததும் கவிஞர் மூவரும் சிரிப்பும், கெக் கலிப்புமாகத் தோட்டத்தின் கோடியில் இருந்த நீச்சல் குளத்தை நோக்கிச் சென்றனர். லார்கா எப்போதும் போல் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டு முன்னால் சென்றார். மகிழ்ச்சியே லார்காவின் உடம்பு.

நீச்சற் குளத்தருகில் ஒரு கூம்புக்கோபுரம் இருந்தது. அதன் மீது மூன்று கவிஞர்களும் ஏறினர். வெண்மையான அக்கோபுரத்தின் உச்சி விளக்கொளியில் முத்தாகக் காட்சியளித்தது. உச்சியில் இருந்த வேலைப்பாட்டுடன் கூடிய சாளரங்கள் வழியாகக் கவிஞர்கள் வெளியுலகை எட்டிப் பார்த்தனர். நீச்சற்குளத்தில் பிரதிபலித்த ஒளிக் கண்கள்; கீழிருந்து இவர்களை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தன. மொய்த்திருக்கும் விண்மீன்களோடு அவர்களைப் போர்த்து மூழ்கடிப்பதுபோல், இரவு நெருக்கமாக அவர்கள் மீது தொங்கிக் கொண்டிருந்தது. கிதாரோடு கூடிய பாட்டிசை அலையாகக் காற்றில் மிதந்துவந்து அவர்கள் காதில் விளையாடியது.

மூன்று விதமான மூன்று கவிஞர்கள்! நெருடா அருகில் இருந்த தங்கக் கவிதைக் கொடியை மெதுவாகத் தம் நெஞ்சில் படரவிட்டு, அவள் வாயிலிருந்து வேரோடு ஒரு முத்தம் பறித்தார்; கொடி சாய்ந்தது. அவள் மேலாடையை நெருடா நீக்கத் தொடங்கினார். அங்கு நடப்பதை நம்ப முடியாமல் வியப்போடு வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த லார்காவை நோக்கி, ''வெளியே போய்யா! யாரும் மேலே வராம பார்த்துக்க!'' என்று சத்தமிட்டார் நெருடா.

நட்சத்திர வானத்தை ஒரு பெரிய பூவாக்கி இருவரும் தேனருந்திய வேளையில் காவல்பணியில் ஈடுபட்டிருந்த கவிஞர் லார்கா இருட்டில் மோதிப் படியில் உருண்டார். பாப்லோ நெருடாவும் அப்பளிங்குச்சிலையும் அவசரமாக எழுந்து ஓடிவந்து லார்காவைத் தூக்கி நிறுத்தினர். அதன்பிறகு லார்கா இரண்டுவாரம் நொண்டிநொண்டித் தான் நடந்தார்.

ஸ்பெயின் நாட்டுப் பெருங் கவிஞனான ஃபெடரிகோ கார்ஸியா லார்காவும் பாப்லோ நெரூடாவும் நெருங்கிய நண்பர்கள். லார்காவைப் பற்றி நெரூடா குறிப்பிடும் போது ''அழகும், மேதைமையும், சிறகு விரித்துப் பறக்கும் உள்ளமும், பளிங்கு நீர் வீழ்ச்சியும் அவன் படைப்பில் ஒன்றாகக் கலந்து வரும். கவர்ச்சியூட்டும் காந்த இன்பத்தைத் தன்னைச் சூழ்ந்திருப்பவர் மீது பரப்பும் கவிதா மண்டலமாக அவன் விளங்கினான். நாடக மேடையாக இருந்தாலும் அழகின் அலை வீச்சுக் களைத் தன்னைச் சுற்றிப்படரவிட்டான். லார்காவைப் போல் ஆற்றல் மிக்க மந்திரக் கையோடு கூடிய வேறொரு கவிஞனை நான் என் வாழ்நாளில் சந்தித்ததில்லை. சிரிப்பை மனப்பூர்வமாக நேசித்து என்னுடன் பழகிய வேறொரு சோதரனையும் நான் கண்டதில்லை. அவன் சிரித்தான்; சிந்தித்தான்; பாடினான்; பியானோ வாசித் தான்; இடையிடையே சுடர்விட்டு மின்னினான். இயற்கை தனது பூரணமான ஆற்றல்களையெல்லாம் அவன் மீது அள்ளிச் சொரிந்திருந்தது. அவன் தங்கச் சிற்பி; கவிதைத் தேனீ'' என்றெல்லாம் பாராட்டிக் கூறுகிறார்.

அரசியல் விரோதிகளால் லார்கா அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதை அறிந்து அதிர்ச்சியுற்றார் நெரூடா. லார்காமீது நீண்ட இரங்கற்பா ஒன்று (Oda a Federico Garcia Lorca) எழுதித் தமது ஆழ்ந்த துயரத்தை அதில் கொட்டி வைத்தார். லார்கா இறந்த ஓராண்டுக்குப் பிறகு, நெரூடா அவரைப் பற்றி ஒரு நினைவுச் சொற்பொழிவாற்றினார். அக்கூட்டத்தில் இருந்த ஒருவன் எழுந்து நின்று ''லார்காவைப் பற்றி நீங்கள் எழுதியுள்ள இரங்கற்பாடலில் 'அவனுக்காக மக்கள் மருத்துவமனைக்கு நீலவண்ணம் பூசினர்' என்று

எழுதியிருக்கின்றீரே! அதன் பொருளென்ன?'' என்று கேட்டான்.

உடனே நெருடா, நண்பரே! ஒரு பெண்ணிடம் வயதைக் கேட்பதும், ஒரு கவிஞனிடம் இதுபோன்ற கேள்விகள் கேட்பதும் ஒன்றுதான். கவிதையென்பது ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் பொருளன்று. அது சுழித்து ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டம்; அது சில சமயம் படைப்பாளியின் கையிலிருந்தும் நழுவிச் சென்று விடுவதுண்டு. கவிஞன் கையாளும் மூலப்பொருள் உண்மைப் பொருளாகவும் இருக்கலாம்; இன்மைப் பொருளாகவும் இருக்கலாம். எப்படியிருப்பினும் உங்களுக்கு ஒரு நியாயமான பதிலைச் சொல்ல நான் முயற்சி செய்கிறேன். சுதந்தரத்தையும் பேரின்பத் தையும் நோக்கிவிரிந்து செல்லும் வானவெளியை இக் குறிப்புச் சுட்டுகிறது. லார்கா எந்த இடத்தில் தோன்றினாலும் அவனைச் சுற்றியொரு மந்திரக் கவர்ச்சியும், மகிழ்ச்சிச் சூழ்நிலையும் பரவுவது வழக்கம். எப்போதும் சோகமான சூழ்நிலையில் அமைந் திருக்கும் மருத்துவ மனைகள் கூட, மகிழ்ச்சியூட்டும் அவன் கவிதையின் மந்திரக் கவர்ச்சியால் மாறிப் பளிச் சென்று நீலவண்ணம் பெறுகின்றன - என்று வேண்டு மானால் நீங்கள் பொருள் செய்துகொள்ளலாம்'' என்று பதில் கூறினார்.

லார்கா

நான் —
கொலை செய்யப்பட்டதை
உணர்ந்தேன்

அவர்கள் . . .
உணவு விடுதிகளிலும்
இடுகாடுகளிலும்
தேவாலயங்களிலும்
என்னைத் தேடினர்.

என்—
தங்கப் பற்களைக்
கவர்ந்து செல்வதற்காக
மூன்று எலும்புக் கூடுகளைப்
புதை குழிகளிருந்து
தோண்டிப் பார்த்தனர்.

அவர்களால்—
என்னைக் கண்டுபிடிக்க
முடிய வில்லை.

ஃபெடெரிகோ கார்சியா லார்கா, தான் இறப்பதற்கு முன்பாகவே, தன் இறப்பைப் பற்றிப் பாடி வைத்த பாடல் இது. அவன் பாடிவைத்தபடி, அவன் இறப்பும் இயல் பானதாக இல்லை; கொலை செய்யப்பட் டான். கொலை செய்யப்பட்ட பிறகு அவன் உடம்பைப் பற்றிய தடயம் எதுவும் கிடைக்கவில்லை.

ஸ்பெயினில் உள்நாட்டுப்போர் நடந்துகொண்டிருந்த நேரத்தில், அரசியல் காரணங்களுக்காக இவன் கொல்லப் பட்டான் என்று கூறுவர். பாரதியைப்போல், பாரதிதாசனைப்போல், ஜெர்மானியக் கவிஞன் பிரெட் (Bertolt Brecht) டைப்போல் இவன் தீவிர அரசியல்வாதி அல்லன். எந்தக் கட்சிமுத்திரையும் இவன் மீது விழவில்லை; எந்தக் கொடிக்கம்பத்தின் கீழும் இவன் கொள்கை முழக்கம் செய்தது கிடையாது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஸ்பெயின் தீபகர்ப்பத்தில் வேர்விட்டுச் செழித்த கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக விளங்கிய மாகவிஞன் இவன்.

லார்காவின் பரிதாபச்சாவு உலக மக்களின் உள்ளத்தில் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியதோடு, லார்காவுக்கும் அளவு கடந்த விளம்பரத்தையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. அமெரிக்க நாடுகளிலும், இங்கிலாந்திலும் இவன் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டு, எல்லா மக்களாலும் விரும்பிப் படிக்கப்பட்டன.

''என் தந்தை ஒரு பணக்கார நிலக்கிழார்; குதிரைச் சவாரியில் வல்லவர். என் தாய் ஓர் ஆசிரியை; குறிப் பிடத்தக்க ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவர். என் இளமைவாழ்க்கை செழிப்பான எங்கள் தோட்டத்திலேயே கழிந்தது''. என்று தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறான் லார்கா.

லார்கா சிறந்த கவிஞன்; சிறந்த ஓவியன்; நாடகத் துறையில் பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவன்; ஸ்பெயின் நாட்டு மரபிசையிலும், நாட்டுப்புற இசையிலும் வல்லவன்.

இளமையில் நோய் வாய்ப்பட்டதால், ஆங்கிலக் கவிஞன் பைரனைப் போல, இவனுக்கும் காலில் சிறிது ஊனம் உண்டு. ஆனால், அந்தக் கால் ஊனமே இவன் அறிவு வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. இளமையில் மற்ற குழந்தைகளோடு ஓடியாடி விளையாட முடியாத லார்கா, உட்கார்ந்த இடத்திலே அமைதியாகச் சிந்தித்துத் தன் சிந்தனை ஆற்றலைக் கூர்மைப்படுத்திக் கொண்டான்; சுற்றுப்புறத்தை நுட்ப மாகக் கவனித்தான். வீட்டையே நாடக மேடையாக்கி, தன் உடன் பிறந்தவர்களையும், வேலைக்காரர்களையும் நடிக்கவைத்தான். தன் முதல் சேமிப்பிலிருந்து பொம்மை நாடக அரங்கம் (Toy Theatre) ஒன்று கிரானடா நகரில் இருந்து வாங்கி வந்தான். பொம்மலாட்டத்திலும் அவனுக்கு ஈடுபாடு இருந்தது.

ஷெல்லியைப் போல லார்காவும் பல்கலைக் கழகப் பட்டம் ஏதும் பெறவில்லை; பெற வேண்டும் என்ற நாட்டமும் இல்லை. பள்ளிப் படிப்பு அவன் சொந்த ஊரான ஃப்யூண்டிவ கொரசிலும், கிரானடா நகரிலும் ஒழுங்காக முற்றுப்பெற்றது. பட்டப்படிப்புக்காக கிரானடா பல்கலைக் கழகத்திலும், மாட்ரிட் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்தான். ஆனால் அவன் கவனம் கல்லூரிப் பாடத் திட்டத்துக்கு வெளியே இருந்தது. கிரானடா நகரப் புல்வெளிகளில் கற்பனையில் மிதந்தபடி காலார நடப் பதும், நாட்டுப்புற நாகரிகத்தில் தோய்ந்து தன்னை மறந்து திரிவதும், பழமையான ஆண்டலூசிய நாகரிகத் தின் அடிப்படை மரபுகளையும், பண்பாடுகளையும் நேரில் பார்த்துப் பரவசப்படுவதும், நாடோடி (Gipsies) மக்க ளோடு நெருங்கிப் பழகி, போதையூட்டும் அவர்கள் சுவைப் பாட்டைக் கேட்டுச் சொக்கி நிற்பதும் அவன் அன்றாடப் பொழுது போக்குகள்.

ஸ்பெயின் நாட்டுக் கலை, இலக்கியக் கேந்திரமாக விளங்கிய 'ரெஸிடென்சியா' வில் தங்கிப் பயிலும் வாய்ப்பு லார்காவுக்கு ஏற்பட்டது. கல்வியில் அக்கறை காட்டா விட்டாலும், ஸ்பெயின் நாட்டுப் புகழ்பெற்ற இலக்கிய மேதைகளான உனாமுனோ, கஸ்ஸட் ஆகியோரின் பழக்க மும், சிறந்த சர்ரியலிசக் கவிஞரான சால்வடார் டாலியின் நெருங்கிய நட்பும் இவனுக்குக் கிடைத்தது. உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களான பெர்க்ஸன், வேலரி, கிளாடல், அரகான், செஸ்டர்டன், கீன்ஸ், எச். ஜி. வெல்ஸ் ஆகியோர் ரெஸிடென்சியாவுக்கு வந்து சொற்பொழிவாற்றினர். மேலே குறிப்பிடப்பட்ட மேதைகளின் தொடர்பால் இவன் கவிதையாற்றல் கூர்மை பெற்றது. ரெஸிடென்சியாவில் தங்கிருந்தபோது லார்கா கடுமையாக உழைத்தான்; நிறைய நாடகங்கள் எழுதி மேடையேற்றினான்; கவிதை களாக எழுதிக் குவித்தான். அவற்றைத் திருத்தித் திருத்தி மேலும் மேலும் அழகுபடுத்தினான்; ஓவியங்கள் வரைந்தான்; பாடல்கள் எழுதிப் பியானோவில் இசை யமைத்தான். நாட்டுப் பாடல்களைத் திரட்டினான். தனது படைப்புக்களை மேடையில் படித்துக் காண்பித் தான். ரெஸிடென்சியால் மாணவனாக இருந்த காலத் திலேயே ஸ்பானிய இலக்கியவாதிகளால் லார்கா கவிஞன் என்று அங்கீகரிக்கப்பட்டான்.

லார்கா இளமையில் ஓயாமல் படிக்கும் பழக்கமுடையவன். ஸ்பெயின் நாட்டு இலக்கியங்களோடு கிரேக்க நாடகங் களின் மொழிபெயர்ப்புகளையும், ஷேக்ஸ்பியர், இப்ஸன், விக்தர் ஹ்யூகோ, மேடர்லிங்க் ஆகியோரின் நூல்களையும் விரும்பிப் படித்தான். ஸ்பெயின் நாட்டுக் கவிஞர்களும், ஓவியர்களும், சிற்பிகளும், இசைவாணர்களும் இவனை எப்போதும் சூழ்ந்திருந்தனர்.

மாட்ரிட் நகரில் ரெஸிடென்சியாவின் மாணவனாக இருந்தபோது, இவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பராக வாய்த்தவர் மேனுவல் டிஃபல்லா என்பவர். அவருடைய நட்பு லார்காவின் இலக்கியப் பாதையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஸ்பானிய நாட்டுக் கிராமியப் பாடல்களைத் (Folk Songs) திரட்டுவதற்கு லார்காவுக்கு ஊக்கமளித்துத் துணைபுரிந்தவர் டிஃபல்லா. அவர் துணையோடு லார்கா கேண்டே ஜாண்டோ (Cante Jando) என்ற இசை விழாவை நடத்தினான். 'ஆழ்ந்த இசை' என்பது இதன் பொருள். இவ்விழாவை முன்னின்று நடத்தியதால் ஸ்பெயின்நாட்டு நாடோடிப் பாடகர்களும், நாட்டியக்காரர்களும் இவனுக்கு மிகவும் வேண்டியவர்கள் ஆகிவிட்டனர்.

முதல் உலகப்போர் முடிந்த பிறகு, ஐரோப்பிய நாடுகளிலிருந்து கிளம்பிய ◇ஃப்யூசரிசம், டாடாயிசம் என்ற புரட்சி அலைகள் ரெஸிடென்சியாவில் இருந்த ஸ்பானிய இலக்கியவாதிகளிடத்திலும் பாதிப்புகளை உண்டாக்கின. ஆனால் லார்கா எந்த இலக்கியக் கட்சியிலும் ஈடுபாடு காட்டவில்லை. மரபிலும், புதுமையிலும் காணப்பட்ட நல்ல அம்சங்கள் யாவும், அவனையும் அறியாமல் லார்காவின் படைப்புகளில் இடம் பெற்றன. லார்கா புதுக்கவிஞனாகவும் (Modern Poet) அதே சமயத்தில் மரபோடு கூடிய கிராமியப் பாடல் பாடும் கவிஞனாகவும் (Folk Poet) விளங்கியது வியப்பிற்குரியது.

இளமையில் நாட்டுப்புறத்தில் வளர்ந்த காரணத்தால் நாட்டுப்புறச் சூழ்நிலையும், நாட்டுப்புறக் கலை இலக்கியங்களும் லார்காவுக்கு மிகவும் பிடித்தமானவை ஆகிவிட்டன. சரியாகப் பேசிப்பழகாத குழந்தைப்

◇ Futurism, Dadaism

பருவத்திலேயே நாட்டுப் பாடல் மெட்டுகளை அவன் முணு முணுப்பது வழக்கம். தங்களுடைய தோட்டத்தில் பணிபுரிந்த வேலைக்காரர்களிடம் பழமையான ஆண்டலூசியக் கிராமியப் பாடல்களையும் (Folk Songs) கதைப் பாடல்களயும் (Ballads) கேட்டுக் கேட்டு லார்கா மனப் பாடம் செய்திருந்தான். இளமையில் அவன் குருதி யோட்டத்தில் ஊறிப்போயிருந்த நாட்டுப்புறக் கலை, அவன் எதிர்காலப் படைப்புக்களில் புதிய அழகோடு பூத்துக் குலுங்கியது.

ஆண்டலூசியக் கிராமியப் பாடல் லார்காவின் உள்ளத்தில் குளித்து, எவ்வாறு புதுவடிவம் பெறுகிறது என்பதை டோர்ரே என்ற அறிஞன் குறிப்பிடும்போது, ''லார்கா அவற்றை இசையோடு பாடுகிறான்; அவற்றைக் கனவு காண்கிறான்; அவற்றை ஆய்வு செய்கிறான். குறிப்பாகச் சொன்னால் கற்பனை அழகோடு கூடிய கவிதைகளாக அவற்றை மாற்றுகிறான்'' என்று கூறுகிறார். எடுத்துக்காட்டுக்கு ஒன்றைக் குறிப்பிடலாம்.

ஒருமுறை உல்லாசப் பயணத்தின் போது, கோவேறு கழுதையை ஓட்டிச் சென்ற ஒருவன் பாடிய கிராமியப் பாடல் வரிகள் லார்காவின் காதில் விழுந்து உள்ளத்தில் பதிவாகி விட்டன.

அவளை ..
ஒரு கன்னிப் பெண்ணென்று நினைத்து
ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றேன்
ஆனால் —
அவளுக்கு ஒரு கணவன் இருந்தது
பிறகுதான் தெரிந்தது

வழியில் கேட்ட இந்த வரிகள், பின்னர் Faithless wife என்ற புகழ்பெற்ற கதைப் பாட்டாகப் புத்துயிர் பெற்றது.

அன்று —
புனித ஜேம்ஸ் இரவு!
மக்கள்
தமது கடமைகளில்
மூழ்கி இருந்தனர்
தெருவிளக்குகள் அணைந்ததும்
சிள்வண்டுகள்
திடீரென்று ஆரவாரித்தன
தெருக்கோடியில்
அவளுடைய
தூங்கும் மார்புகளைத் தொட்டேன்.
அவை —
கூரிய ஹியாசிந்த்
மொட்டுக்களைப் போல்
என்னை
எட்டிப் பார்த்தன.

அவள் —
ரவிக்கைக் கஞ்சியின்
மொர மொரப்பு,
பட்டுத் துணியைப்
பத்துக் கத்திகளால்
குத்திக் கிழிப்பதுபோல்
ஓசையிட்டது.

வெளிச்சமற்ற
மரங்களின் உச்சி

ஹியாசிந்த் — ஸ்பெயினில் பூக்கும் செந்நீல மலர்.

எங்கும் பரந்திருந்தது.
ஆற்றுக்கு வெகுதூரத்தில்
நாய்கள் குரைத்தன.

கரிய பெர்ரி மரங்களையும்
நாணல் புதர்களையும்
ஆதார்ன் முட்செடிகளையும்
கடந்து சென்று
அவள் கூந்தல் கற்றைகள் படிய
மணலில் பள்ளம் தோண்டினேன்.

நான் என்
கழுத்துப் பட்டையை உருவினேன்.
அவள் தன் —
ஆடையைக் களைந்தாள்.
கைத் துப்பாக்கியோடு கூடிய
கச்சையை நான் அவிழ்த்தேன்.
அவள் தன் —
நான்கு உள்ளாடைகளையும்
உதறினாள்.

குழல் ரோஜாப்பூக்களும்
சிப்பிகளும் கூட
அவள் மேனியின்
பளபளப்புக்குத் தோற்றுவிடும்.
என் கைபட்டதும்
துள்ளும் மீன்களாக
அவள் தொடைகள்
நழுவி விழுந்தன.
அவற்றுள் —
ஒரு பாதி தணல்!
ஒரு பாதி பனி!

அந்த மோன இரவில்
அழகிய ராஜபாட்டையில்
கம்பீரமான
வெண்புரவியை ஆரோகணித்துக்
கடிவாளம் இல்லாமல்
காலிடுக்கி இல்லாமல்
இன்பச் சவாரி செய்தேன்.

அன்று —
அவள்
சொன்ன வார்த்தைகளை
ஆண்மகனாகிய என்னால்
திருப்பிச் சொல்ல முடியாது.
அவள் பேச்சைக் கேட்டு
விழிப் படைந்தேன்.
முத்தங்களாலும்,
மணலாலும்,
கறைபட்டிருந்த நான்
ஆற்றங் கரையைவிட்டுப்
புறப்பட்டேன்.
கத்திமுனைப் பூக்கள்
காற்றோடு போரிட்டன.

நான் ஒரு —
நாடோடிக் கனவானாகப்
பெருமிதத் தோடு
நடந்து கொண்டேன்.
பூவேலைப் பாட்டுடன் கூடிய
பெரிய கூடையில்
வைக்கோல் வண்ணப்
பட்டுத் துணிகளை

அவளுக்கு
வாரி வழங்கினேன்.
ஆனால் —
நான் அவளைக்
காதலிக்க முடியாது.

அவளை . . .
ஒரு கன்னிப் பெண்ணென்று நினைத்து
ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றேன்.
ஆனால் —
அவளுக்கு ஒரு கணவன் இருந்தது
பிறகுதான் தெரிந்தது.

லார்காவின் கதைப் பாடல்களைப் படிப்பதும் அந்தக் கதை நிகழ்ச்சிகளை அனுபவிப்பதும் ஒன்றுதான். தனது கதைப் பாடல்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''என் கதைப் பாடல்களின் கருப்பொருள் (theme) புதியது; ஆனால் அதற்குரிய தூண்டுதலைப் பழைய கிராமியப் பாடல்களிலிருந்து பெறுகிறேன்'' என்று லார்கா குறிப்பிடுகிறான். இக்கருத்தைச் 'சிறுவெளியின் கதைப் பாட்டு (Ballad of The Little Square) என்ற கவிதையில் அவனே தெளிவுபடுத்துகிறான். அது கேள்வி பதிலாக அமைந்த கதைப் பாடல்.

குழந்தைகள் : தெளிந்து
அமைதியாக நடக்கும்
அமுத ஊற்றே!
இந்த முற்றத்தில்
எங் களைப்
பாட விட்டுவிட்டு
எங்கோ செல்கிறாய்!
உன் வசந்தக் கைளில்
என்ன கொண்டுசெல்கிறாய்?

நான் : ரத்தச் சிவப்பு ரோஜாவும்
வெள்ளைக் குமுதமும் !

குழந்தைகள் : தெளிந்த ஊற்றே !
திரியும் அருவியே !
அந்த மலர்களைப்
பழமையான நமது
பாட்டு நீரில் நனைத்துஎடு !
வேட்கையூறும் உன் செவ்வாயில்
என்ன சுவையை
நீ உணர்கிறாய் ?

நான் : என் பெரிய மண்டையோட்டின்
எலும்புச் சுவையை !

குழந்தைகள் : தெளிந்து
அமைதியாக நடக்கும்
அமுத ஊற்றே !
நமது
பழம்புகழ்ப் பாட்டுநீரைப்
பருகிச் செல் ;
இந்த முற்றத்திலிருந்து
நீயேன்
நெடுந்தூரம் செல்கிறாய் ?

நான் : மந்திரவாதிகளையும்
இளவரசிகளையும்
தேடிச் செல்கிறேன்.

குழந்தைகள் : கவிஞர்களின் பாதையை
உனக்குக் காட்டியது யார் ?

நான் : நமது மூதாதையரின்
பாட்டருவியும்
பளிங்கு நீரோடையும்.

ரத்தச்சிவப்பு ரோஜாவும் வெள்ளைக்குமுதமும் லார்காவின் புதிய படைப்புக்களுக்கும், பாட்டருவி பழமையான ஆண்டலூசியக் கிராமியப் பாடல்களுக்கும் குறியீடுகள்.

ஊர்பேர் தெரியாத நாட்டுப்புறக் கவிஞர்களின் கவிதை யாற்றலை லார்கா பெரிதும் வியந்து போற்றுகிறான். ஓரிரண்டு வரிகளில் மனிதவாழ்வின் உணர்ச்சி மயமான கணங்களை அபூர்வமாகச் சித்தரிக்கும் அவர்கள் பேராற்றலை நினைந்து நினைந்து மகிழ்ச்சியில் திளைப்பது அவன் வழக்கம்.

நிலவு —
வேலிக்குள்
அடைக்கப்பட்டது.
என் காதலும்
மடிந்தது.

இந்த நாட்டுப் பாடல் வரிகளைப் படித்த லார்கா, ''நாட்டுப்புற மக்கள் விரும்பிப் பாடும் இந்த இரண்டு வரிகளில் புதைந்து கிடக்கும் சுவையான புதிர், மிக எளிமையானது ; சுவையானது ; தூய்மையானது. இந்தப் புதிர்ச்சுவை புகழ்பெற்ற மேட்டர்லிங்க் நாடகத்திலும் கிடையாது,'' என்று வியந்து பாராட்டுகிறான். உண்மைதான் ! இவ்விரண்டு வரிகளில் தோன்றும் மின்னல் வெட்டு, கொடிக் கொடியாகவன்றோ படிப்பவர் உள்ளத்தில் படர்ந்து பரவசமூட்டுகிறது.

லார்கா தனக்குத்தேவையான மூலப் பொருள்களையும், உணர்வுகளையும் பழைய கிராமியப் பாடல்களில் இருந்து பெற்றாலும், இருபதாம் நூற்றாண்டுப் புதிய சிந்தனை களும் (Modern Thoughts) கவிதை நுட்பங்களும் அவன் படைப்பில் மலிந்து காணப்படுகின்றன. பழைய மரபின்

அடிப்படையில் நீரூற்றைப் பற்றிப் பாடிய லார்கா கடலைப் பற்றிப் பாடும்போது

கடல் —
தொலைவிலிருந்து
சிரிக்கிறது ;
தன்னுடைய
நுரைப் பற்களைக் காட்டி
வான் உதடுகளை
விரித்துச் சிரிக்கிறது —

என்று குறிப்பிடுகிறான். லார்கா இதில் கையாண்டிருக்கும் தண்ணீர்ப் படிமம் (water imagery) மிகப் புதுமையாக அமைந்து படிப்பவரை வியக்க வைக்கிறது.

மக்களுக்கு இயற்கைப் பொருள்களின் பண்புகளையும், இயற்கைப் பொருள்களுக்கு மக்களின் பண்புகளையும் ஏற்றிப் பாடும் இவரது தற்குறிப்பேற்றக் கற்பனைப் புனைவுகள் மிகவும் சுவையானவை. காய்ந்த இலைச் சருகுகள் ஓசையிடுவதை ‘இறக்கும் இலைகள் அழுகின்றன’ என்று குறிப்பிடும்போதும், மிக உயரமான பாப்ளார்மரம் காற்றடித்து வானில் அசைவதை ‘தனது நூறடிக்கையால் (centenarian hand) பாப்ளார் மரம் நிலவை அடிக்கிறது’ என்று குறிப்பிடும்போதும், கலங்காத மனநிலையோடு வாழ விரும்பும் தனது விருப்பத்தை ‘வேர்களைப் பூமியின் ஆழத்திற்குச் செலுத்தி, எந்தப் புயலுக்கும் அசையாமல் வீறுகொண்டு தனித்து நிற்கும் ஓக் மரமாகக்’ குறிப்பிடும் போதும், அவன் கற்பனை ஆற்றல் சுவைத்து மகிழக் கூடியதாக உள்ளது.

லார்காவைப் பெரிய மேதை என்று கூறமுடியாது. அவன் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பியக் கவிஞர் பலர், பெரும் மேதைகளாக இருந்திருக்கிறார்கள். ஆனால்

லார்கா கவிதைத் துறையில் நுட்பமான வேலைப்பாடுகள் தெரிந்த சிற்பி. பிறவியிலேயே ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்ற கொள்கையிலும், உள்ளக் கிளர்ச்சிக் கவிதைக் கொள்கையிலும் (Inspiration and spontaneity) லார்காவுக்கு ஈடுபாடு கிடையாது. உள்ளக் கிளர்ச்சி ஒரு கவிஞனுக்கு படிமம் (Image) என்ற மூலப் பொருளை (Raw Materials) மட்டுமே வழங்கும். உள்ளக் கிளர்ச்சியோடு முறைப்பட்ட ஆழ்ந்த சிந்தனையும், நுட்பமான கலையுணர்வும் சேரும்போதுதான், சிறந்த கவிதை தோன்ற முடியும் என்று லார்கா கருதினான்.

'' ஆண்டவன் அருளினாலோ சாத்தானின் அருளினாலோ நான் கவிஞனாக இருப்பது உண்மையென்றால், என் சொந்த முயற்சியாலும், என் நுட்பமான ஆற்றலினாலும் நான் கவிஞனாக இருப்பதும் உண்மைதான்'' என்று லார்கா ஒருமுறை தன் சொற்பொழிவில் குறிப்பிடுகிறான். பிரெஞ்சுக் கவிஞராகிய போதலேர் இத்துன்ப உலகின் பிடியிலிருந்து விடுபட்டுத் தன் ஆன்மாவைப் பரவசப் படுத்துவதற்காக ஒரு செயற்கைச் சொர்க்கத்தைத் தன்னுள் படைத்துக் கொண்டு வாழ்ந்தது போல் லார்காவும் ஒரு செயற்கைச் சொர்க்கத்தைத் தன் மனதில் படைத்துக்கொண்டான். அதில் படிந்து தன் ஆன்மாவைப் பரவசப்படுத்திக் கொண்டான்.

விருப்பம் (Longing) என்ற பாடலில் அந்தச் சொர்க்கத்தைப் பற்றி லார்காவே பாடுகிறான். துன்பம் சூழும்போது, அதனின்றும் விடுபட்டுச் செயற்கைச் சொர்க்கத்தில் திளைக்க முடியாமல் வருந்தும்போது, தன்னைவிடத் தாழ்ந்த உயிரினங்களிடம் அத்தகைய உள்ளம் இருப்பதைப் பார்த்துப் பொறாமைப் படவும் செய்கிறான். வெளிச் சத்தைப் பருகிய வண்ணம் சிள்வண்டு (Cicada) உயிர் விடுவதையும், எறும்புகள் தன் உடலை அரித்துத் தின்று

கொண்டிருக்கும் நேரத்திலும், கிழட்டு ஓணான் விண்மீன்களின் அழகை வியப்போடு அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதையும் தன் பாடலில் குறிப்பிடும்போது, அந்தப் பொறாமை தலைதூக்கி நிற்கிறது. செயற்கைச் சொர்க்கத்தில் அடிக்கடி திளைத்திருந்தாலும், சாவைப் பற்றிய எண்ணமும் அவன் உள்ளத்தில் அடிக்கடி எழாமல் இல்லை. ''இரவு கட்டாயம் வரும்; மனிதனின் விருப்பு வெறுப்புகளைச் சாவின் அமைதி செயலற்றதாக்கிவிடும்'' என்று குறிப்பிடுகிறான்.

கவிஞர்களுக்குச் சில விநோதமான மன நிலைகள் சில நேரங்களில் ஏற்படுவதுண்டு. அந்த நேரங்களில் அவர்கள் சிந்தனைப் போக்கும் செயலும், மற்றவர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாதபடி அமைந்திருக்கும். சிலசமயம் அவர்கள் சிந்தனையில் குறும்புத்தனமும் இருப்பதுண்டு. இத்தகைய சிந்தனைப் போக்குகளை லார்காவிடம் நிறையக் காணலாம். 'ஊமைக் குழந்தை' (The Dumb Child) என்ற பாடல்:

அந்தக் குழந்தை
தனது குரலைத்
தேடிக் கொண்டிருக்கிறது.
(சிள்வண்டுகளின் அரசன்
அதை வைத்துக்கொண்டிருந்தான்.)

ஒரு நீர்த்துளியில்
தனது குரலை
அந்தக் குழந்தை
தேடிக் கொண்டிருந்தது.

நான் —
அந்தக் குரலால்
பேச விரும்பவில்லை.

அதை
நான் ஒரு
மோதிரமாகச் செய்வேன்,
என் மௌனம்
தனது பிஞ்சுவிரலில்
அதை அணிந்து கொள்வதற்காக . . .

அந்தக் குழந்தை
ஒரு நீர்த் துளியில்
தனது குரலைத்
தேடிக் கொண்டிருந்தது.

(சிறைப்பட்ட
அந்தக் குரல்
சிறிது தொலைவில்
சிள்வண்டுப் போர்வைக்குள்
ஒளிந்து கொண்டிருந்தது.)

ஊமைக் குழந்தையால் பேச முடியாது. அது தன் குரலைத் தொலைத்துவிட்டுத் தேடித் திரிவதாகவும், சிள்வண்டு அதை எடுத்து ஒளித்துவைத்துக் கொள்வதாகவும் பாடும் லார்காவின் கற்பனையில் பாதிக்கனவும், பாதிக்குறும்புத் தனமும் தென்படுகின்றன. கனவு காண்பது போல், இந்த இனிய கற்பனை இருந்தாலும், அதனால் புலப் படுத்தப்படும் பரிதாபமான உண்மை (குழந்தையின் ஊமைத்தனம்) நம் உள்ளத்தைத் துளைக்கிறது.

இத்தகைய கனவுநிலைப் பாடல்களை லார்கா ஏன் பாடினான் என்று சில சமயங்களில் படிப்பவர்கள் விழிப்பதுண்டு. அதைப்படிக்கும் போது, நாமும் ஏதோ ஓர் இனம்புரியாத கனவு மயக்கத்தில் இருப்பது போலத் தான் தோன்றும். 'கிரானடாவும் 1850-ம்' (Granada and 1850) என்ற பாடலைப் படிக்கும்போது அத்தகைய மயக்கத்தை நம்மையறியாமல் பெறுகிறோம்.

என் அறைக்குள்ளிருந்து
ஓர் ஊற்று
கிளம்பி வருவதை
உணர்கிறேன்.

ஒரு —
திராட்சைத்
தளிர்க்கொடியும்
சூரியனின்
ஒளிக்கற்றையும்
தெரிகின்றன.

அவை —
என் இதயத்தின்
இருப்பிடத்தைச்
சுட்டிக் காட்டுகின்றன.

ஆகஸ்ட் மாதக்காற்றில்
மேகங்கள்
கலைந்தோடுகின்றன.
அந்த நீர் ஊற்றில்
நான்—
கனவு காணாததுபோல்
கனவு காண்கிறேன்.

லார்காவின் இளமைப் பாடல்களில் காணப்பட்ட தற்காதல் கூறுபாடுகள் (Narcissistic elements), பிற்காலத்தில் எழுதிய பாடல்களில் இல்லாதொழிந்தன. அவனுடைய அனுபவ முதிர்ச்சி அவனைத் தற்சோதனைக்கு ஆளாக்கியது. 'பயனுள்ள வாழ்க்கை வாழ்பவன்தான் மனிதன்' என்பதை அவன் உணர்ச்சிப் பூர்வமாக அறிகிறான். பயனற்ற நிலையில் இருக்கும்போது, தன்னைக் காணத் தானே கூசுகிறான். இக்கருத்தைப் 'பட்டுப் போன

ஆரஞ்சு மரம்' (Song of the withered Orange-tree) என்ற பாட்டில் தெளிவாகப் பிரதிபலிக்கிறான்.

கோடாலிக்காரா !
என்—
நிழலைக் கூட
வெட்டி எறிந்துவிடு.
பயனற்று நிற்கும்
பரிதாப நிலையிலிருந்து
எனக்கு விடுதலை கொடு.

நிலைக் கண்ணாடிகள்
என்னைச் சுற்றியிருக்க
நான்—
ஏன் பிறந்தேன் ?

பகல்—
என்னைச்
சுற்றி சுற்றி
வருகிறது.

இரவோ —
ஒவ்வொரு
விண்மீனிலும்
என் பிம்பத்தைப்
பிரதி பலித்துக்
காட்டுகிறது.

என்னையே நான்
காணமுடியாத
வாழ்க்கை
எனக்கு வேண்டும்.

எறும்புகளையும்
பருந்துகளையும்
என் —
இலைகளாகவும்
பறவைகளாகவும்
கனவு காண்கிறேன்.

கோடாலிக்காரா !
என் —
நிழலைக் கூட
வெட்டி எறிந்துவிடு.
பயனற்று நிற்கும்
பரிதாப நிலையிலிருந்து
எனக்கு விடுதலை கொடு.

பயனற்ற நிலையில் இருக்கும் படைப்பிலக்கியவாதியின் பரிதவிப்பை, லார்கா இப்பாட்டில் உணர்ச்சிகரமாகச் சித்தரிக்கிறான். பூத்துக் காய்த்துக் கனி குலுங்கும் மரத்தில், பறவைகளும், வெளவால்களும் கும்பலாகக் கூடித்தின்று ஆரவாரிக்கும். அம்மரத்தின் செழுமையான வாழ்வுக்கும், உயிரோட்டத்திற்கும் அவை சான்றுகள். ஆனால், பருந்து பழ மரத்தில் உட்காருவதில்லை; அது, பட்டுப்போய்த் தனித்து நிற்கும் ஒற்றை மரத்தின் உச்சியில்தான் உட்காரும். பட்ட மரத்தை எறும்பு அரிக்கும்; பயனற்ற மனிதனை வேதனை அரிக்கும். லார்காவின் ஆழமான கற்பனை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

லார்காவின் தகாத பாலுறவுப் பழக்கம் (Homo Sexual Practise), ஸ்பெயினிலிருந்து வெளியேறி அமெரிக்கா செல்லும் சூழ்நிலையை அவனுக்கு உருவாக்கியது. அவனுடைய பாலுறவுக் கொள்கை, அவன் எழுதிய

ஓரிரு நாடகங்களிலும் பிரதிபலிக்கக் காணலாம். ''ஏவாள், ஆதாம் உடம்பின் ஓர் அங்கம் தானே? அப்படியென்றால் ஆதாமும் ஏவாளும் வேறல்லவே? பின் ஏன் உடலுறவில் ஆண் பெண் என்ற பேதம்?'' என்பது லார்காவின் விசித்திரமான வாதம்!

அமெரிக்காவில் இருந்தபோது, அவன் எழுதிய சர்ரியலிசக் கவிதைகள் 'நியூயார்க்கில் கவிஞர்' (The Poet in New-York) என்ற தலைப்பில், லார்க்காவின் இறப்புக்குப் பிறகு வெளியிடப்பட்டன. இக்கவிதைகள் பிரெஞ்சு சர்ரியலிசக் கவிதைகளினின்றும் மாறுபட்டு, லார்காவின் தனித்தன்மையோடமைந்திருக்கின்றன. இக்கவிதைகளில் உள்ள உணர்ச்சிக் கொந்தளிப்பை (Tension) மற்ற சர்ரியலிசக் கவிதைகளில் காணமுடியாது. இக்கவிதைகள் வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளின்றும் (Solid Reality) விலகாத அடிமனக் காட்சிகளைச் சித்தரிக்கின்றன.

முரட்டுக் காளைகளோடு போரிடும் வீரவிளையாட்டு, ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு. நம் நாட்டில் திரைப்பட நடிகர்களுக்கு இருக்கும் நட்சத்திர அந்தஸ்து (Star Value) அந்த நாட்டுக் காளைப்போர் வீரர்களுக்கு உண்டு. ஸ்பெயின் நாட்டுப் புகழ்பெற்ற காளைப்போர் வீரரும் தனது ஆருயிர் நண்பருமான மெஜியாஸ் காளைப் போரில் இறந்தபோது, லார்கா எழுதிய இரங்கற்பாடல் தான், அவன் படைப்பில் ஒப்பற்றது என்று எல்லாராலும் பாராட்டப்படுகிறது.

அவன் முகத்தைக்
கைக் குட்டையால்
மூடுவதை
நான் —
விரும்ப வில்லை.
கைக்குட்டையை
எடுத்துவிடுங்கள்.

அவன் —
சுமந்து செல்லும் சர்வு
அவனுக்கு
நன்கு
அறிமுகம் ஆகட்டும்.

என்று பாடுகிறான் லார்கா. வீரன் சாவைக் கண்டு அஞ்சி முகத்தை மூடக் கூடாதல்லவா ?

துவளாத துணிச்சலும்
பெருமிதமும் மிக்க
ஓர் —
ஆண்டலூசிய வீரன்
இவனைப் போல் பிறக்க
இன்னும் —
எத்தனையோ
நூற்றாண்டுகள் ஆகலாம்.

அவன் புகழைப் பாடும்
என்னுடைய
ஏக்க வரிகள்
ஆலிவ்
மரங்களின் இடையே
ஒரு —
சோகத் தென்றலாக
வீசட்டும்.

மெஜியாஸுக்கு எழுதப்பட்ட இக் கல்லறை வரிகள் **(epitaph)**, இளமையில் பரிதாபமாகக் கொலை செய்யப் பட்ட லார்காவுக்கும் மிகப் பொருத்தமாக அமைந் திருக்கின்றன.

லார்காவை நேரில் பார்த்துப் பேசிப் பழகிய சமகாலக் கவிஞர்களும், கலைஞர்களும் அவனை வியந்து கூறிய பாராட்டுரைகள் செவிக்கும் சிந்தைக்கும் தேன்விருந்து களாக இனிக்கின்றன.

''லார்கா பேசும்போதும், தனது கவிதையை உணர்ச்சியோடு படித்துக் காட்டும் போதும், தன் நாடகத்திலிருந்து ஒரு காட்சியை நடித்துக் காட்டும் போதும், அல்லது இசைப்பெட்டியின் முன்னமர்ந்து பாடும் போதும் அவனைச்சுற்றி ஒரு காந்தமண்டலம் தோன்றி ரசிகர்களை வசியப்படுத்தி மந்திரத்தால் பிணிக்கும்!'' என்று ரஃபேல் ஆல்பெர்ட் என்ற கவிஞன் குறிப்பிடுகிறான்.

லார்காவைவிட ஏழு ஆண்டுகள் மூத்த கவிஞனான பெட்ரோ நூலினாஸ் ''அவன் எங்களை முன்னின்று நடத்திச் சென்ற பேரானந்தப் பெருவிருந்து; அவனைப் பின்தொடர்ந்து செல்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை,'' என்று உளந்திறந்து பாராட்டுகிறான்.

லார்காவின் நெருங்கிய நண்பரும் கவிஞருமான வின்சென்ட் அலெக்சாந்தர் என்பவர், ஒருமுறை தாம் கண்ட லார்கா தரிசனம் பற்றிக் குறிப்பிடும்போது, ''அமைதியான ஓர் இரவில் அழகான மேல்மாடியில், நிலவின் அமுத கிரணம் தன் முகத்தில் விழ, லார்கா நின்றுகொண்டிருந்தான். அவன் கைகள் வானத்தை நோக்கி உயர்ந்திருந்தன. ஆனால் அவன் பாதங்கள் நூற்றாண்டுகளைக் கடந்து காலத்தை வென்று, ஸ்பானிய மண்ணில் வேரூன்றி இருந்தன'' என்று மெய்மறந்து கூறுகிறார்.

''இதயத்தில் ஈட்டியைப்போல் பாயக்கூடிய கவிதையை இன்னும் நான் எழுதவில்லை'' என்று ஒருமுறை லார்கா தன் நண்பனான கில்லன் என்பவனிடம் கூறினானாம். ஆனால் அக்கூற்று பொய்யானது. அவன் பாடிய கவிதைகளில் பல படிப்பவரின் இதயத்தைத் துளைத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவை. லார்கா படிக்கப்பட வேண்டியவன் அல்லன்; காதலிக்கப்பட வேண்டியவன்.

மீனா புத்தக நிலையம்

ரூ. 15-00